
# 1999 அவ்யக்த முரளி



பொருளடக்கம் -10

**18.01.1999** தற்சமயத்திற்கு ஏற்றபடி வைராக்கிய உள் உணர்வை வெளிப்படுத்தி சாதனையின் வாயுமண்டலத்தை உருவாக்குங்கள்!

**13.02.1999** சிவ அவதாரம் மற்றும் சிக்கனத்தின் அவதாரம்!

**01.03.1999** ஹோலி கொண்டாடுவது என்றால் சம்பூர்ண தூய்மை ஆகி சம்ஸ்காரத்தை இணைக்கும் விழாவை கொண்டாடுவது!

**15.03.1999** கர்மாதீத் நிலை வரை சென்றடைவதற்காக கட்டுப்படுத்தும் சக்தியை அதிகரியுங்கள், சுயராஜ்ய அதிகாரி ஆகுங்கள்!

**30.03.1999** தீவிர முயற்சி செய்வதின் முழு ஈடுபாட்டை ஜுவாலா ரூபம் ஆக்கி எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியத்தின் அலையைப் பரப்புங்கள்!

**23.10.1999** நேரத்தின் அழைப்பு வள்ளல் ஆகுங்கள்!

**15.11.1999** தந்தைக்குச் சமமாக ஆவதற்கான சுலபமான முயற்சி கட்டளைப்படி நடப்பவராக ஆகுங்கள்!

**30.11.1999** மதிப்புடன் தேர்ச்சி பெறுவோர் ஆவதற்காக அனைத்து பொக்கிஷங்களின் கணக்கின் சேமிப்பை நிரம்பியதாக ஆக்குங்கள்!

**15.12.1999** எண்ண சக்தியின் மகத்துவத்தை தெரிந்து, இதை அதிகரியுங்கள் மேலும் நடைமுறை பயன்பாட்டில் கொண்டு வாருங்கள்!

**31.12.1999** புது நூற்றாண்டில் தன்னுடைய நடத்தை மற்றும் முகம் மூலம் ஃபரிஷ்தா சொரூபத்தை வெளிப்படுத்துங்கள்!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

# 18.01.1999 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தற்சமயத்திற்கு ஏற்றபடி வைராக்கிய உள் உணர்வை வெளிப்படுத்தி சாதனையின் வாயுமண்டலத்தை உருவாக்குங்கள்!

இன்று அன்புக்கடல் பாப்தாதா தன்னுடைய மிக அன்பிற்குரிய குழந்தைகளைச் சந்தித்து கொண்டிருக்கிறார்கள். இன்றைய நாள் விசேஷமான அன்பிற்குரிய நாள் ஆகும். அமிர்தவேளையில் தொடங்கி நாலா புறங்களிலுமுள்ள குழந்தைகள் அன்பின் அலைகளில் மிதந்து கொண்டே இருக்கிறார்கள். ஒவ்வொரு குழந்தையின் உள்ளப்பூர்வமான அன்பு உள்ளத்தை கொள்ளை கொண்ட தந்தையிடம் வந்து சேர்ந்து கொண்டிருக்கிறது. பாப்தாதாவும் அனைத்து குழந்தைகளுக்கும் அன்பின் பிரதிபலனாக அன்பு மற்றும் சக்திசாலியான நிலையின் வரதானத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய நாளை பாப்தாதா யக்ஞத்தின் ஸ்தாபனையில் விசேஷமாக மாற்றத்திற்கான நாள் என்று கூறுகிறார்கள். இன்றைய தினம் பிரம்மாபாபா குப்த ரூபத்தில் முதுகெலும்பாகி தன்னுடைய குழந்தைகளை சாகார ரூபத்தில் உலக மேடையில் வெளிப்படுத்தினார். எனவே இன்றைய நாள் குழந்தைகளின் பிரத்யக்ஷத்தின் நாள் என்று கூறப்படுகிறது. சக்திசாலியான நாள் என்று கூறப்படுகிறது. மனோபலம் கொடுப்பதற்கான நாள் என்று கூறப்படுகிறது. பிரம்மாபாபா குப்த ரூபத்தில் காரியத்தை செய்வித்துக் கொண்டிருக்கிறார். அவர் பிரிந்திருக்கவில்லை, உங்களுடன் தான் இருக்கிறார் ஆனால் குப்த ரூபத்தில் மட்டும் காரியத்தை செய்வித்துக் கொண்டிருக்கிறார். இந்த அவ்யக்தமான நாள் குழந்தைகளின் காரியத்தை அதிவேகத்தில் கொண்டு வருவதற்கான நாள். இப்பொழுது கூட ஒவ்வொரு குழந்தையின் குடைநிழலாகி பாலனையின் காரியத்தை செய்து கொண்டிருக்கிறார். எப்படி தாய் குழந்தைகளுக்காக குடைநிழலாக இருப்பாரோ அதேபோன்று அமிர்தவேளையில் தொடங்கி பிரம்மாதாய்

நாலா புறமும் உள்ள குழந்தைகளை மிக கவனமாக பாலனை செய்து கொண்டே இருக்கிறார். இந்த உலகில் பொறுப்பில் குழந்தைகள் இருக்கிறார்கள் ஆனால் பாக்கியத்தைப் உருவாக்கும் பிரம்மாதாய் ஒவ்வொரு குழந்தையின் பாக்கியத்தைப் பார்த்து, குழந்கைளுக்கு விசேஷமாக சக்தி, தைரியம், ஊக்கம் உற்சாகத்தின் வளர்ப்பை வழங்கிக் கொண்டே இருக்கிறார். சிவதந்தையோ உடன் இருக்கவே இருக்கிறார் ஆனால் விசேஷமாக பிரம்மாவின் பாலனையின் பங்கு நடந்து கொண்டிருக்கிறது.

இன்றைய தினம் பாக்கியத்தை உருவாக்கும் பிரம்மா ஒவ்வொரு குழந்தைக்கும் விசேஷமாக அன்பின் பிரதிபலனில் வரதானத்தின் பண்டாரி ஆகி கொடுத்துக் கொண்டே இருக்கிறார். எந்தக் குழந்தை எந்த அளவு அவ்யக்த நிலையில் நிலைத்திருந்து சந்திப்பை செய்கிறாரோ அந்த ஒவ்வொரு குழந்தைக்கும் என்ன வரதானம் வேண்டுமோ அது சுலபமாகவே (பிராப்தி) கிடைத்து விடுகிறது. வரதானங்களின் திறந்த களஞ்சியம் இருக்கிறது. என்ன வேண்டுமோ எவ்வளவு வேண்டுமோ அந்த அளவு கிடைப்பதற்கான உயர்ந்த நாள் ஆகும். அன்பின் பிரதிபலனாக சுலபமாக வரதானம் கிடைக்கும் கிஃப்ட் (பரிசு) இருக்கிறது. அப்படி கிஃப்ட்'ற்காக கடின முயற்சி செய்ய வேண்டியது இருக்காது, சுலபமாக பிராப்தி ஆகிறது. கிஃப்ட் வேண்டுமென்று கேட்க வேண்டியதில்லை, தானாகவே பிராப்தி ஆகும். முயற்சி செய்வதின் மூலம் வரதானத்தின் அனுபவத்தின் பிராப்தி அது வேறாகும் ஆனால் இன்றைய தினம் பிரம்மாதாய் அன்பின் பிரதிபலனாக வரதானம் கொடுக்கிறார், அப்படி இன்றைய தினம் அனைவரும் சகஜ வரதானம் பிராப்தி ஆனதின் அனுபவம் செய்தீர்களா? இப்பொழுது கூட உண்மையான உள்ளத்தின் அன்பின் பலனாக வரதானத்தை பிராப்தி செய்ய முடியும். வரதானம் பிராப்தி செய்வதற்கான வழி உள்ளப்பூர்வமான அன்பு. எங்கு உள்ளப்பூர்வமான அன்பு இருக்கிறதோ, அந்த அன்பு, அந்த மாதிரியான பொக்கிஷம் மூலமாக, பாப்தாதாவிடமிருந்து எந்த அழியாத வரதானத்தை பிராப்தி செய்ய விரும்புகிறீர்களோ அதைச் செய்ய முடியும். அந்த அன்பின் பொக்கிஷம் ஒவ்வொரு குழந்தையிடமும் இருக்கிறதா? அன்பின் பொக்கிஷம் இருக்கிறது, அதனால்தான் வந்து சேர்ந்திருக்கிறீர்கள் இல்லையா? அன்பு உங்களை இழுத்துக் கொண்டு வந்திருக்கிறது. மேலும் அன்பில்

இருப்பது மிக சுலபமாகும். முயற்சி செய்வதின் கடின உழைப்பை செய்ய வேண்டியதாக இருக்காது. ஏனென்றால் அன்பின் அனுபவம் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் இருக்கவே தான் செய்யும். இப்பொழுது பரவிக்கிடந்த அன்பாக இருந்தது. கொஞ்சம் அங்கே கொஞ்சம் இங்கே. அப்படி பரவிக்கிடந்த அன்பை ஒரே ஒருவருடன் இணைத்து விட்டீர்கள். ஏனென்றால் இதற்கு முன்பு தனித்தனியான உறவு இருந்தது, இப்பொழுது ஒருவரிலேயே அனைத்து உறவுகளும் இருக்கின்றன. அப்படி அனைவரின் அன்பு சுலபமாக ஒருவருடன் ஆகி விட்டது. எனவே தான் ஒவ்வொரு குழந்தையும் மேரா பாபா (என்னுடைய பாபா) என்று கூறுகிறார். அப்படி அன்பு எதனோடு ஏற்படுகிறது? என்னுடையது என்பதோடு அனைவரும் மேரா பாபா என்று கூறுகிறீர்கள் தான் இல்லையா, அல்லது தாதிகளின் பாபாவா? மகாரதிகளின் பாபாவா? அனைவரின் பாபா தான் இல்லையா? இன்றைய தினத்தில் ஒவ்வொரு குழந்தையும் எத்தனை தடவைகள் உள்ளப்பூர்வமாக மேரா பாபா, மேரா பாபா என்று கூறினார்கள். அனைவரும் மேரா பாபா, மேரா பாபா என்று கூறி ஆன்மீக உரையாடல் செய்தீர்களல்லவா? முழு நாளும் என்ன செய்தீர்கள் அன்பின் மலர்களை பாப்தாதாவிற்கு அர்ப்பணம் செய்தீர்கள். பாப்தாதாவிடம் மிக நல்ல நல்ல அன்பின் மலர்கள் வந்து சேர்ந்து கொண்டிருந்தன. அன்போ மிக நன்றாக இருந்தது, இப்பொழுது தந்தை கூறுகிறார். அன்பின் சொரூபத்தை நடைமுறையில் வெளிப்படுத்துங்கள். அது தான் சமமாக ஆவது. இப்பொழுது இந்த சமமாக ஆவதின் லட்சியமோ அனைவரிடமும் இருக்கிறது. இப்பொழுது நடைமுறையில் அந்த லட்சணம் தென்பட வேண்டும். எந்தக் குழந்தையைப் பார்த்தாலும், யார் சந்தித்தாலும், உறவு தொடர்பில் வந்தாலும் இவர் பரமாத்மா தந்தை மாதிரி இருக்கிறார், பிரம்மாபாபாவின் குணங்கள் இருக்கின்றன என்று இந்த லட்சணம் குழந்தைகளின் முகம் மற்றும் நடத்தையிலிருந்து தென்பட வேண்டும். இவர்களுடைய கண்கள், இவர்களுடைய பேச்சு, இவர்களுடைய உள்ளுணர்வு மற்றும் எண்ண அலைகள் முற்றிலுமே வேறுபட்டது என்று அனுபவம் செய்ய வேண்டும். மதுபனுக்கு வருகிறீர்கள் என்றால் பிரம்மாபாபாவின் காரியங்கள் ஸ்தூலமாக இங்கே நடந்த காரணத்தினால் பூமியில் தபஸ்யா, செய்த காரியம் மற்றும் தியாகத்தில் எண்ண அலைகள் நிரம்பியிருக்கும் காரணத்தினால் இங்கே இந்த உலகம் முற்றிலும் வேறுபட்டது என்று சுலபமாக

அனுபவம் செய்கிறீர்கள். ஏனென்றால் பிரம்மாபாபா மற்றும் விசேஷ குழந்தைகளின் எண்ண அலைகள் மூலம் வாயுமண்டலம் ஆன்மீகமாக உருவாகியிருக்கிறது. அதே போலவே எந்தக் குழந்தை எங்கே இருந்தாலும், கர்ம சேத்திரம் எதுவாக இருந்தாலும், ஒவ்வொரு குழந்தையிடமிருந்தும் தந்தைக்குச் சமமான குணம், காரியம் மற்றும் உயர்ந்த உள்உணர்வின் வாயுமண்டலம் அனுபவத்தில் வர வேண்டும். இதைத் தான் தந்தைக்குச் சமமாக ஆவது என்று பாப்தாதா கூறுகிறார். இன்று வரையிலும் தந்தைக்குச் சமமாக கண்டிப்பாக ஆக வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது, அந்த எண்ணம் இப்பொழுது முகம் மற்றும் நடத்தை மூலம் தென்பட வேண்டும். யாரெல்லாம் உறவு தொடர்பில் வருகிறார்களோ அவர்களுடைய உள்ளத்திலிருந்து இந்த ஆத்மாக்கள் தந்தைக்குச் சமமானவர்கள் என்ற ஓசை வெளியாக வேண்டும். (இடையிடையே இருமல் வந்தது) இன்று மைக் கெட்டுப் போய் விட்டது, சந்திக்க வேண்டும் தான் இல்லையா? இதுவும் மைக் தான் இல்லையா, இந்த மைக் வேலை செய்யவில்லை என்றால், இந்த மைக்கும் பிரயோஜனம் அற்றது. ஒன்றும் பாதகமில்லை இதுவும் சீதோஷ்ண நிலையின் பாதிப்பாகும்.

பாப்தாதா இப்பொழுது அனைத்து குழந்தைகளிடமிருந்து இந்த பிரத்யக்ஷத்தை விரும்புகிறார். எப்படி வாய்மொழி மூலமாக பிரத்யக்ஷத்தை செய்கிறீர்கள் என்றால் சொல்லும் வார்த்தைகளின் பிரபாவம் ஏற்படுகிறது. அதையும் விட அதிகமான பிரபாவம் குணம் மற்றும் செய்யும் காரியத்தினால் ஏற்படும். ஒவ்வொரு குழந்தைகளின் கண்களிலிருந்தும் இவர்களின் கண்களில் ஏதோ விசேஷம் இருக்கிறது என்று அனுபவம் ஆக வேண்டும். சாதாரணமாக அனுபவம் செய்ய வேண்டாம். ஆன்மீகமாக இருக்கிறீர்கள். அவர்களின் மனதில் இவர் எப்படி ஆனார், எங்கிருந்து ஆனார் என்ற கேள்வி எழ வேண்டும். இப்படி ஆக்குபவர் யார் என்று அவர்களே யோசிக்க வேண்டும் மற்றும் கேட்க வேண்டும். எப்படி இன்றைய காலத்தில் கூட ஏதாவது ஒரு நல்ல பொருளை பார்க்கிறார்கள் என்றால், இதை உருவாக்கியது யார் என்ற கேள்வி மனதில் எழுகிறது. அதே போல் தன்னுடைய தந்தைக்குச் சமமாக ஆகும் நிலை மூலமாக தந்தையை பிரத்யக்ஷம் செய்யுங்கள். இன்றைய நாட்களில் இந்த பௌதீக உலகத்தில் வாழ்ந்து கொண்டே இந்தச் சூழ்நிலையில் இருந்து கொண்டே அந்த மாதிரியும் ஏதாவது

ஆத்மாக்கள் ஆக முடியுமா என்று பெரும்பான்மையான ஆத்மாக்கள் யோசிக்கிறார்கள். எனவே நீங்கள் அவர்களுக்கு ஆக முடியும் மற்றும் நாங்கள் ஆகியிருக்கிறோம் என்று இதை பிரத்யக்ஷமாகக் காண்பியுங்கள். இன்றைய நாட்களில் வெளிப்படையான ஒரு எடுத்துக்காட்டை அதிகமாக நம்புகிறார்கள். கேட்பதை விட அதிகமாக கண்கூடாகப் பார்க்க விரும்புகிறார்கள் என்றால், உலகில் நாலா புறங்களிலும் எத்தனை குழந்தைகள் இருக்கிறார்கள். ஒவ்வொரு குழந்தையும் தந்தைக்குச் சமமான வெளிப்படையான எடுத்துக்காட்டாக ஆகி விட்டார் என்றால் தெரிந்து கொள்வதிலும் ஏற்றுக்கொள்வதிலும் கடினம் இருக்காது. பிறகு உங்களுடைய பிரஜை வெகு விரைவில் தயாராகி விடுவார்கள். நேரமும் உழைப்பும் குறைவாக ஈடுபட்டது மேலும் வெளிப்படையான எடுத்துக்காட்டை அனுபவம் செய்வதினால் பிரஜை என்ற முத்திரை இடப்பட்டுக் கொண்டே இருந்தது என்றாகி விடும். இராஜா இராணியாக நீங்கள் ஆகுபவர்கள் தான் இல்லையா.

பாப்தாதா ஒரு விஷயத்தை மீண்டும் உங்கள் கவனத்தில் கொண்டு வருகிறார். தற்சமய சூழ்நிலைக்கு ஏற்றபடி மனதில் உள்ளத்தில் இப்பொழுது வைராக்கிய உள்உணர்வை வெளிப்படுத்துங்கள். பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் அவர் இல்லறத்திலிருந்தாலும், சேவை நிலையத்தில் இருந்தாலும், எங்கே இருந்தாலும் ஸ்தூல சாதனம் ஒவ்வொருவருக்கும் கொடுத்திருக்கிறார். அந்த மாதிரி எந்தக் குழந்தையும் கிடையாது. அவரிடம் சாப்பிடுவதற்கும் குடிப்பதற்கும், தங்குவதற்கும் சாதனம் இல்லை என்று ஒரு குழந்தை கூட இல்லை. யார் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியத்தின் உள்உணர்வில் இருந்து கொண்டே அவசியமான சாதனம் என்ன வேண்டியது இருக்கிறதோ அது அனைவரிடமும் இருக்கிறது. ஒருவேளை யாரிடமாவது குறைவு இருக்கிறது என்றால் அது அவருடைய அலட்சியம் அல்லது சோம்பேறித்தனத்தின் காரணமாகும். மற்றபடி நாடகத்தின் அனுசாரம் அவசியமான சாதனம் அனைவரிடமும் இருக்கிறது என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார் எது அவசியமான சாதனமோ அவை இருக்கத் தான் வேண்டும் ஆனால் சில இடங்களில் அவசியத்தையும் விட அதிகமான சாதனம் இருக்கிறது. சாதனா (இடைவிடாத சுயமுன்னேற்றத்தின் பயிற்சி) குறைவாக இருக்கிறது மற்றும் சாதனத்தை உபயோகம் செய்வது அல்லது செய்விப்பது அதிகமாக இருக்கிறது. எனவே இன்று

தந்தைக்குச் சமமாக ஆகும் தினத்தில் சாதனங்களை உபயோகப்படுத்தும் அனுபவம் அதிகமாக செய்திருக்கிறீர்கள், என்ன செய்திருந்தீர்களே அதுவும் மிக நன்றாக செய்திருந்தீர்கள். இப்பொழுது சாதனாவை அதிகரிப்பது என்றால் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்ளுணர்வை கொண்டு வருவது என்று பாப்தாதா விசேஷமாக அடிக்கோடிட்டு காண்பிக்கிறார். பிரம்மாபாபாவைப் பாருங்கள். இறுதி நேரம் வரை குழந்தைகளுக்கு சாதனம் அதிமாக கொடுத்திருந்தார், ஆனால் சுயம் அவர் சாதனங்களை உபயோகிப்பதிலிருந்து விலகி இருந்தார். இருந்த போதிலும் விலகியிருப்பது என்ற இதைத் தான் வைராக்கியம் என்று கூறுவது ஆனால் ஒன்றுமே இல்லை மேலும் எனக்கோ வைராக்கியம் இருக்கிறது, நான் இருப்பதே வைராக்கியம் உள்ளவன் தான் என்று கூறினால் அது எப்படி இருக்க முடியும். அந்த விஷயமோ முற்றிலும் வேறுபட்டது. அனைத்தும் இருந்த போதும் ஞானம் மற்றும் உலக நன்மை செய்யும் பாவனையோடு, தந்தையை மற்றும் தன்னை பிரத்யக்ஷம் செய்யும் பாவனையோடு இப்பொழுது சாதனங்களுக்குப் பதிலாக எல்லைக்கப்டாற்பட்ட வைராக்கிய உள்ளுணர்வு இருக்க வேண்டும். எப்படி ஸ்தாபனையின் தொடக்க காலத்தில் சாதனம் ஒன்றும் குறைவாக இருக்கவில்லை. இருந்தும் அனைவரும் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்ளுணர்வு என்ற பட்டியில் இருந்தார்கள். இந்த 14-வருடங்கள் என்ன தபஸ்யா செய்தார்களோ அந்த நேரம் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வின் வாயுமண்டலம் இருந்தது. பாப்தாதா இப்பொழுது சாதனம் அதிகமாக கொடுத்திருக்கிறார், இப்பொழுது சாதனங்களுக்கு ஒன்றும் குறையில்லை, ஆனால் அவை இருந்த போதும் எல்லைக்கப்பாற்பட்ட உள்ளுணர்வு இருக்க வேண்டும். உலகின் ஆத்மாக்களுக்கு நன்மை செய்வதற்காகவும் இந்த நேரம் இந்த விதியை கடைப்பிடிப்பது அவசியமாக இருக்கிறது. ஏனென்றால் நாலா புறங்களிலும் ஆசைகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. ஆசைகளின் வசமாகி ஆத்மாக்கள் மிகுந்த பிரச்சனையில் இருக்கிறார்கள். பல மடங்கு செல்வந்தனாக இருந்த போதிலும், அவரும் ஆசைகளின் காரணமாக மன அமைதியின்றி பிரச்சனையோடு இருக்கிறார். சூழ்நிலையில் ஆத்மாக்களின் பிரச்சனைகளுக்கான முக்கிய காரணம் இந்த எல்லைக்குபட்ட ஆசைகள். இப்பொழுது நீங்கள் உங்களுடைய எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்ளுணர்வு மூலமாக அந்த

ஆத்மாக்கள் மீதும் வைராக்கிய உள் உணர்வை பரப்புங்கள். உங்களுடைய வைராக்கிய உள்உணர்வின் வாயுமண்டலம் இன்றி ஆத்மாக்கள் சுகமானவர்களாக அமைதி நிறைந்தவர்களாக ஆக முடியாது, பிரச்சனைகளிலிருந்து விடுபட முடியாது. நீங்கள் மரத்தின் வேர் ஆவீர்கள், மரத்தில் பிராமணர்களின் இடமாக எங்கே காண்பிக்கப்பட்டிருக்கிறது? வேரில் காண்பிக்கப்பட்டிருக்கிறது தான் இல்லையா? அப்படி அஸ்திவாரம், உங்களுடைய அலை உலகில் பரவும் எனவே விசேஷமாக இவ்வுலகில் பிரம்மாபாபாவிற்குச் சமமாக ஆவதற்கான விதியாக பாப்தாதா வைராக்கிய உள்உணர்வின் பக்கம் விசேஷ கவனத்தைக் கொண்டு வருகிறார். இவர்கள் சாதனங்களின் வசமாக இருப்பவர்கள் அல்ல, சாதனாவில் இருப்பவர்கள் என்று ஒவ்வொருவரும் அனுபவம் செய்ய வேண்டும். அனைத்தும் இருந்தும் வைராக்கிய உள்ளுணர்வு இருக்க வேண்டும். அவசியமான சாதனத்தை உபயோகியுங்கள் ஆனால் எந்த அளவு முடியுமோ அந்த அளவு சாதனங்களின் வசமாகாமல் உள்ளப்பூர்வமான வைராக்கிய உள்ளுணர்வோடு உபயோகியுங்கள். இப்பொழுது சாதனாவின் வாயுமண்டலத்தை நாலா புறமும் உருவாக்குங்கள். நேரத்தின் அருகாமைக்கு ஏற்றபடி இப்பொழுது உண்மையான தபஸ்யா மற்றும் சாதனா தான் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் ஆகும். இந்த வருடம் சேவையின் விஸ்தாரம் அதிகமாக செய்திருக்கிறீர்கள். இந்த வருடம் நாலா புறங்களிலும் பெரிய பெரிய நிகழ்ச்சிகளை செய்திருக்கிறீர்கள் மேலும் சேவை மூலமாக சகயோகி ஆத்மாக்களும் அதிகமாக உருவாகியிருக்கிறார்கள், அருகில் வந்திருக்கிறார்கள், தொடர்பில் வந்திருக்கிறார்கள், ஆனால் சகயோகியாக மட்டும் ஆக வேண்டுமா என்ன? இந்த நிலை வரை அவர்களை வைக்க வேண்டுமா என்ன? நல்ல நல்ல சகயோகி ஆத்மாக்கள் இருக்கிறார்கள். இப்பொழுது அந்த சகயோகிகளான நல்ல தரமுள்ள ஆத்மாக்களை இன்னும் சம்மந்தத்தில் கொண்டு வாருங்கள். அனுபவம் செய்வியுங்கள் அதன் மூலம் சகயோகி யிலிருந்து சகஜயோகி ஆகி விடட்டும். இதற்காக ஒன்று சாதனாவின் வாயுமண்டலம் மற்றும் இன்னொன்று எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வின் வாயுமண்டலம் இருக்கிறது என்றால் இதன் மூலம் சுலபமாகவே சகயோகி, சகஜயோகி ஆகி விடுவார். அவர்களுக்கு சேவையோ செய்து கொண்டே இருங்கள் ஆனால் கூடவே சாதனா, தபஸ்யாவின் வாயுமண்டலமும் அவசியம் ஆகும்.

## 1999 அவ்யக்த முரளி

இப்பொழுது நாலா புறங்களிலும் சக்திசாலியான தபஸ்யா செய்ய வேண்டும். யார் தபஸ்யா மனசேவைக்கு பொறுப்பாளர் ஆகியிருக்கிறார்களோ அவர்கள் அந்த மாதிரி சக்திசாலியான சேவையை இப்பொழுது தபஸ்யா மூலம் செய்ய வேண்டும். இப்பொழுது மனசேவை அதாவது எண்ணம் மூலமாக சேவை செய்வதற்கான தூண்டுதல் செய்வது, இப்பொழுது அதன் அவசியம் இருக்கிறது. நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது. நிரந்தரமான நிலை மற்றும் சக்திசாலியான வாயுமண்டலத்தின் அவசியம் இருக்கிறது. தந்தைக்குச் சமமாக ஆக வேண்டும் என்றால், முதலில் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வை தாரணை செய்யுங்கள். இதைத் தான் இறுதி வரை பிரம்மாபாபாவின் விசேஷமாக பார்த்தீர்கள். சாதனங்கள் மேலும் பற்றுதல் இருக்கவில்லை, குழந்தைகள் மேலும் இருக்கவில்லை. .. அனைவர் மீதும் வைராக்கிய உள்ளுணர்வு இருந்தது. அப்படி இன்றைய தினம் தந்தைக்குச் சமமாக வேண்டும் என்ற பாடத்தை உறுதியாக்க வேண்டும். பிரம்மாபாபாவிற்குச் சமமாக கண்டிப்பாக ஆக வேண்டும். அந்த மாதிரி திட நிச்சயம் அவசியம் முன்னேறிச் செல்ல வைக்கும்.

மற்றபடி இன்று பரிசு கிடைக்க வேண்டும் என்று அனைத்து குழந்தைகளும் யோசித்துக் கொண்டு இருக்கலாம். இப்பொழுது பாருங்கள் நாலா புறமும் உள்ள குழந்தைகளோ இல்லை. வந்திருக்கும் உங்களுக்கு மட்டும் பரிசு கொடுக்கவா? பரிசோ கண்டிப்பாக இருக்கவே இருக்கிறது ஆனால் ஒவ்வொருவரும் முழு வருடத்தில் அனைத்து பந்தனங்களிலிருந்தும் விடுபட்டு இருந்தீர்களா என்று பாப்தாதா கேட்கிறார். பட்டியலை எடுத்தீர்கள் தான் இல்லையா? எத்தனை பந்தனங்களை எடுத்தீர்கள்? (18) நல்லது. 18-லிருந்தும் பந்தனத்திலிருந்து கனவு அளவிலும் விடுபட்டு, கனவில் கூட எந்த பந்தனத்தின் ரூபம் வராமல் இருக்க வேண்டும். இதைக் தான் விடுபட்ட நிலை என்று கூறுவது. அப்படி கையையோ மிக சுலபமாகத் தூக்குகிறீர்கள், கையை உயர்த்தச் சொன்னால் அனேசு கைகள் உயரும் என்று பாபாவிற்குத் தெரியும் ஆனால் இருந்தும் எந்த சோதனை மூலம் நீங்கள் கையை உயர்த்துவதற்கு தயாராக இருக்கிறீர்களோ, பாப்தாதாவிற்கு எத்தனை பேர்கள் தயாராகி இருக்கிறார்கள்,

யாரெல்லாம் தயாராகி இருக்கிறார்கள் என்று தெரியும். இப்பொழுது கூட இன்னும் உள்நோக்கு பார்வை உடையவராகி சூட்சும சோதனை செய்யுங்கள். யாருக்கும் துக்கம் கொடுக்கவில்லை அது நல்லது தான் ஆனால் எந்த அளவு சுகத்தின் கணக்கு சேமிப்பு ஆக வேண்டுமோ அந்த அளவு ஆனதா? கோபப்பட வைக்கவில்லை, திருப்தி படுத்தினேனா? வீணானதை நினைக்கவில்லை ஆனால் வீணானதின் இடத்தில் உயர்ந்த எண்ணத்தை இந்த அளவே சேமிப்பு செய்தேனா? அனைவருக்காகவும் சுபபாவனை வைத்தேன் ஆனால் சுபபாவனை வைத்ததின் பலன் கிடைத்ததா? அவர் மாறினாலும் மாறாவிட்டாலும் கூட, ஆனால் நீங்கள் அவர் மேல் திருப்தியாக இருந்தீர்களா? அந்த மாதிரி சூட்சும சோதனையை உங்களுக்காக நீங்கள் செய்யுங்கள். மேலும் ஒருவேளை அந்த மாதிரி சூட்சும சோதனையில் தேர்ச்சி அடைந்து விட்டீர்கள் என்றால் மிக நல்ல நிலையில் இருக்கிறீர்கள். அந்த மாதிரி தேர்ச்சி அடைந்த ஆத்மாக்கள் அவரவர்களின் சேவை நிலையங்களில் நாலா புறமும் உள்ள சேவை நிலையங்களில் தன்னுடைய பெயர், ரிசல்ட் அனைத்து விஷயங்களிலும் எத்தனை சதவிகிதம் இருந்தது? எத்தனை பேருக்கு சுகம் கொடுத்தீர்கள்? எத்தனை பேர் திருப்தியாக இருந்தார்கள்? கோபப்படுபவரைப் திருப்தி படுத்தினீர்களா? அல்லது யார் திருப்தியாக இருக்கிறாரோ அவரை மட்டும் தான் திருப்தி படுத்தினீர்களா? அப்படி இந்த அனைத்து சோதனைகளையும் செய்து மதிப்புடன் தேர்ச்சி அடைபவராக ஆகியிருக்கிறீர்கள் என்றால் தன்னுடைய பெயரை தன்னுடைய டீச்சருக்கு எழுதிக் கொடுங்கள், மேலும் சின்ன சின்ன சென்டரில் இருக்கும் டீச்சர்கள் அவர்களுக்கு மேலே இருக்கும் பெரிய சகோதரிகள் பொறுப்பாளராக இருப்பவர்கள், அவர்கள் இவர்களை தேர்ச்சி அடையச் செய்யட்டும். பிறகு ஜோனிடம் அனைத்து பெயர்களும் வரட்டும் ஜோனிடம் அனைவரின் பெயரையும் ஒன்றாகச் சேருங்கள். பிறகு ஜோனை சேர்ந்த சகோதரி அந்த மாதிரி தேர்ச்சி பெற்ற ஆத்மாக்களின் பெயரை மதுபன்னிற்கு அனுப்பி வைக்கட்டும். பிறகு பரிசு கிடைக்கும். அதற்குப் பிறகு கைதட்டுவோம். யார் அந்த மாதிரி மதிப்புடன் தேர்ச்சி அடைபவராக இருப்பாரோ அவருக்கோ அவசியம் பரிசு கிடைக்க வேண்டும். அது கிடைக்கும் ஆனால் உண்மையான உள்ளத்தோடு, உண்மையான தந்தைக்கு தன்னுடைய உண்மையான கணக்கைக் கூறுங்கள் மற்றும் பரிசைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஏனென்றால்,

பாப்தாதாவிடம் அனைவரின் எண்ணமோ வந்து சேர்கிறது தான் இல்லையா? அப்படி யார் யார் கையை உயர்த்தினார்களோ அதில் மிகுந்த கலப்படம் இருந்தது என்று பாப்தாதா பார்த்தார். மேலும் புரிந்து கொள்ளாமலேயே கையை உயர்த்தி விடுகிறார்கள். அப்படி யாராவது கலப்படமானவர் கையை உயர்த்தி, பாப்தாதா பரிசைக் கொடுக்கவில்லை என்றால் நன்றாக இருக்காது. எனவே நியமப்படி ஒருவேளை கௌரவமாக தேர்ச்சி அடைபவராக இருக்கிறார் என்றால் அவருக்கோ மிகுந்த மகிமை இருக்கிறது. மேலும் அந்த மாதிரியானவரின் பெயரோ அனைத்து பிராமணர்கள் மத்தியில் பிரசித்தி ஆக வேண்டும் இல்லையா? நல்லது. பெரும்பான்மையோர் நன்றாக உழைத்திருக்கிறார்கள். கவனம் இருந்தது ஆனால் சம்பூர்ணமாக ஆவதின் விஷயமாகும். யாரெல்லாம் உழைத்திருக்கிறார்களோ அவர்களுக்கு இன்று பரிசுக்குப் பதிலாக வாழ்த்துக்கள் கூறுகிறோம். பின்பு பரிசு கொடுப்போம். சரி தான் இல்லையா?

நல்லது -இன்னொரு விஷயம் அனைத்து மண்டலங்களைச் சேர்ந்தவர்கள் மார்ச் மாதம் வரை மைக் (முக்கியஸ்தர்கள்) கொண்டு வர வேண்டும். இது அனைவருக்கும் நினைவு இருக்கிறது. எனவே மார்ச் மாதத்தில் பாப்காதா முதலில் ஜோனை சேர்ந்தவர்களிடமிருந்து யர் மேலும் எந்த தரமுள்ள மைக்கை தயார் செய்திருக்கிறீர்கள் என்ற ரிசல்ட்டை கேட்பார். இவர் மைக் என்று நீங்கள் கூறுவீர்கள் ஆனால் அவர் சிறிய மைக்காக இருப்பார். உதாரணமாக எந்த நகரத்தின் மைக் உருவாகியிருக்கிறாரோ, அவர் அந்த நகரத்தின் மைக், ஜோனின் மைக்கும் இல்லை. அப்படியானால் அவரை சிறிய மைக் என்று தான் கூறுவோம் இல்லையா. அந்த மாதிரி எந்த மைக்கை தயார் செய்திருக்கிறீர்கள் என்று பாப்தாதா கேட்கிறார். ஒருவேளை ஏதாவது மண்டலத்தைச் சேர்ந்தவர்கள் இறுதி சந்திப்பில் வர முடியாமல் இருந்தால் கூட தன்னுடைய கடிதத்தை கடைசி சந்திப்பு நேரத்தில் எழுதி அனுப்ப வேண்டும். வருவதாக இருந்தால் மண்டல பொறுப்பிலிருப்பவருக்கு அழைப்பு இருக்கிறது. ஒருவேளை வர முடியவில்லை. வராமல் இருப்பதற்கு அந்த மாதிரி ஏதாவது காரணம் இருக்கிறது என்றால், தங்களுடைய கடிதத்தை அனுப்பி வைத்தீர்கள் என்றால் கூட சரி தான். பிறகு பாப்தாதா அந்த அனைத்து மைக்கின்

கூட்டத்திற்கு நிகழ்ச்சி வைப்பார். அதில் அனைத்து பக்கத்தின் மைக் மேடையில் வருவார்கள். அவர்களுக்காக விசேஷமான நிகழ்ச்சி வைப்போம், மார்ச் மாதத்தில் அந்த மைக்கையும் உடன் அழைத்து வர வேண்டும் என்று அப்படியில்லை. மைக் அங்கேயே இருக்கட்டும், நீங்கள் வாருங்கள். யார் மைக்காக இருக்கிறாரோ அவர்களை மிகக் கோலாகலமாக வரவேற்போம் தான் இல்லையா? அவர்களை நல்ல முறையில் வரவேற்கவும் வேண்டும் இல்லையா? அப்படி அவர்களுக்கு விசேஷமான நிகழ்ச்சி வைப்போம். பிறகு நம்பர் ஒன்று, இரண்டு, மூன்றிற்கு பரிசு கொடுப்போம். சரி தானே. மண்டலங்களைச் சேர்ந்தவர்களுக்கு தெளிவானதா? மார்ச் மாதத்தில் ரிசல்ட்டை கொண்டு வர வேண்டும். நல்லது.

இப்பொழுது என்ன நினைவு வைத்தீர்கள்? எந்த விஷபத்தை அடிக்கோடிட்டோம்? எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம். இப்பொழுது ஆத்மாக்களை ஆசைகளிலிருந்து காப்பாற்றுங்கள். பாவம் மிகவும் துக்கமாக இருக்கிறார்கள். மிகவும் பிரச்சனையோடு இருக்கிறார்கள். எனவே இப்பொழுது இரக்க மனம் உடையவர் ஆகுங்கள். இரக்கத்தின் அலையை எல்லைக்கப்டாற்பட்ட வைராக்கிய உள்ளுணர்வு மூலமாக பரப்புங்கள். இப்பொழுது அனைவரும் உயர்ந்ததிலும் உயர்ந்த பரந்தாமத்தில் தந்தையுடன் சேர்ந்து அமர்ந்து அனைத்து ஆத்மாக்களுக்கும் இரக்கத்தின் திருஷ்டி கொடுங்கள். எண்ண அலைகளைப் பரப்புங்கள். பரப்ப முடியும் தான் இல்லையா? இப்பொழுது பரந்தாமத்தில் தந்தையுடன் அமர்ந்து விடுங்கள். அங்கிருந்து இந்த எல்லைக்கட்பாற்பட்ட இரக்கத்தின் வாயுமண்டலத்தை பரப்புங்கள் (பாப்தாதா ட்ரில் செய்வித்தார்). நல்லது.

நாலா புறமும் உள்ள அனைத்து மிக அன்பிற்குரிய குழந்தைகளுக்கு, அனைத்து நாலா புறமும்ளின் சாதனை செய்யக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு, முழு நாளிலும் பாப்தாதாவிற்கு மிக அன்பான, இனிமையான இதயத்தின் பாடலைக் கூறக்கூடிய, ஆன்மீக உரையாடல் செய்யும் சக்திகளுக்கு, குணங்களின் வரதானத்தினால் பையை நிரப்புபவர்களுக்கு, பாப்தாதாவிற்கு அனைவரின் பாடல், குஷியின் பாடல், அன்பின் பாடல், ஆன்மீக போதையின் பாடல், மிகவும் இனிமையான விஷயங்கள் இதயத்தை தொடக்கூடியவை கூறினீர்கள்,

மேலும் பாப்தாதாவும் கேட்பதிலும் சந்திப்பதிலும் அன்பிலேயே ஐக்கியமாகி இருந்தார், அந்த மாதிரி உள்ளப்பூர்வமான உண்மையான உள்ளத்தின் ஓசையை கூறக்கூடிய குழந்தைகள் மகானாக இருக்கிறார்கள். மேலும் எப்பொழுதும் மகானாக இருப்பார்கள். அந்த மாதிரி மிகவும் இனிமையான குழந்தைகள் எப்பொழுதும் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வைக் கடைபிடிக்கக் கூடிய, திட நிச்சயபுத்தி குழந்தைகளுக்கு பாப்தாதா ஒன்றிற்கு பலகோடி மடங்கு அன்பை பிரதிபலனாகக் கொடுக்கிறார். திலாராமின் தில்-(இதயத்தில்) இருக்கக்கூடிய அனைத்து குழந்தைகளுக்கும் மிகுந்த அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: மாயா மற்றும் தடைகளிலிருந்து பாதுகாப்பாக இருக்கக்கூடிய பாப்தாதாவின் குடைநிழலுக்கு உரியவர் ஆகுக!

யார் பாப்தாதாவின் காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளோ அவர்களுக்கு, பாப்தாதாவின் குடைநிழல் அதிகாரத்தின் ரூபத்தில் பிராப்தி ஆகிறது. அந்த குடை நிழலில் மாயா வருவதற்கு சக்தி இல்லை. அவர் எப்பொழுதும் மாயா மேல் வெற்றி அடைபவர் ஆகி விடுகிறார். இந்த நினைவு என்ற குடைநிழல் அனைத்து தடைகளிலிருந்தும் பாதுகாத்து விடுகிறது. எந்தவிதமான தடை குடைநிழலில் இருப்பவரிடம் வர முடியாது. குடைநிழலில் இருப்பவர்களுக்கு கடினத்திலும் கடினமான விஷயம் கூட சுலபமாகி விடுகிறது. மலைக்கு சமமான விஷயங்கள் பஞ்சுக்கு சமமாக அனுபவம் ஆகிறது.

சுலோகன்: பிரபுவிற்குப் பிரியமான, உலகினருக்கும் பிரியமான, சுயம் தனக்குப் பிரியமானவர் ஆவதற்கு திருப்தி எனும் குணத்தை தாரணை செய்யுங்கள்!

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 13.02.1999 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சிவ அவதாரம் மற்றும் சிக்கனத்தின் அவதாரம்!

இன்று திரிமூர்த்தி சிவதந்தை தன்னுடைய மிக அன்பிற்குரிய மிக இனிமையான சாலிகிராம் குழந்தைகளை சந்திக்க வந்திருக்கிறார். இன்றைய தினம் சிவன் மற்றும் சாலிகிராமங்களுக்காக விசேஷ தினம். அப்படி குழந்தைகளைச் சந்தித்து, குழந்தைகளின் பிறந்த நாளை கொண்டாடுவதற்காக தந்தை வந்திருக்கிறார் என்று தந்தைக்கும் குஷி ஏற்படுகிறது. மேலும் குழந்தைகள் நாங்கள் தந்தையின் பிறந்த நாளைக் கொண்டாட வந்திருக்கிறோம் என்று தந்தைக்கும் கூறுகிறார்கள். தந்தைக்கும் குஷி மற்றும் குழந்தைகளுக்கும் குஷி. ஏன்? ஏனென்றால் இந்த பிறந்த நாள் முழு கல்பத்திலும் வித்தியாசமானது மற்றும் மிகவும் அன்பிற்குரியது. முழு கல்பத்திலும் யாருக்குமே இந்த மாதிரி பிறந்த நாள் கொண்டாடப்படுவதில்லை. தந்தை மற்றும் குழந்தைகளுக்கு சேர்ந்தே ஒரே நேரத்தில் பிறந்த நாள் இருக்கிறது என்பது எந்தக் காலத்திலும் மற்றும் யாருக்குமே நடப்பதில்லை. எனவே பாப்தாதா முதலில் குழந்தைகளுக்கு பல மடங்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார்கள். குழந்தைகளின் வாழ்த்துக்களோ அமிர்தவேளையிலிருந்து மிக மிக உள்ளப்பூர்வமாக, உள்ளத்தின் வாழ்த்துக்கள் பாப்தாதாவிடம் வந்தே சேர்ந்து விட்டது. இத்தனை அனைத்து குழந்தைகளை, சாலிகிராமங்களைப் பார்த்து பாப்தாதா ஆஹா, காணாமல் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளே. ஆஹா என்று குஷியின் பாடலை உள்ளத்தில் பாடுகிறார். ஆஹா! செல்லமான குழந்தைகளே, ஆஹா! ஆஹா! ஆன்மீகப் ஜென்மம் ஆன்மீகப் பிறந்தநாளைக் கொண்டாடுபவர்களே ஆஹா! அப்படி ஒவ்வொரு குழந்தைக்காகவும் பாப்தாதா ஆஹா ஆஹா என்ற பாடலை பாடுகிறார்கள். ஏனென்றால், இவ்வளவு முழு உலகத்தின் ஆத்மாக்களிலிருந்து எவ்வளவு குறைந்த குழந்தைகள் நீங்கள் அந்த மாதிரி பலமடங்கு பாக்கியம் நிறைந்தவர்களாக ஆகியிருக்கிறீர்கள்.

மேலும் வரும் காலத்திலும் பாக்கியவான்களாக இருப்பீர்கள். அமர பாக்கியவானாக அரைக் கல்பம் இருப்பீர்கள். ஒரு ஜென்மத்திற்கான வரதானம் இல்லை. அனேக பிறவிகளுக்கு அமர வரம் பெற்றவர்களாக ஆகி விட்டீர்கள். அந்த மாதிரி குழந்தைகளுக்கு தன்னுடைய சுவமானம் (சுயகௌரவம்) எவ்வளவு நினைவில் இருக்கிறது? இந்த ஆன்மீகப் பிறந்தநாள் மற்றும் ஆன்மீகப் பிறவியின் குறைவில்லா ஆஸ்தியை பிறந்தவுடனேயே தந்தை குழந்தைகளுக்குக் கொடுத்து விடுகிறார். பிறந்தவுடனேயே நினைவின் உயர்ந்த திலகத்தை ஒவ்வொரு குழந்தைக்கும் தந்தை இட்டு விட்டார். திலகம் இடப்பட்டிருக்கிறது தான் இல்லையா? பிராமண வாழ்க்கை இருக்கிறது என்றால் திலகமும் அழியாதது. பிராமணர்களின் நெற்றியில் திலகம் இருப்பது உயர்ந்த பாக்கியத்தின் அடையாளம்.

அப்படி நீங்கள் அனைவரும் மற்றும் நாலா புறமும் உள்ள குழந்தைகள் தூரத்தில் அமர்ந்திருந்தாலும் மிகுந்த ஊக்கம் உற்சாகத்துடன் இந்த புதுமையான மற்றும் அன்பான பிறந்த நாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள் தான் இல்லையா? தந்தை எங்களுடைய பிறந்த நாளைக் கொண்டாடுகிறார் மற்றும் நாங்கள் தந்தையினுடைய பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம் என்று அனைவரும் குஷி அடைகிறார்கள். எவ்வளவு குஷி இருக்கிறது. குஷியை அளக்க முடியுமா? இந்த உலகத்தில் இந்த ஆன்மீகக் குஷியை அளப்பதற்கான சாதனம் உருவாகவே இல்லை. ஒருவேளை உங்களிடம் கடல் அளவு குஷி இருக்கிறதா என்று கேட்கிறார்கள் என்றால் என்ன கூறுவீர்கள்? கடல் கூட ஒன்றும் இல்லை, அதையும் விட பெரிது என்று தான் கூறுவீர்கள். நல்லது. ஆகாயம் அளவா? என்று கேட்கிறார்கள் என்றால் ஆகாயத்தையும் விட உயர்வான இடத்தில் உங்களுடைய வீடு இருக்கிறது, உங்களுடைய சூட்சும வதனம் இருக்கிறது எனவே இதை அளப்பதற்கான அளவுகோல் உருவாகவே இல்லை, மேலும் உருவாக முடியாது. அந்த அளவு குஷி இருக்கிறது என்றால் ஒரு கையின் கைதட்டல் செய்யுங்கள் (அனைவரும் கை தட்டினார்கள்). குஷி இருக்கிறது -இதிலேயோ அனைவரும் கை உயர்த்துகிறீர்கள். உங்களுக்கு வாழ்த்துக்கள்! இப்பொழுது இரண்டாவது கேள்வி புரிந்து கொண்டீர்கள் அதனால் சிரிக்கிறீர்கள். பாப்தாதா ஒவ்வொரு

குழந்தையையும் எப்பொழுதும் மலர்ந்திருக்கும் ஆன்மீக ரோஜாவாகப் பார்க்க விரும்புகிறார்கள். பாதி மலர்ந்ததாக இன்றி முழுமையாக மலர்ந்திருக்கும் மற்றும் நிரந்தரமாக மலர்ந்திருப்பதாகப் பார்க்க விரும்புகிறார்கள். மலர்ந்திருக்கும் மலர் எவ்வளவு நன்றாக இருக்கும். பார்க்கும் பொழுதே மகிழ்ச்சி ஏற்படும். மேலும் கொஞ்சம் வாடியிருந்தால் கூட என்ன செய்கிறீர்கள்? அதை ஒரு பக்கமாக ஒதுக்கி வைத்து விடுகிறீர்கள். பாப்தாதா ஒரு பக்கமாக ஒதுக்கி வைப்பதில்லை, ஆனால் அவர்களே ஒதுங்கி விடுகிறார்கள்.

இன்றோ கொண்டாடுவதற்கான நாள் இல்லையா? முரளியையோ எப்பொழுதும் கேட்கிறீர்கள். இன்றோ அதிகமான குஷியில் மனதால் ஆடுங்கள் மற்றும் பாடுங்கள். மனதால் ஆடுங்கள், கால்களால் அல்ல. கால்களால் ஆடத் தொடங்கினீர்கள் என்றால் கூச்சல் குழப்பம் ஏற்பட்டு விடும் ஆனால் குழந்தைகள் நடனமாடிக் கொண்டும் இருக்கிறார்கள் மற்றும் மிக இனிமையான தந்தையின் மகிமை மற்றும் தன்னுடைய ஆன்மீக மகிமையின் பாடலையும் அதிகமாகப் பாடிக் கொண்டிருக்கிறார்கள். உங்கள் மனதில் எழும் ஓசை பாபாவிடம் வந்து சேர்ந்து கொண்டிருக்கிறது. அனைத்து தேசங்களிலிருந்தும் இந்த ஓசை வந்து கொண்டிருக்கிறது. தந்தையின் பேச்சொலியைக் கேட்டுக் கொண்டும் இருக்கிறார்கள் மற்றும் தந்தையும் அவர்களுடைய மனதின் ஓசையைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். தந்தையும் குழந்தைகளிடம் உலகில் மிக மிக அன்பிற்குரிய குழந்தைகளே நன்றாக ஆடுங்கள். அதிகமாக அருந்துங்கள். வேறு வேலையே என்ன இருக்கிறது என்று கூறுகிறார். பிராமணர்களின் வேலையே என்ன யோகா செய்வதும் என்ன? கடினமாக இருக்கிறதா என்ன? யோகாவின் அர்த்தமே ஆத்மா மற்றும் பரமாத்மாவின் சந்திப்பு. அப்படி சந்திப்பில் என்ன நடக்கும்? குஷியில் ஆடுகிறார்கள். தந்தையின் மகிமையின் இனிமையான பாடலை இதயம் இயல்பாகவே பாடுகிறது. பிராமணர்களின் வேலையே இது தான். பாடிக் கொண்டே இருங்கள், ஆடிக் கொண்டே இருங்கள். இது கடினமா? ஆடுவது, பாடுவது கடினமா? இல்லை தான் இல்லையா? யாருக்கு கடினமாக இருக்கிறதோ அவர்கள் கையை உயர்த்துங்கள். இன்றைய நாட்களோ ஆடுவதற்கும் பாடுவதற்குமான சீசன் என்றால் நீங்களும் என்ன செய்ய வேண்டும்? ஆடுங்கள். பாடுங்கள். சுலபம் தான் இல்லையா? சுலபம் என்றால் தலையையாவது ஆட்டுங்கள். கடினம்

இல்லை தான் இல்லையா? வேண்டுமென்றே சுலபத்தை அகற்றி விட்டு கடினத்தில் சென்று விடுகிறீர்கள். கடினமே இல்லை. மிக சுலடம் ஏனென்றால் அரைக் கல்பம் கடினமான வாழ்க்கையை வாழ்ந்து வந்திருக்கிறீர்கள் எனவே இந்த நேரம் சுலபம். கடினமாக அனுபவம் செய்பவர்கள் யாராவது இருக்கிறீர்களா? எப்பொழுதாவது கடினமாக இருக்கிறதா? எப்படி யாராவது சென்று கொண்டிருக்கும் போதே பாதையை மறந்து வேறு பாதையில் சென்று விட்டார் என்றால் கடினமாக இருக்கும் இல்லையா? ஞான மார்க்கம் கடினம் அல்ல, பிராமண வாழ்க்கை கடினம் அல்ல, பிராமணனுக்குப் பதிலாக சத்ரியன் ஆகி விடுகிறீர்கள். சத்ரியனின் வேலையே சண்டையிடுவது. கண்டிப்பாக கடினமாகத்தான் இருக்கும். யுத்தம் செய்வது கடினம், மகிழ்ச்சியாக இருப்பது சுலபம். எனவே இரட்டை வெளிநாட்டினர் மகிழ்ச்சியின் போதையில் இருப்பவர்கள் தான் இல்லையா. ஒரு கையின் கை தட்டலை தட்டுங்கள். மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா? அங்கே சென்ற பிறகு குழப்பத்தில் வந்து விட மாட்டீர்களே? பாருங்கள் இன்றைய சிவஜெயந்தியின் மகத்துவம் இரண்டு விஷயங்களினுடையது ஒன்று இன்றைய தினத்தன்று விரதத்தை கடைபிடிப்பார்கள் இரட்டை வெளிநாட்டினருக்கோ விரதம் போன்றவற்றை கடைபிடிப்பது கிடையாது. பாரதத்தில் தான் விரதம் இருப்பார்கள். அப்படி இன்றைய தினத்தின் மகத்துவம் விரதம் இருப்பது மற்றும் இன்னொன்று கண் விழித்திருப்பது. அப்படியானால் நீங்கள் அனைவருமே விரதத்தை எடுத்து விட்டீர்கள் இல்லையா? உறுதியான விரதம் எடுத்திருக்கிறீர்களா? அல்லது சில நேரம் பிஞ்சாக அதாவது உறுதியற்ற மற்றும் சில நேரம் பழுத்து அதாவது உறுதியானதாக இருக்கிறதா? பிஞ்சான பொருள் நன்றாக இருக்காது. பழுத்தது தான் அனைத்துமே நன்றாக இருக்கும் இல்லையா? அப்படியானால் விரதம் என்ன எடுத்திருக்கிறீர்கள்? பாப்தாதா அனைத்தையும் விட முதலில் எந்த விரதம் கொடுத்திருக்கிறார்? எப்பொழுது நினைவுத் திலகம் இட்டாரோ அப்பொழுது முதன்முதல் விரதமாக என்ன எடுத்தீர்கள்? நினைவிருக்கிறது இல்லையா? சம்பூர்ண தூய்மை ஆகுக. தந்தை கூறினார் மற்றும் குழந்தைகள் அதைக் கடைபிடித்தார்கள். அப்படி தூய்மையின் விரதம் பிரம்மச்சர்யத்தின் விரதம் மட்டும் இல்லை ஆனால் பிரம்மாவுக்குச் சமமாக ஒவ்வொரு எண்ணம், சொல் மற்றும் செயலில் தூய்மை. இதைத் தான் பிரம்மச்சாரி மற்றும் பிரம்மாச்சாரி

என்று கூறுவது. ஒவ்வொரு வார்த்தையிலும் தூய்மையின் வைப்ரேஷன் நிரம்பியிருப்பதாக இருக்கட்டும். ஒவ்வொரு எண்ணத்தில் தூய்மையின் மகத்துவம் இருக்கட்டும். ஒவ்வொரு காரியத்தில், காரியம் மற்றும் யோகா அதாவது கர்மயோகியின் அனுபவம் இருக்க வேண்டும். இதைத் தான் பிரம்மாச்சாரி என்று கூறுவது. பிரம்மாபாபாவை பார்த்திருக்கிறீர்கள். அவருடைய ஒவ்வொரு வார்த்தையும் மகாவாக்கியமாக இருந்தது. சாதாரண வாக்கியமாக இருக்கவில்லை. ஏனென்றால் உங்களுடைய பிறவியே சாதாரணமானது அல்ல, ஆன்மீகமானது. ஆன்மீகத்தின் அர்த்தமே தூய்மை. எனவே தினசரி இரவில் தன்னுடைய ஆசிரியராகி சோதனை செய்யுங்கள். மேலும் சதவிகிதத்திற்கு ஏற்றபடி தனக்குத் தானே மதிப்பெண்கள் கொடுங்கள். ஆக வேண்டியது 100-சதவிகிதம் ஆனால் ஒவ்வொரு நாளும் தன்னைத் தானே பாருங்கள். மற்றவர்களை பார்க்காதீர்கள். தன்னைப் பார்ப்பதற்குப் பதிலாக மற்றவர்களைப் பார்ப்பதில் ஈடுபட்டு விடுகிறார்கள். அது சுலபமாக இருக்கிறது என்பதை பாப்தாதா பார்த்திருக்கிறார்கள். எனவே இன்றைய தினம் எண்ணம், சொல் மற்றும் காரியத்தில் எத்தனை சதவிகிதம் இருந்தது என்று தன்னைத் தானே பாருங்கள்.

இந்த வருடம் நாலா புறமும் நீங்கள் அனைவரும் என்ன செய்தி கொடுத்தீர்கள். அனைத்து நிகழ்ச்சிகளிலும் பரிவர்த்தனையைப் (மாற்றம்) பற்றி கூறினீர்கள். எங்கெல்லாம் சொற்பொழிவு நிகழ்த்தினீர்களோ அங்கு பரிவர்த்தனை என்ற தலைப்பில் மிக நல்ல நல்ல சொற்பொழிவு நிகழ்த்தினீர்கள். அப்படி இந்த வருடம் நாலா புறமும்ளில் மற்றும் சேவையில் மற்றவர்களுக்கு பரிவர்த்தனையின் லட்சியத்தை மிக நல்ல முறையில் கோலாகலமாகக் கொடுத்திருக்கிறீர்கள். பாப்தாதா குஷியடைகிறார்கள். எனவே நீங்கள் உங்களுக்காகவும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நேரமும் எத்தனை சதவிகிதத்தில் பரிவர்த்தனை ஆனது என்று சோதனை செய்யுங்கள். பரிவர்த்தனை ஏறும் கலைக்கானதாக இருக்க வேண்டுமேயன்றி இறங்கும் கலைக்கானதாக அல்ல. பாப்தாதாவும் ஒவ்வொரு குழந்தையின் சார்ட்டைப் பார்க்கிறார்கள். அனைத்து குழந்தைகளினுடையதை பார்க்கிறார்களா அல்லது யாராவது விசேஷமானவர்களினுடையதைப் பார்க்கிறார்களா என்று நீங்கள்

யோசிப்பீர்கள். பாப்தாதா அனைத்து குழந்தைகளின் சார்ட்டை எப்பொழுதாவது பார்க்கிறார்கள், தினசரி பார்ப்பதில்லை ஆனால் எப்பொழுதாவது பார்க்கிறார்கள் தான். ஒருவர் கடைசியில் இருப்பவராக இருந்தாலும் சரி, அல்லது வேகமாக முன்னேறிச் செல்பவராக இருந்தாலும் சரி, அனைவரும் சிரிக்கிறீர்கள் என்றால், பாப்தாதாவே சார்ட் என்னவென்று கூறிவிட வேண்டியதாகி விடுகிறது. இன்றைய தினம் கொண்டாடுவதற்கான தினம் இல்லையா எனவே கூறவில்லை ஆனால் வரும் காலத்திற்காக சமிக்ஞை கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இன்றைய தினத்தின் மகத்துவமாக விரதம் எடுப்பது என்றிருக்கிறது. அதாவது திட எண்ணம் வைக்க வேண்டும். உண்மையான பக்தன் ஒருபொழுதும் விரதத்தை விட மாட்டார். எனவே குழந்தைகளுக்காக இருந்தும் பாப்தாதா எதிர்காலத்திற்காக சமிக்ஞையைக் தந்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது கூட முதல் அஸ்திவாரமான எண்ண சக்தி சில நேரம் வீணானவை அதிகமாக இருக்கிறது. மேலும் எதிர்மறையானவை வீணானவற்றை விட கொஞ்சம் குறைவாக இருக்கிறது. இந்த எண்ண சக்தியின் உபயோகத்தை எந்த அளவு தனக்காக மற்றும் உலகத்திற்காக செய்ய வேண்டுமோ அந்த அளவு இன்னும் அதிகரியுங்கள், ஏனென்றால் எண்ணத்தின் ஆதாரத்தினால் வார்த்தைகள் மற்றும் காரியம் இருக்கும், எனவே எண்ண சக்தியை பரிவர்த்தனை செய்யுங்கள். எது வீணாக மற்றும் எதிர்மறையாக செல்கிறதோ அதை மாற்றம் செய்து உலக நன்மைக்கான காரியத்தில் ஈடுபடுத்துங்கள். எண்ணத்தின் பொக்கிஷத்தை பாப்தாதா அனைத்தையும் விட உயர்ந்ததாக நினைக்கிறார்கள். எனவே இந்த எண்ணத்தின் பொக்கிஷத்திற்காக சிக்கனத்தின் அவதாரம் ஆகுங்கள். இன்றைய தினத்தை அவதார தினம் என்று கூறப்படுகிறது என்றால், அனைத்து குழந்தைகளுக்காக பாப்தாதாவிடம் இந்த மல்ல விருப்பம் தான் இருக்கிறது அதாவது இன்றைய தினம் சிவ அவதரணத்தின் கூடவே நீங்கள் அனைவரும் சிக்கனத்தின் அவதாரம் ஆகுங்கள். எண்ணத்தில் சிக்கனம் செய்தீர்கள் என்றால் வீணானதிலிருந்து பாதுகாத்தீர்கள், பிறகு பிற அனைத்து பொக்கிஷங்களும் இயல்பாகவே மிச்சமாகி விடும். அப்படியானால் 99-ல் என்னவாகும்? 99-தொங்கி விட்டது. 99-ல் என்ன ஆகும் என்று முன்பு யோசித்துக் கொண்டிருந்தீர்கள். ஏதாவது ஆனதா என்ன? பிப்ரவரி மாதமும் வந்து விட்டது. ஒருவேளை ஆகிறது என்றால் கூட

அதனால் உங்களுக்கு என்ன? உங்களுக்கு ஏதாவது நஷ்டம் ஏற்பட்டதா? பயம் இருக்கிறதா? என்ன ஆகும் என்ற அதன் பயம் இருக்கிறதா? உங்களைப் பொருத்தளவில் நல்லதே தான் நடக்கும். உலகத்தினருக்காக என்ன தான் ஆகி விட்டாலும் நீங்கள் பயமற்றவராகி மற்றும் சிரித்த முகமுடையவராகி காட்சிகளைப் பார்க்க வேண்டும். காட்சியில் இரத்தத்தையும் காண்பிட்டார்கள் என்றால் அன்பையும் காண்பிட்பார்கள். சண்டையையும் காண்பிக்கிறார்கள் என்றால் நல்ல விஷயங்களையும் காண்பிப்பார்கள். பிறகு அந்தக் காட்சிகளைப் பார்ப்பதில் பயம் இருக்கிறதா என்ன? என்ன ஆகும். என்ன ஆயிற்று, என்ன ஆயிற்று? இந்த மாதிரி யோசிக்கிறார்களா என்ன? மகிழ்ச்சியோடு அமர்ந்து பார்க்கிறார்கள். அப்படி இதுவும் எல்லைக்கப்பாறப்பட்ட நாடகம். ஒருவேளை என்னவாகி விட்டது என்னவாகி விட்டது என்று கொஞ்சமாவது பயம் அல்லது நடுக்கம் இருக்கிறது... அந்த மாதிரி நடக்கக்கூடாது, ஏன் அப்படி நடந்தது என்று அந்த மாதிரி மனநிலை உள்ளவர்களுக்கு பாதிப்பு ஏற்படும். நல்லதிலும் நல்ல நிலை மற்றும் மோசமான நிலையில் அவரும் மோசமான நிலையில் வந்து விடுவார், குழப்பத்தில் வந்து விடுவார் எனவே 99-ஆக இருந்தாலும் அல்லது 2000-ஆக இருந்தாலும் உங்களுக்கு என்ன? நாடகக் காட்சிகள் நடக்கட்டும் பயப்படாதீர்கள், மகிழ்ச்சியோடு பாருங்கள். ஐயோ என்ன ஆகி விட்டது என்று எண்ணத்தில் கூட வர வேண்டாம். 98-வது ஆண்டில் என்ன ஆகும் என்று அனைவரும் கேட்கிறார்கள். ஏதாவது ஆகும், ஒன்றும் ஆகாது. நீங்கள் அனைவரும் தான் இயற்கையிடம் அனைத்தையும் சுத்தப்படுத்துங்கள் என்று சேவை கொடுத்திருக்கிறீர்கள், அதற்கு நன்றாக சுத்தப்படுத்து என்று பெரிய பெரிய நீளமான துடைப்பம் கொடுத்திருக்கிறீர்கள். அதனால் ஏன் பயப்படுகிறீர்கள்? உங்களுடைய கட்டளைப்படி அது கத்தப்படுத்தும் என்றால் நீங்கள் ஏன் குழப்பத்தில் வருகிறீர்கள்? நீங்கள் தானே கட்டளையிட்டீர்கள். எனவே ஆடாத அசையாதவராகி மனம் மற்றும் புத்தியை முற்றிலும் சக்திசாலியாக ஆக்கி, ஆடாத அசையாத நிலையில் நிலைத்து விடுங்கள். இயற்கையின் காட்சிகளைப் பார்த்துக் கொண்டே இருங்கள். பயப்படக் கூடாது. நீங்கள் சாதாரணமானவர்கள் அல்ல, ஆன்மீகமானவர்கள். சாதாரண மனிதர்கள் குழப்பத்தில் வருவார்கள், பயப்படுவார்கள். ஆன்மீகமான, மாஸ்டர் சர்வ சக்திவான் ஆத்மாக்கள் காட்சிகளைப் பார்த்துக் கொண்டே தன்னுடைய உலக

நன்மை செய்யும் காரியத்தில் முழுமையாக ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள். ஒருவேளை மனதையும் பத்தியையும் ஒரு காரியமும் இன்றி சுதந்திரமாக வைத்தீர்கள் என்றால் பயப்படுவீர்கள். மனம் மற்றும் புத்தியால் லைட் ஹவுஸ் ஆக இருங்கள். ஒளியைப் பரப்புங்கள். இந்தக் காரியத்திலேயே பிஸியாக இருந்தீர்கள் என்றால் பிஸியான ஆத்மாவிற்கு பயம் இருக்காது, பார்வையாளரின் நிலை இருக்கும். மேலும் ஏதாவது குழப்பம் ஏற்பட்டால் தன்னுடைய புத்தியை எப்பொழுதுமே தெளிவாக வைத்துக் கொள்ளுங்கள். ஏன், என்ன என்பதில் புத்தியை பிஸியாகவோ மற்றும் நிரம்பியதாகவோ வைக்காதீர்கள், காலியாக வையுங்கள். ஒரு தந்தை மற்றும் நான் என்று அப்படி இருக்க வேண்டும். அப்பொழுது தான் நேரத்திற்குத் தகுந்தாற் போல் கடிதம், தொலைபேசி, தொலைக்காட்சி மற்றும் உங்களுடைய என்னென்ன சாதனங்கள் உருவாகியிருக்கின்றனவோ அவைகள் மூலமாக செய்தி வந்து சேரவில்லை என்றாலும் பாப்தாதாவின் டைரக்ஷனை தெளிவாகப் புத்தியால் பிடித்துக் கொள்ள முடியும். இந்த அறிவியல் சாதனத்தை ஒருபொழுதும் தன்னுடைய ஆதாரமாக ஆக்காதீர்கள். உபயோகப்படுத்துங்கள் ஆனால் சாதனங்களின் ஆதாரத்தில் தன்னுடைய வாழ்க்கையை உருவாக்காதீர்கள். சில நேரங்களில் அறிவியலின் சாதனங்கள் இருந்த போதிலும் உபயோகிக்க முடியாது. எனவே அமைதியின் சாதனம் நீங்கள் எங்கே இருந்தாலும், எப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தாலும் அது மிகத் தெளிவாக மற்றும் மிக விரைவில் உபயோகத்தில் வரும் ஆனால் புத்தியின் தொடர்பை தெளிவாக வைத்துக் கொள்ள வேண்டும். புரிந்ததா? நீங்களே தான் மிக விரைவில் பொற்காலம் வந்து விடட்டும் என்று வரவழைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அப்படி பொற்காலத்தில் இந்த சுத்தம் வேண்டும் இல்லையா? எனவே இயற்கை மிக நன்றாக சுத்தப்படுத்தும்.

இன்றைய தினம் எண்ணம் அல்ல, திட எண்ணமாக என்ன எடுத்திருக்கிறீர்கள்? சிக்கனத்தின் அவதாரமாக கண்டிப்பாக ஆக வேண்டும். எண்ணத்திலானாலும், வார்த்தையிலானாலும், சாதாரண காரியத்திலும் சிக்கனம். மற்றும் இன்னொரு விஷயம் எப்பொழுதும் புத்தியைத் தெளிவாக வைத்துக் கொள்ள வேண்டும். இதைத் தான் இன்னொரு வார்த்தைகளில் உண்மையான உள்ளத்தில் தந்தை எப்பொழுதும் திருப்தியாக இருக்கிறார் என்று கூறுகிறார்கள்.

உண்மையான உள்ளம், சுத்தமான உள்ளம். தற்சமயத்தில் உண்மை மற்றும் சத்தத்தின் அவசியம் இருக்கிறது. உள்ளத்திலும் உண்மை, பரிவாரத்திலும் உண்மை மற்றும் தந்தையுடனும் உண்மையாக இருக்க வேண்டும். புரிந்ததா? இன்றைய தினம் சொல்லக்கூடாது தான் இருந்தாலும் சொல்லி விட்டோம். பாப்தாதாவிற்கு அன்பு இருக்கிறது இல்லையா? எனவே கொஞ்சம் பலஹீனத்தைகூட பாப்தாதாவால் பார்க்க முடியாது. பாப்தாதா எப்பொழுதும் ஒவ்வொரு குழந்தையையும் தன்னைப் போல சம்பூர்ணமாகப் பார்க்க விரும்புகிறார்.

நாலா புறமும் குழப்பம், இயற்கையின் அனைத்து தத்துவங்களும் மிக அதிகமாக குழப்பங்கள் செய்து கொண்டிருக்கின்றன, ஒரு பக்கம் கூட குழப்பம் இல்லாமல் இல்லை, நபர்களின் குழப்பமும் இருக்கிறது. இயற்கையின் குழப்பமும் இருக்கிறது என்றால் அந்த மாதிரி நேரத்தில் எப்பொழுது இந்த முழு உலகத்திலும் நாலா புறமும் குழப்பம் இருக்கிறது என்றால் நீங்கள் என்ன செய்வீர்கள்? அந்த நேரம் பாதுகாப்பிற்கான சாதனம் எது? ஒரு நொடியில் தன்னை உடலற்ற, அசரீரி மற்றம் ஆத்ம அபிமானி ஆக்கி விட்டீர்கள் என்றால் குழப்பத்தின் போது உறுதியாக இருக்க முடியும். இதற்கு நேரம் எடுக்காது தான் இல்லையா? என்ன ஆகும்? இப்பொழுது செய்து பாருங்கள் -ஒரு நொடியில் மனம் புத்தியை எங்கே விரும்புகிறீர்களோ அங்கே நிலைத்திருக்கச் செய்ய முடியுமா? யோகப் பயிற்சி இதைத் தான் சாதனா என்று கூறுவது நல்லது.

பாரதம் மற்றும் வெளிநாடுகளின் நாலா புறமும் தந்தையின் அன்பில் மூழ்கியிருக்கும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தன்னை பிரம்மாச்சாரி நிலையில் நிலைத்திருக்கச் செய்யக்கூடிய அன்பிற்குரிய சகயோகி குழந்தை களுக்கு, எப்பொழுதும் ஒருவரின் பெயர் நினைவிலிருந்து மற்றும் சிக்கனத்தை காரியத்தில் ஈடுபடுத்தக் கூடிய தைரியம் உள்ள குழந்தைகளுக்கு, எப்பொழுதும் குழப்பத்திலும் உறுதியாக இருக்கக்கூடிய பயமற்ற ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் மகிழ்ச்சியோடு இருக்கும் தந்தையின் அருகில் இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு, அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**கொடி ஏற்றிய பின் பாப்தாதாவின் மகா வாக்கியங்கள்:** இன்று தந்தை மற்றும் குழந்தைகள் இருவருக்கும் பிறந்த நாளுக்கான வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! இப்போது எல்லோரும் மிகுந்த மகிழ்ச்சியில் நடனமாடுவது போல, சதா அமர பவ! எப்படி இந்தக் கொடி அசைக்கப்பட்டு மலர் மழை பொழிந்ததோ, அதே போல தந்தையின் நினைவுக் கொடியை சதா உங்கள் இதயத்தில் ஏற்றி விடுங்கள், மேலும் கீழுமாக இருக்க வேண்டாம். நினைவின் கொடி ஒருபோதும் தாழ்ந்து விடக்கூடாது, உயரமாகவே இருக்க வேண்டும், அப்போது உலகத்தினர் ஓ பாக்கியமே, ஓ தந்தையே என்று இந்த மலர் மழையை ஆசீர்வாதங்களுடன் உங்கள் மீது பொழிவார்கள். எனவே, ஒருபுறம், நினைவுக் கொடியை ஏற்றுங்கள், மறுபுறம் தந்தையிடமிருந்து இன்று நீங்கள் பெற்ற செய்தி -சிக்கனத்தின அவதாரம் ஆகுங்கள்; எனவே அத்தகைய உறுதியின் கொடியை உங்கள் இதயத்தில் ஏற்றுங்கள். அதே நேரத்தில், சேவைக்காக நாலா புறமும் அனைத்து ஆத்மாக்களுக்கும் முன்பாக தந்தையை வெளிப்படுத்தும் கொடியை தொடர்ந்து அசையுங்கள் இதுதான் கொடியின் முக்கியத்துவம். அனைவரும் வெளிப்பாட்டின் கொடியின் கீழ் வந்து தந்தையை மகிமைப்படுத்தும் ஒரு நாள் வரும். ஆதரவு பெறுவார்கள் மற்றும் ஆதரவளிக்கும் வள்ளல் தந்தையின் குழந்தைகள் நீங்கள், மாஸ்டர் ஆதரவு வள்ளலாக இருப்பீர்கள். நல்லது.

நாலா புறமும் உள்ள நாடு, நகரம், கிராமம், சுற்றியுள்ள குழந்தைகளுக்கு, முதலில், சின்னச்சின்ன கிராமங்களின் குழந்தைகளுக்கு அன்பு நினைவுகள் மற்றும் வாழ்த்துக்கள்! மேலும் உங்கள் அனைவருக்கும்கூட வாழ்த்துக்கள்! எவ்வளவு வாழ்த்துக்கள் அளிப்பது, எந்தளவு உங்களால் ஏற்றுக் கொள்ள முடியுமோ அதை விடவும் அதிகமான வாழ்த்துக்கள்!

**வரதானம்: யோக சொரூப நிலை மூலமாக சூட்சும மற்றும் கடுமையான பந்தனங்களைக் கடந்து செல்லக்கூடிய பந்தனத்திலிருந்து விடுபட்டவர் ஆகுக!**

யோக சொரூபத்தின் அடையாளம் பந்தனத்திலிருந்து விடுபட்ட நிலை. யோக சொரூபம் ஆவதில் அனைத்தையும் விட பெரிய இறுதி பந்தனம்

எதுவென்றால் தன்னை புத்திசாலி என்று நினைத்து ஸ்ரீமத்தை தன்னுடைய புத்தியின் அதிசயம் என்று புரிந்து கொள்வது அதாவது ஸ்ரீமத்தில் தன்னுடையதைக் கலப்பது, அதைத் தான் புத்தியின் அபிமானம் என்று கூறுவது. எப்பொழுது யாராவது பலஹீனத்தின் சமிக்ஞை கொடுக்கிறார் மற்றும் தீய காரியம் செய்கிறார் என்றால் ஒருவேளை அந்த நேரம் கொஞ்மாவது வீணான எண்ணம் எழுகிறது என்றாலும் பந்தனம். எப்பொழுது இந்த பந்தனங்களைக் கடந்து வந்து வெற்றி, தோல்வி, புகழ்ச்சி இகழ்ச்சியில் சமநிலையை உருவாக்கினீர்கள் என்றால் தான், பந்தனத்திலிருந்து முழுமையாக விடுபட்டவர் என்று கூறுவோம்.

**சுலோகன்: முதலில் சிந்திப்பது, பிறகு செய்வது -இது தான் ஞானம் நிறைந்த ஆத்மாவின் குணம்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 01.03.1999 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஹோலி கொண்டாடுவது என்றால் சம்பூர்ண தூய்மை ஆகி சம்ஸ்காரத்தை இணைக்கும் விழாவை கொண்டாடுவது!

இன்று பாப்தாதா நாலா புறமும் உள்ள தன்னுடைய ஹோலியஸ்ட் (மிகத் தூய்மையான) மற்றும் ஹைஹயஸ்ட் (மிக உயர்ந்த) குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். உலகத்தில் மிக உயர்ந்த சிரேஷ்ட ஆத்மாக்கள் குழந்தைகள் உங்களைத் தவிர வேறு யாராவது இருக்கிறார்களா? ஏனென்றால் நீங்கள் அனைவரும் உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் குழந்தைகள், முழுக் கல்பத்திலும் சுற்றி வந்து பார்த்தீர்கள் என்றால் மிக உயர்ந்த பதவி உடையவர்கள் வேறு யாராவது தென்படுகிறார்களா? இராஜ்ய அதிகாரி சொரூபத்திலும் உங்களை விட உயர்ந்த இராஜ்ய அதிகாரி ஆகியிருக்கிறார்களா? பிறகு பூஜை மற்றும் மகிமையைப் பார்த்தீர்கள் என்றால் எந்த அளவு விதிப்பூர்வமாக பூஜை ஆத்மாக்கள் உங்களுக்கு இருக்கிறதோ அதை விட அதிகமாக வேறு யாருக்காவது இருக்கிறதா? நாடகத்தில் எவ்வளவு அதிசயமான இரகசியம் இருக்கிறது. அதை நீங்கள் சைத்தன்ய சொரூபத்தில், இந்த நேரம் தன்னுடைய பூஜைக்குரிய சொரூபத்தை ஞானத்தின் மூலமாக தெரிந்தும் இருக்கிறீர்கள். மேலும் பார்க்கவும் செய்கிறீர்கள். ஒரு பக்கம் சைத்தன்ய ஆத்மாக்கள் நீங்கள் மற்றும் இன்னொரு பக்கம் உங்களுடைய ஜட விக்ரஹங்கள் பூஜைக்குரிய ரூபத்தில் இருக்கின்றன. தன்னுடைய பூஜ்ய சொரூபத்தை பார்க்கிறீர்கள் தான் இல்லையா? ஜட ரூபத்திலும் இருக்கிறீர்கள். மேலும் சைத்தன்ய ரூபத்திலும் இருக்கிறீர்கள். அப்படி அதிசயமான நாடகம் தான் இல்லையா? மேலும் இராஜ்யத்தின் கணக்குப்படியும் முழுக் கல்பத்தில் தடையற்ற, துண்டுபடாத உறுதியான இராஜ்யம் ஆத்மாக்கள் உங்களுடையது ஒன்று தான். இராஜாக்களோ அதிகமாக ஆகிறார்கள், ஆனால் விஷ்வ இராஜன் மற்றும் விஷ்வ இராஜனின்

இராயல் குடும்பம் அனைவரையும் விட உயர்ந்தது. அப்படி இராஜ்யத்திலும் ஹையஸ்ட், பூஜ்ய ரூபத்திலும் ஹையஸ்ட். மேலும் இப்பொழுது சங்கமயுகத்தில் பரமாத்மா ஆஸ்தியின் அதிகாரி, பரமாத்மாவை சந்திப்பதற்கான அதிகரி, பரமாத்மாவின் அன்பின் அதிகாரி, மேலும் பரமாத்மா குடும்பத்தின் ஆத்மாக்களாக வேறு யாராவது ஆகிறார்களா? நீங்கள் மட்டும் தான் ஆகியிருக்கிறீர்கள் இல்லையா? ஆகி விட்டீர்களா? அல்லது ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? ஆகியும் விட்டீர்கள், மேலும் இப்பொழுது ஆஸ்தியை பெற்று சம்பன்னம் (முழுமை) ஆகி தந்தையுடன் தன்னுடைய வீட்டிற்கும் செல்பவர்களாக இருக்கிறீர்கள். சங்கமயுகத்தின் சுகம், சங்கமயுகத்தின் பிராப்திகள். சங்கமயுகத்தின் காலம் மங்களகரமாக இருப்பதாக அனுபவம் ஆகிறது தான் இல்லையா? மிக மிகப் பிடித்தமானதாக இருக்கிறது. இராஜ்யத்தின் காலத்தையும் விட சங்கமயுகத்தின் காலம் மிகவும் பிடித்திருக்கிறது தான் இல்லையா? பிடித்திருக்கிறதா அல்லது விரைவில் செல்ல விரும்புகிறீர்களா? பிறகு ஏன் பாபா விநாஷம் எப்பொழுது ஏற்படும் என்று கேட்டீர்கள், விநாஷம் எப்பொழுது ஏற்படும் என்று தெரியவில்லை? என்னவாகும்? நான் எங்கே இருப்பேன்? என்று யோசிக்கிறீர்கள் இல்லையா? எங்கே இருந்தாலும் நினைவில் இருந்தீர்கள் என்றால், தந்தையுடன் இருப்பீர்கள் என்று பாப்தாதா கூறுகிறார். ஸ்தூலமாகவோ அல்லது சூட்சுமத்திலோ உடன் இருந்தீர்கள் என்றால் ஒன்றும் நடக்காது. இவ்வுலகில் கதைகள் கேட்டிருக்கிறீர்கள் இல்லையா? பூனையின் குட்டிகள் அடுப்பில் இருந்த போதிலும் பாதுகாப்பாக இருந்தன என்று. அல்லது எரிந்து விட்டனவா? அனைவரும் பாதுகாப்பாக இருந்தார்கள். அப்படி பரமாத்மா குழந்தைகள் நீங்கள், யார் தந்தையுடன் இருப்பீர்களோ அவர்கள் பாதுகாப்பாக இருப்பார்கள். ஒருவேளை வேறு எங்காவது புத்தி சென்றது என்றால் கொஞ்சம் கொஞ்சம் ஆட்டம் ஏற்படும், கொஞ்சம் கொஞ்சம் பிரபாவம் ஏற்படும். உடன் இணைந்திருந்தீர்கள், ஒரு விநாடி கூட தனியாக இருக்கவில்லை என்றால், பாதுகாப்பாக இருப்பீர்கள். எப்பொழுதாவது காரியங்கள் செய்யும் போது அல்லது சேவையில் தனிமையை அனுபவம் செய்கிறீர்களா? என்ன செய்வது மிகுந்த வேலை இருக்கிறது நான் தனியாக இருக்கிறேன், அப்படி களைப்படைந்து விடுகிறீர்கள். தந்தையை ஏன் துணைவனாக ஆக்குவ தில்லை. இரண்டு கைகள் உள்ளவரை துணைவன் ஆக்கி விடுகிறீர்கள்.

ஆயிரம் கைகள் உள்ளவரை ஏன் துணைவனாக ஆக்குவதில்லை. யார் அதிகமாக சகயோகம் கொடுப்பார்? ஆயிரம் கைகள் உள்ளவேரா அல்லது இரண்டு கைகள் உள்ளவரா?

சங்கமயுகத்தில் பிரம்மா குமார் மற்றும் பிரம்மா குமாரி தனியாக ஆக முடியாது. எப்பொழுது சேவையில், கர்மயோகத்தில் மிகவும் பிஸியாகி விடுகிறீர்கள் என்றால், அப்பொழுது துணையையும் மறந்து விடுகிறீர்கள். மேலும் களைப்படைந்தும் விடுகிறீர்கள். பின்பு களைப்படைந்து விட்டேன். இப்பொழுது என்ன செய்வது என்று கூறுகிறீர்கள். களைப்படையாதீர்கள். எப்பொழுது பாப்தாதா உங்களுக்குஎப்பொழுதும் துணை கொடுப்பதற் காக வந்திருக்கிறார், பரந்தாமத்தை விட்டு விட்டு ஏன் வந்திருக்கிறார்? தூங்கும் பொழுதும், விழித்திருக்கும் பொழுதும், காரியம் செய்யும் போதும், சேவை செய்யும் போதும் துணையை கொடுப்பதற்காகத் தானே வந்திருக்கிறார். பிரம்மாபாபாவும் உங்கள் அனைவருக்கும் சகயோகம் கொடுப்பதற்காக அவ்யக்கம் ஆகியிருக்கிறார். வியக்த ரூபத்தை விட அவ்யக்த ரூபத்தில் சகயோகம் கொடுக்கும் வேகம் மிக அதிமாகும். எனவே பிரம்மாபாபா தன்னுடைய வதனத்தை மாற்றிக் கொண்டு விட்டார். அப்படி சிவ பாபா மற்றும் பிரம்மாபாபா இருவரும் ஒவ்வொரு நேரமும் உங்கள் அனைவருக்கும் சகயோகம் கொடுப்பதற்காக எப்பொழுதும் ஆஜராக இருக்கிறார்கள். நீங்கள் பாபா என்று நினைத்தீர்கள் மற்றும் சகயோகம் அனுபவம் ஆகும். ஒருவேளை சேவை, சேவை, சேவை மட்டும் தான் நினைவிருக்கிறது என்றால், தந்தையை ஓர் ஓரமாக அமர்ந்து பார்ப்பதற்காக தனியாக்கி விடுகிறீர்கள். தந்தையும் எதுவரை தனியாகச் செய்கிறார்கள் என்று பார்க்கலாம் என்று சாட்சியாகிப் பார்க்கிறார். இருந்தாலும் இங்கே தான் வந்தாக வேண்டும். எனவே துணையை விடாதீர்கள். தன்னுடைய அதிகாரம் மற்றும் அன்பின் சூட்சும கயிறுகளால் கட்டி வையுங்கள். தொய்லாக விட்டு விடுகிறீர்கள். அன்பை கொஞ்சம் தொய்வாக்கி விடுகிறீர்கள். அதிகாரத்தை கொஞ்சம் நினைவினால் ஒதுக்கி வைத்து விடுகிறீர்கள். எனவே அந்த மாதிரி செய்யாதீர்கள். எப்பொழுது சர்வ சக்திவான் துணையாக இருப்பதற்கு அவரே முன்னுக்கு வருகிறார் என்றால், இந்த மாதிரியான வாய்ப்பு முழுக் கல்பத்திலும் கிடைக்குமா? கிடைக்காது

தான் இல்லையா? எனவே நல்லது எதுவரை இவர்கள் தனியாகச் செய்கிறார்கள் என்று பாப்தாதாவும் சாட்சியாகிப் பார்க்கிறார்கள்.

அப்படி சங்கமயுகத்தின் சுகம் மற்றும் பெருமைகளை வெளிப்படுத்துங்கள். புத்தி பிஸியாக இருக்கிறது தான் இல்லையா? எனவே பிஸியாக இருக்கும் காரணத்தினால் நினைவு உள்ளடங்கி விடுகிறது. நீங்கள் யோசித்துப் பாருங்கள். முழு நாளில் யாரிடமாவது தந்தையின் நினைவு இருக்கிறதா அல்லது தந்தையின் நினைவு மறக்கிறதா என்று கேளுங்கள். அதற்குத் என்ன கூறுவார்கள்? மறக்கவில்லை. நினைவு இருக்கிறது இதுவோ சரி தான், ஆனால் வெளிப்படும் ரூபத்தில் இருக்கிறதா, உள்ளடங்கிய ரூபத்தில் இருக்கிறதா? மனநிலை என்னவாக இருக்கிறது? வெளிப்படும் ரூபத்தின் நிலை அல்லது உள்ளடங்கிய ரூபத்தின் நிலை, இதில் என்ன வித்தியாசம் இருக்கிறது. வெளிப்படும் ரூபத்தில் நினைவு ஏன் வைப்பதில்லை. வெளிப்படும் ரூபத்திற்கான போதை. சக்தி, சகயோகம், வெற்றி மிகப் பெரியதாகும். நினைவோ மறக்க முடியாது. ஏனென்றால் ஒரு ஜென்மத்திற்கான உறவு இல்லை, சிவபாபா சத்யுகத்தில் உடன் இருக்காவிட்டால் கூட, உறவோ இது தான் இருக்கும் இல்லையா? மறக்க முடியாது, இது சரி தான். ஆம் யாராவது தடையின் வசமாகி விடுகிறார் என்றால் மறந்தும் விடுகிறார் ஆனால் பொதுவாக எப்பொழுது இயற்கையான ரூபத்தில் இருக்கிறீர்கள் என்றால் மறப்பதில்லை, ஆனால் உள்ளடங்கி இருக்கிறது. எனவே துணையின் அனுபவம் உள்ளடங்கிய ரூபத்தில் இருக்கிறதா அல்லது வெளிப்படும் ரூபத்தில் இருக்கிறதா என்று அடிக்கடி சோதனை செய்யுங்கள் என்று பாப்தாதா கூறுகிறார். அன்போ இருக்கவே இருக்கிறது. அன்பு துண்டிக்கப்பட முடியுமா? துண்டிக்க முடியாது தான் இல்லையா? அப்படி அன்பு துண்டிக்க முடியாதது என்றால் அன்பின் லாபத்தை எடுத்துக் கொள்ளுங்கள். லாபத்தை எடுக்கும் முறையைக் கற்றுக்கொள்ளுங்கள்.

அன்பு தான் தந்தையின் குழந்தையாக ஆக்கியது என்று பாப்தாதா பார்க்கிறார். அன்பு தான் மதுபன் நிவாசியாக ஆக்குகிறது. தன்னுடைய ஸ்தானத்தில் எப்படி இருந்திருந்தாலும், எவ்வளவு தான் கடுமையாக உழைத்திருந்தாலும், மதுபன் வந்து சேர்ந்து விடுகிறார்கள். அனேசு

குழந்தைகளுக்கு கலியுகத்து சூழ்நிலைகள் இருக்கும் காரணத்தினால் பயணச்சீட்டு வாங்குவதிலும் கடினம் இருக்கிறது என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார்கள், பார்க்கவும் செய்கிறார்கள் ஆனால் அன்பு அவர்களைக் கொண்டு வந்து விடுகிறது. அப்படித் தான் இல்லையா? அன்பில் வந்து சேர்ந்து விடுகிறார்கள் ஆனால் சூழ்நிலைகளோ ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. உண்மையான உள்ளத்தின் மீது தந்தை திருப்தியாக இருக்கிறார், ஆனால் ஸ்தூல சகயோகமும் அங்கங்கே எப்படியாவது கிடைத்து விடுகிறது. வெளிநாட்டினராக இருந்தாலும் அல்லது பாரதவாசியாக இருந்தாலும் அனைவரையும் இந்த தந்தையின் அன்பச் சூழ்நிலைகள் என்ற சுவரை தாண்டி வர வைத்து விடுகிறது. அப்படித் தான் இல்லையா? நீங்கள் உங்களுடைய சென்டர்களில் பாருங்கள் அந்த மாதிரி குழந்தை களும் இருக்கிறார்கள், யார் இங்கிருந்து செல்கிறார்கள், அடுத்த வருடம் வர முடியுமா அல்லது முடியாதா என்று யோசிக்கிறார்கள் ஆனால் இருந்தும் வந்து சேர்ந்து விடுகிறார்கள். இது தான் அன்பின் நிரூபணம் ஆகும். நல்லது.

இன்று ஹோலி கொண்டாடினீர்களா? ஹோலியைக் கொண்டாடி விட்டீர்களா? பாப்தாதாவோ ஹோலி கொண்டாடும் ஹோலி (புனித) அன்னப்பறவைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அனைத்து குழந்தை களுக்கும் ஹோலியஸ்ட் (மிகப் புனிதமானவர்) என்ற ஒரே ஒரு பட்டம் தான் இருக்கிறது. துவாபர யுகத்தில் இருந்து எந்தவொரு தர்ம ஆத்மா அல்லது மகாத்மாவும், அனைவரையும் ஹோலியஸ்ட் ஆக்கவில்லை. சுயம் அவர்கள் ஆகிறார்கள், ஆனால் தன்னைப் பின்பற்றி நடப்பவர்களை, உடன் இருப்பவர்களை ஹோலியஸ்ட் தூய்மையாக ஆக்குவதில்லை. மேலும் இங்கு தூய்மை பிராமண வாழ்க்கைக்கான முக்கிய ஆதாரம் ஆகும். படிப்பு கூட என்ன? உங்களுடைய சுலோகனும் தூய்மை ஆகுங்கள் -யோகி ஆகுங்கள்" என்பது தான். சுலோகன் இருக்கிறதுதான் இல்லையா? தூய்மை தான் மகான் நிலை. தூய்மை தான் யோகி வாழ்க்கைக்கான ஆதாரம். சில நேரம் நடைமுறையில் எண்ணத்தில் கூட தூய்மையின்மை அதாவது வீணான மற்றும் எதிர்மறையான, பிற சிந்தனையின் எண்ணம் ஓடுகிறது என்றால் எவ்வளவு தான் சக்திசாலியான யோகா விரும்புகிறார்களோ அது ஏற்படுவதில்லை என்று குழந்தைகள்

அனுபவம் செய்கிறார்கள். ஏனென்றால் எண்ணத்தில் கூட கொஞ்சம் அம்சம் மாத்திரம் ஏதாவது விதமான தூய்மையின்மை இருக்கிறது என்றால், எங்கு தூய்மையின்மையின் அம்சம் இருக்கிறதோ அங்கே தூய்மையான தந்தையின் நினைவு என்னவாக இருக்கிறதோ, எப்படி இருக்கிறதோ அப்படி வர முடியாது. எப்படி பகலும் இரவும் சேர்ந்து இருக்க முடியாது. எனவே தற்சமயம் பாப்தாதா தூய்மையின் மேல் அடிக்கடி கவனத்தை ஈர்க்கிறார். கொஞ்ச காலத்திற்கு முன்பு செயலில் தூய்மையின்மை இருப்பதைப் பற்றி சமிக்ஞை கொடுத்தார் ஆனால் இப்பொழுது காலம் சம்பூர்ணத்தின் அருகில் வந்து கொண்டிருக்கிறது. எனவே மனதின் அம்ச மாத்திரம் தூய்மையின்மை கூட ஏமாற்றம் கொடுத்து விடும். எனவே எண்ணம், சொல், செயல், உறவு தொடர்பு அனைத்திலும் தூய்மையின் மிக அவசியம் ஆகும். மனதில் எழும் எண்ணங்களை லேசாக விட்டு விடாதீர்கள். ஏனென்றால் மனதின் எண்ணம் வெளியிலிருந்து தென்படுவதில்லை ஆனால் மனதின் எண்ணம் மிகுந்த ஏமாற்றம் கொடுக்கிறது. பிராமண வாழ்க்கையில் ஆழ்மனதின் ஆஸ்தியான நிரந்தர சுக சொரூபம், அமைதி சொரூபம், மனதின் திருப்தி அதை அனுபவம் செய்வதற்காக மனதின் எண்ணத்தில் தூய்மை இருக்க வேண்டும். வெளிமுகமான சாதனங்கள் அல்லது சேவை மூலமாக தன்னைத் தானே குஷி படுத்துவது - இதுவும் தனக்கு ஏமாற்றம் கொடுப்பது. சில நேரம் குழந்தைகள் தன்னை இதன் ஆதாரத்தில் நன்றாக இருக்கிறேன் என்று நினைத்துக் கொண்டு, குஷியாக இருக்கிறேன் என்று தங்களுக்கத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறார்கள். பாப்தாதா பார்க்கிறார்கள். ஏமாற்றுகிறார்கள். ஏமாறிக் கொண்டும் இருக்கிறார்கள். இதுவும் ஒரு நுண்ணியமான இரகசியம். என்ன ஆகிறது என்றால் தந்கை வள்ளல், தந்தையின் குழந்தைகள், அப்படியென்றால் சேவையில் யுக்தியோடு செய்யவும் இல்லை. கலப்படமாக இருக்கிறது. சிலவை நினைவில் இருக்கிறது. மேலும் சில வெளிப்படையான சாதனங்கள் மற்றும் குஷியின் ஆதாரத்தில் இருக்கிறது. இதயத்தின் ஆதாரத்தில் இல்லை ஆனால் புத்தியின் ஆதாரத்தில் சேவை செய்கிறார்கள் என்றால், சேவையின் பிரத்யக்ஷ பலன் அவர்களுக்கும் கிடைக்கிறது, தந்தை வள்ளல் மேலும் ஆஹா ! எனக்கோ பலன் கிடைத்து விட்டது, என்னுடைய சேவை மிக நன்றாக இருந்தது என்று அவர்கள் இதிலேயே குஷியாக இருக்கிறார்கள் ஆனால் மனதின் திருப்தி எப்பாழுதும் இருப்பதில்லை. மேலும் ஆத்மா

# 1999 அவ்யக்த முரளி

யோக சொரூப சக்திசாலியான நினைவின் அனுபவம் செய்ய முடிவதில்லை. அதிலிருந்து வஞ்சிக்கப்பட்டு இருந்து விடுகிறார்கள். மற்றபடி ஒன்றுமே கிடைப்பதில்லை என்று அப்படியில்லை. ஏதாவது கிடைக்கிறது, ஆனால் சேமிப்பு ஆவதில்லை. சம்பாதித்தார், சாப்பிட்டார் மற்றும் முடிந்தது. எனவே இந்த கவனத்தையும் வைக்க வேண்டும். மிக நன்றாக சேவை செய்து கொண்டிருக்கிறேன். பலனும் நல்லதாக கிடைத்து விட்டது என்றால் சாப்பிட்டேன் மற்றும் முடித்து விட்டேன். சேமிப்பு என்ன ஆனது. நன்றாக சேவை செய்தீர்கள். நல்ல ரிசல்ட் கிடைத்தது, ஆனால் அது சேவைக்கான பலன் மட்டும் கிடைத்தது, சேமிப்பாவதில்லை. எனவே சேமிப்பதற்கான விதி எண்ணம், சொல், செயலில் தூய்மை! தூய்மை தான் அஸ்திவாரம் ஆகும். சேவையிலும் அஸ்திவாரம் தூய்மை ஆகும். சுத்தமாக இருக்க வேண்டும், தெளிவாக இருக்க வேண்டும். வேறு எந்த உணர்வும் கலப்படம் ஆகக்கூடாது. உணர்விலும் தூய்மை, உள்நோக்கத்திலும் தூய்மை. ஹோலியின் அர்த்தமே தூய்மை. தூய்மையின்மையை எரிக்க வேண்டும். எனவே முதலில் எரிக்கிறார்கள், பிறகு கொண்டாடுகிறார்கள். மேலும் தூய்மையாகி சம்ஸ்கார இணைப்பைக் கொண்டாடுகிறார்கள். அப்படி ஹோலியின் அர்த்தமே எரிப்பது மற்றும் கொண்டாடுவது வெளி உலகத்தினரோ கட்டிப் பிடிப்பார்கள், ஆனால் இங்கு சம்ஸ்காரம் இணைவது, இது தான் மங்களமான இணைப்பாகும். அந்த மாதிரி ஹோலி கொண்டாடினீர்களா அல்லது நடனம் மட்டும் ஆடினீர்களா? பன்னீர் தெளித்தீர்களா? அதுவும் நல்லது தான். நன்றாகக் கொண்டாடுங்கள். பன்னீர் தெளியுங்கள். நடனம் நன்றாக ஆடுங்கள். பாப்தாதா குஷியடைகிறார் ஆனால் நிரந்தரமாக நடனம் ஆடுங்கள். 5-10 நிமிடங்களுக்கு மட்டும் நடனமாடாதீர்கள். ஒவ்வொருவரின் மேலும் குணங்களின் எண்ண அலைகளைப் பரப்புவது என்பது தான் பன்னீர் தெளிப்பது. மேலும் எரிப்பதையோ என்ன எரிக்க வேண்டும் என்று நீங்கள் தெரிந்தே இருக்கிறீர்கள். இதுவரையிலும் எரித்துக் கொண்டே இருக்கிறீர்கள். ஒவ்வொரு வருடமும் கையை உயர்த்தி விட்டுச் செல்கிறீர்கள். உறுதியான எண்ணம் எடுத்தாகி விட்டது என் அளவு இதைப் பார்த்து பாப்தாதா குஷி அடைகிறார். ஏனென்றால் தைரியமோ வைக்கிறார்கள் இல்லையா? அப்படி தைரியத்திற்காக பாப்தாதா வாழ்த்துக்களும் கூறுகிறார். தைரியம் வைப்பதும் முதல் அடி ஆகும் ஆனால் பாப்தாதாவின் நல்ல விருப்பம் என்ன? நேரத்தின் தேதியை

பார்க்காதீர்கள். 2000-ம் ஆண்டு ஆகுமா, 2001-ல் ஆகுமா, 2005-ல் ஆகுமா என்று இதை யோசிக்காதீர்கள். எவரெடியாக ஆகவில்லை என்றாலும் பரவாயில்லை, இதையும் தந்தை விட்டு விடுகிறார் ஆனால் நீண்ட காலத்து சம்ஸ்காரமோ வேண்டும் இல்லையா? இதை யோசித்துப் பாருங்கள். நீங்களும் மற்றவர்களுக்கு நீண்ட காலத்து முயற்சி, நீண்ட காலத்து இராஜ்ய அதிகாரி ஆக்குகிறது என்று கூறுகிறீர்கள். ஒருவேளை நேரம் வரும்பொழுது திட எண்ணம் வைத்தீர்கள் என்றால் அது நீண்ட காலமாக ஆனதா அல்லது அற்ப காலமாக ஆனதா? எதில் எடுத்துக் கொள்ளப்படும்? அற்ப காலத்தில் இருக்கும் இல்லையா? அப்படியானால் அழியாத தந்தையிடமிருந்து ஆஸ்தியாக என்ன அடைந்தீர்கள்? அற்ப காலத்திற்காக. இது நன்றாக இருக்கிறதா? இல்லை தான் இல்லையா? எனவே நீண்ட காலத்திற்கான பயிற்சி வேண்டும். எவ்வளவு காலம் இருக்கிறது என்ற அதை யோசிக்காதீர்கள். எந்த அளவு நீண்ட காலத்தின் பயிற்சி இருக்குமோ அந்த அளவே இறுதியிலும் ஏமாற்றம் அடைய மாட்டீர்கள். நீண்ட காலத்துப் பயிற்சி இல்லை என்றால், இப்பொழுதைய நீண்ட காலத்தின் சுகம், நீண்ட காலத்தின் உயர்ந்த நிலையின் அனுபவத் திலிருந்தும் வஞ்சிக்கப்பட்டு விடுவீர்கள். எனவே என்ன செய்ய வேண்டும்? நீண்ட காலம் செய்ய வேண்டும்? ஒருவேளை யாருடைய புத்தியிலாவது தேதிக்காக காத்திருப்பது இருக்கிறது என்றால் காத்திருக் காதீர்கள். ஏற்பாடுகள் செய்யுங்கள். நீண்ட காலத்து ஏற்பாடுகள் செய்யங்கள். தேதியையும் நீங்கள் தான் கொண்டு வர வேண்டும். நேரமோ இப்பொழுது கூட தயாராக இருக்கிறது. நாளை கூட நடக்க வேண்டும் ஆனால் நேரம் உங்களுக்காக நின்று கொண்டிருக்கிறது. நீங்கள் சம்பன்னம் ஆனீர்கள் என்றால் நேரத்தின் திரைச்சீலை அவசியம் விலகத் தான் வேண்டும். நீங்கள் நிறுத்தியதினால் நின்று கொண்டிருக்கிறது, இராஜ்ய அதிகாரியோ தயாராக இருக்கிறீர்கள் இல்லையா? ஆசனத்தை காலியாக வைக்கக்கூடாது தான் இல்லையா? தனியாக விஷ்வ மகாராஜன் ஆசனத்தில் அமருவாரா என்ன? இது அழகாக இருக்குமா என்ன? இராயல் குடும்பத்தினர் வேண்டும், பிரஜை வேண்டும் அனைத்தும் வேண்டும். உலக மகாராஜன் மட்டும் ஆசனத்தில் அமர்ந்து எங்கே சென்றது என்னுடைய இராயல் குடும்பம் என்று பார்த்துக் கொண்டே இருப்பதா? எனவே பாப்தாதாவின் ஒரே ஒரு நல்விருப்பம் தான் இருக்கிறது. அனைத்து குழந்தைகளும் புதியவர்களானாலும்

அல்லது பழையவர்களானாலும், யாரெல்லாம் தன்னை பிரம்மா குமாரி அல்லது பிரம்மா குமார் என்று கூறுகிறார்களோ அவர் மதுபன் நிவாசியானாலும் அல்லது வெளிநாட்டவரானாலும் அல்லது பாரதவாசியானாலும். ஒவ்வொரு குழந்தையும் நீண்ட காலத்து பயிற்சி செய்து நீண்ட காலத்து அதிகாரி ஆக வேண்டும் சில (நேரத்திற்காக அல்ல). இது விருப்பமா? ஒரு கையின் கைதட்டுங்கள், பின்னால் அமர்ந்திருப்பவர்கள் புத்திசாலிகள், கவனமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பாப்தாதா பின்னால் அமர்ந்திருப்பவர்களை தன் எதிரில் பார்த்துக் கொண்டிருக்கிறார். முன்னால் இருப்பவர்களோ முன்னால் இருக்கவே இருக்கிறார்கள் (மெடிடேஷன் ஹாலில் அமர்ந்து முரளி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்). கீழே அமர்ந்திருப்பவர்கள் பாப்தாதாவின் தலையின் கிரீடமாகி அமர்ந்திருக்கிறார்கள். அவர்களும் கைத்தட்டிக் கொண்டிருக்கிறார்கள். கீழே அமர்ந்திருப்பவர்களின் தியாகத்தின் பாக்கியமோ கிடைக்கத் தான் செய்யும். உங்களுக்கு நேரெதிரில் அமர்வதற்கான பாக்கியம் இருக்கிறது. மேலும் அவர்களுக்கு தியாகத்தின் பாக்கியம் சேமிப்பு ஆகிக் கொண்டிருக்கிறது. நல்லது. பாப்தாதாவின் ஒரு விருப்பத்தை கேட்டீர்களா? விருப்பம் தானே, இல்லையா? இப்பொழுது அடுத்த வருடத்தில் என்ன பார்ப்பீர்கள்? இந்த மாதிரியே மீண்டும் கை உயர்த்துவீர்களா? கையை நன்றாக உயர்த்துங்கள், இரு கைகளையும் உயர்த்துங்கள் ஆனால் மனதின் கையையும் உயர்த்துங்கள். திட எண்ணத்தின் கையை நிரந்தரமாக உயர்த்துங்கள்.

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் நெற்றியில் சம்பூர்ண தூய்மையாக ஜொலித்துக் கொண்டிருக்கும் மணிகளைப் பார்க்க விரும்புகிறார். கண்களில் தூய்மையின் ஜொலிப்பு, தூய்மையின் இரண்டு கண்களின் மணிகள் ஆன்மீகத்தில் ஜொலித்துக் கொண்டிருப்பதைப் பார்க்க விரும்புகிறார். வார்த்தையில் இனிமை, சிறப்பு நிறைந்தது. விலைமதிக்க முடியாத வார்த்தையை கேட்க விரும்புகிறார். காரியத்தில் திருப்தி, பணிவை எப்பொழுதம் பார்க்க விரும்புகிறார். பாவனையில் எப்பொழுதும் சுபபாவனையை மேலும் உணர்வில் எப்பொழுதும் ஆத்மீக உணர்வு சகோதரன்-சகோதரனின் உணர்வை பார்க்க விரும்புகிறார். உங்களுடைய நெற்றியிலிருந்து எப்பொழுதும் ஒளியின், ஃபரிஷ்தா தன்மையின் கிரீடம் தென்பட வேண்டும். தென்பட

வேண்டும் என்பதின் அர்த்தம் என்ன என்றால், அனுபவம் ஆக வேண்டும். அந்த மாதிரி அலங்கரிக்கப்பட்ட ரூபத்தைப் பார்க்க விரும்புகிறார். மேலும் அந்த மாதிரியானவர் தான் உயர்ந்த பூஜைக்குரியவர் ஆகுகிறார். அவர்களோ உங்களுடைய ஜட விக்கிரகங்களை உருவாக்குவார்கள் ஆனால் தந்தை சைத்தன்ய ரூபத்தைப் பார்க்க விரும்புகிறார். நல்லது.

நாலா புறமும் எப்பொழுதும் பாப்தாதாவுடன் இருக்கக் கூடிய, நெருக்கமான நிரந்தரமான துணைவர்களுக்கு, எப்பொழுதும் நீண்ட காலத்து முயற்சி மூலமாக நீண்ட காலத்து சங்கமயுக அதிகாரம் மற்றும் எதிர்கால இராஜ்ய அதிகாரத்தை பிராப்தி செய்யக்கூடிய, மிக புத்திசாலி குழந்தைகளுக்கு, எப்பொழுதும் தன்னுடைய சக்திகள், குணங்களினால் அலங்கரிக்கப்பட்டு இருக்கக்கூடிய, தந்தையின் விருப்பங்களின் தீப ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தன்னை ஹோலியஸ்ட் மற்றும் ஹையஸ்ட் நிலையில் நிலைத்திருக்கச் செய்யக்கூடிய தந்தைக்குச் சமமான மிக அன்பான ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: கர்மவினைகள் என்ற சூழ்நிலையின் ஈர்ப்பையும் அழிக்கக்கூடிய சம்பூர்ண பற்றுதலை வென்றவர் ஆகுக!

இதுவரையிலும் இயற்கை மூலமாக உருவாகியிருக்கும் சூழ்நிலைகள் மனநிலையை தன்பக்கம் கொஞ்சம் கொஞ்சம் ஈர்த்துக் கொண்டிருக்கிறது. அனைத்தையும் விட அதிகமாக தன்னுடைய உடலின் கணக்கு வழக்கு, மிச்சம் இருக்கும் கர்மவினையின் ரூபத்தில் வரக்கூடிய சூழ்நிலை தன் பக்கம் ஈர்க்கிறது. எப்பொழுது இந்த ஈர்ப்பும் முடிவடைந்து விடுமோ அப்பொழுது தான் முழுமையான பற்றுதலை வென்றவர் என்று கூறுவோம். எந்தவொரு உடலின் மற்றும் உடல் உலகத்தின் சூழ்நிலை ஆத்ம நிலையை அசைக்க முடியக்கூடாது. இது தான் சம்பூர்ண நிலை ஆகும். எப்பொழுது அந்த நிலை வரை சென்றடைந்து விடுவீர்களோ அப்பொழுது ஒரு நொடியில் தன்னுடைய மாஸ்டர் சர்வ சக்திவான் சொரூபத்தில் சுலபமாக நிலைத்திருக்க முடியும்.

சுலோகன்: தூய்மையின் விரதம் அனைத்தையும் விட உயர்ந்த சத்திய நாராயணனின் விரதம் ஆகும். இதில் தான் அதீந்திரிய சுகம் நிரம்பியிருக்கிறது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 15.03.1999 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கர்மாதீத் நிலை வரை சென்றடைவதற்காக கட்டுப்படுத்தும் சக்தியை அதிகரியுங்கள், சுயராஜ்ய அதிகாரி ஆகுங்கள்!

இன்று பாப்தாதா நாலா புறமும்ளிலுமுள்ள தன்னுடைய பரமாத்மா அன்பிற்குரிய இராஜா குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார். இந்த பரமாத்மாவின் அன்பு மற்றும் பரமாத்மாவின் வளர்ப்பு மிகக் குறைந்த குழந்தைகளுக்குத்தான் கிடைக்கிறது. மிகக் குறைந்தவர்கள் அந்த மாதிரியான பாக்கியத்திற்கு உரியவர்கள் ஆகிறார்கள். அந்த மாதிரி பாக்கியம் நிறைந்த குழந்தைகளைப் பார்த்து பாப்தாதாவும் மகிழச்சி அடைகிறார். இராஜ்துலாரே என்றால் இராஜா குழந்தைகள். அப்படியானால் தன்னை இராஜா என்று நினைக்கிறீர்களா? உங்களுடைய பெயரே இராஜயோகி அப்படி இராஜயோகி என்றால் இராஜா குழந்தைகள். தற்சமயத்திலும் இராஜாவாக இருக்கிறீர்கள் மற்றும் எதிர்காலத்திலும் இராஜா ஆவீர்கள். தன்னுடைய இரட்டை இராஜபதவியை அனுபவம் செய்கிறீர்கள் தான் இல்லையா? நான் இராஜாவாக இருக்கிறேனா என்று தன்னைத்தானே பாருங்கள்? சுயராஜ்ய அதிகாரியாக இருக்கிறேனா? ஒவ்வொரு இராஜ்யத்தின் காரியம் செய்பவர்கள் உங்களுடைய கட்டளைப்படி காரியம் செய்து கொண்டிருக்கிறார்களா? இராஜாவின் விசேஷமாக என்ன இருக்கிறது என்ற அதையோ தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? ரூலிங் பவர் (ஆளுமை சக்தி) மற்றும் கன்ட்ரோலிங் பவர் (கட்டுப்படுத்தும் சக்தி)

இரண்டு சக்திகளும் உங்களிடம் இருக்கின்றனவா? என்னுடைய இராஜ்ய நடவடிக்கைகள் எப்பொழுதும் எனது கட்டுப்பாட்டிற்குள் இருந்து நடந்து கொண்டிருக்கின்றனவா என்று தன்னைத் தானே கேளுங்கள்?

இன்று பாப்தாதா குழந்தைகளின் கன்ட்ரோலிங் பவர் மற்றும் ரூலிங் பவரை சோதனை செய்து கொண்டிருந்தோம். அதில் என்ன பார்த்திருந்திருப்போம் என்பதைக் கூறுங்கள். நீங்கள் ஒவ்வொருவருமே தெரிந்தும் இருக்கிறீர்கள். இப்பொழுது கூட இடைவிடாத இராஜ்ய அதிகாரம் அனைவருக்கும் இல்லை என்று பாப்தாதா பார்த்தார். இடைவிடாத. இடையிடையே துண்டிக்கப்பட்டு விடுகிறது. ஏன்? எப்பொழுதும் சுயராஜ்யத்திற்குப் பதிலாக பிற இராஜ்யமும் கண்டித்து விடுகிறது. பிற இராஜ்யத்தின் அடையாளம் -இந்த கர்மேந்திரியங்கள் மற்றதின் அடிமையாகி விடுகிறது. மாயாவின் இராஜ்யத்தின் பிரபாவம் மற்றதின் அடிமையாக்குவது. தற்சமயம் மிகக் குறைந்தவர்களே சரியாக இருக்கிறார்கள், ஆனால் மிக அதிகமானவர்கள் மாயாவின் தற்காலத்திய விசேஷ பிரபாவத்தில் வந்து விடுகிறார்கள். ஆதி மற்றும் அனாதி சம்ஸ்காரமாக என்ன இருக்கிறதோ அதன் இடையிடையே மத்தியத்தின் அதாவது துவாபரயுகத்திலிருந்து இப்பொழுது வரைக்குமான சம்ஸ்காரத்தின் பிரபாலத்தில் வந்துவிடுகிறார்கள். சுயத்தின் சம்ஸ்காரமே சுயராஜ்யத்தைத் துண்டித்து விடுகிறது. அதிலேயும் விசேஷ சம்ஸ்காரமாக வீணாக நிளைப்பது, வீளாக நேரத்தை இழப்பது மேலும் வீணான பேச்சு வார்த்தையில் வருவது அவைகளை கேட்பதானாலும் சரி, கூறுவதானாலும் சரி! ஒருபக்கம் வீணான சம்ஸ்காரம், இன்னொரு பக்கம் அலட்சியத்தின் சம்ஸ்காரம் பற்பல இராயல் ரூபத்தில் சுயராஜ்யத்தைத் துண்டித்து விடுகிறது. அனேக குழந்தைகள் (நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது ஆனால் எந்த சம்ஸ்காரம் தொடக்கத்தில் எங்களுக்குள் வெளிப்படவில்லையே அது இப்பொழுது சில நேரம் வெளிப்பட்டு விடுகின்றன என்று கூறுகிறார்கள். வாயுமண்டலத்தில் சம்ஸ்காரம் இன்னும் அதிகமாக வெளிப்படுகிறது இதற்கான காரணம் என்ன? இது மாயாவின் தாக்குதலின் ஒரு சாதனம் ஆகும். மாயா இதன் மூலமாகத் தான் தன்னுடையவராக்கி பரமாத்மா மார்க்கத்திலிருந்து மனமுடைந்து போகுபவர் ஆக்கி விடுகிறது. இன்று

வரையிலும் அதே போலவே இருக்கிறோம் என்றால் சமநிலையின் வெற்றி கிடைக்குமா அல்லது கிடைக்காதா, தெரியவில்லை என்று யோசிக்கிறார்கள். ஏதாவது விஷயத்தில் எங்கு பலஹீனம் இருக்குமோ அதே பலஹீனத்தின் ரூபத்தில் மாயா மனமுடைந்தவராக ஆக்குவதற்கு முயற்சி செய்கிறது. மிக நன்றாக இருந்து கொண்டிருக்கும் போதே ஏதாவது ஒரு விஷயத்தில் மாயா சம்ஸ்காரத்தில் தாக்குதல் செய்து பழைய சம்ஸ்காரத்தை வெளிப்படுத்தும் நிலையின் மூலம் ரூபத்தை வைத்து மனமுடைந்து போகச் செய்வதற்கு முயற்சி செய்கிறது. இறுதியில் அனைத்து சம்ஸ்காரங்களும் அகன்று விட வேண்டும். ஆகையால் சில நேரம் மிச்சமிருக்கும் சம்ஸ்காரம் வெளிப்பட்டு விடுகின்றன ஆனால் பாப்தாதா பாக்கியவான் குழந்தைகள் உங்கள் அனைவருக்கும் பயப்படாதீர்கள். மாயாவின் செயல்களை புரிந்து கொள்ளுங்கள் என்று சமிக்ஞை கொடுக்கிறார். சோம்பல் மற்றும் வீணானவை இதில் எதிர்மறையும் வந்த விடுகிறது - இந்த இரண்டு விஷயங்களில் விசேஷ கவனம் வையுங்கள். இவை தான் தற்சமயம் மாயா தாக்குதல் செய்யும் முறையாகும் என்று புரிந்து கொள்ளுங்கள்.

தந்தையின் துணையின் அனுபவம், இணைந்திருப்பதின் அனுபவத்தை வெளிப்படுத்துங்கள். தந்தையோ என்னுடையவரே தான், என் கூடவே தான் இருக்கிறார் என்று அப்படிமட்டுமல்ல. துணையின் நடைமுறை அனுபவத்தை வெளிப்படுத்துங்கள். பிறகு இந்த மாயாவின் தாக்குதல் தாக்குதலாக இருக்காது, மாயா தோல்வி அடைந்து விடும். இது மாயாவின் தோல்வி ஆகுமேயன்றி தாக்குதல் இல்லை. என்னவாகி விட்டது, ஏன் ஆனது என்று மட்டும் பயப்படாதீர்கள். தைரியம் வையுங்கள், தந்தையின் துணையை நினைவில் வையுங்கள். தந்தையின் துணை இருக்கிறதா என்று சோதனை செய்யுங்கள். துணையின் அனுபவம் உள்ளடங்கிய மறைந்த ரூபத்தில் இல்லையே? தந்தை உடன் இருக்கிறார் என்ற ஞானம் இருக்கிறது. ஞானத்தின் கூடவே தந்தையின் சக்தியாக என்ன இருக்கிறது? அனைத்து சக்திகளும் நிறைந்தவர் என்றால் அனைத்து சக்திகளை வெளிப்படும் ரூபத்தில் அனுபவம் செய்யுங்கள். இதைத் தான் தந்தையின் துணையின் அனுபவம் ஆவது என்று சொல்வது. தந்தையைத் தவிர எனக்கு வேறு யார் இருக்கிறார்கள், தந்தை மட்டும் தானே இருக்கிறார்

என்று விரக்தியாக ஆகாதீர்கள். எப்பொழுது தந்தை மட்டும் தான் இருக்கிறார் என்றால் அந்த சக்தி இருக்கிறதா? எப்படி உலகத்தினருக்கு ஒருவேளை பரமாத்மா எங்கும் வியாபித்திருக்கிறார் என்றால், பரமாத்மாவின் குணம் அனுபவம் ஆக வேண்டும், தென்பட வேண்டும் என்று கூறுகிறீர்கள். எனவே பாப்தாதாவும் உங்களிடம் கேட்கிறார், ஒருவேளை தந்தை துணையாக இருக்கிறார், இணைந்து இருக்கிறார் என்றால், அந்த சக்தி நீங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் அனுபவம் ஆகிறதா? மற்றவர்களுக்கும் அனுபவம் ஆகிறதா? என்ன நினைக்கிறீர்கள்? வெளிநாட்டினர் என்ன நினைக்கிறீர்கள் சக்தி இருக்கிறதா? எப்பொழுதுமே இருக்கிறதா? முதல் கேள்விக்கோ அனைவரும் ஆம் என்று பதில் கூறுகிறார்கள். பிறகு இரண்டாவது கேள்வி எப்பொழுதுமே இருக்கிறதா என்பது வரும் போது யோசிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். அப்படியானால் இடைவிடாது துண்டிக்கப்படாததாக இல்லை தான் இல்லையா? நீங்கள் அனைவரிடமும் என்ன சவால் விடுகிறீர்கள். துண்டுபடாத இராஜ்யத்தை ஸ்தாபனை செய்கிறீர்களா அல்லது துண்டுபட்ட இராஜ்யத்தை ஸ்தாபனை செய்கிறீர்களா? என்ன செய்கிறீர்கள்? துண்டுபடாதது தான் இல்லையா? துண்டுபடாதது தான் என்று ஆசிரியர்கள் கூறுங்கள். அப்படியானால் துண்டுபடாத சுயராஜ்யம் இருக்கிறதா என்று இப்பொழுது சோதனை செய்யுங்கள். இராஜ்யத்தை அதாவது பலனாக பிராப்தியை நீண்ட காலத்திற்குப் பெற வேண்டுமா அல்லது இடையிடையே துண்டிக்கப்பட்டது என்றாலும் ஒன்றும் பாதகமில்லையா? அந்த மாதிரி விரும்புகிறீர்களா? பெறுவதிலோ நிரந்தரமாக வேண்டும் மற்றும் முயற்சி செய்வதில் சில நேரம் இருக்கிறது, என்று அப்படியா? வெளிநாட்டினருக்கு தங்களுடைய வாழ்க்கையின் அகராதியிலிருந்து சம் டைம் (சில நேரம்) மற்றும் சம் திங் (சில விஷயங்கள்) என்ற வார்த்தையை அகற்றி விடுங்கள் என்று கூறியிருந்தோம் இல்லையா? இப்பொழுது சம் டைம் அகன்று விட்டதா? ஜெயந்தி நீங்கள் கூறுங்கள். ரிசல்ட்டை நீங்கள் பார்த்தீர்கள் இல்லையா? அப்படியானால் சம் டைம் அகன்று விட்டதா? உங்களில் யார் சம் டைம் என்ற வார்த்தை நிரந்தரமாக எங்களிடமிருந்து அகன்று விட்டது என்று நினைக்கிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். அகன்று விட்டதா அல்லது அகன்று விடுமா? கையை உயர்வாகத் தூக்குங்கள். வதனத்தில் இருக்கும் தொலைக்காட்சியிலோ

உங்களுடைய கை வந்து விட்டது. இங்கே உள்ள தொலைக்காட்சியில் அனைவரின் கை வருவதில்லை. இது கலியுகத்தின் தொலைக்காட்சி இல்லையா, அது மந்திர சக்தி நிறைந்த தொலைக்காட்சி ஆகும். எனவே வந்து விடுகிறது. மிக நல்லது, இருந்தும் அனேகர்கள் கையை உயர்த்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு சதா காலத்திற்காக வாழ்த்துக்கள் உரித்தாகுக. நல்லது இப்பொழுது பாரதவாசிகள் யாருக்கு நடைமுறையில் எப்பொழுதுமே சுயராஜ்யம் இருக்கிறதோ, அனைத்து கர்மேந்திரியங்கள் சட்டம் மற்றும் ஒழுங்கில் இருக்கிறதோ அவர்கள் கையை உயர்த்துங்கள், உறுதியான கையை உயர்த்துங்கள். அனைவரின் நடுவில் சபையில் கையை உயர்த்தி இருக்கிறேன் என்று எப்பொழுதுமே நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பிறகு பாப்தாதாவிற்கு மிக இனிமையான பல விஷயங்கள் கூறுகிறார்கள். என்ன கூறுகிறார்கள்? பாபா நீங்களே (குழந்தைகள்) சிந்திருக்கிறீர்கள் இல்லையா! சில நேரம் மாயா வந்து விடுகிறது தான் இல்லையா? எனவே தனது கையின் கௌரவத்தை காப்பாற்றுங்கள். நல்லது. இருந்தும் தைரியம் வைத்திருக்கிறீர்கள் என்றால், தைரியத்தை ஒருபொழுதும் இழக்காதீர்கள். தைரியம் இருந்தால் பாப்தாதாவின் உதவியும் இருக்கவே இருக்கிறது.

தற்சமயத்திற்கு ஏற்றபடி தன் மேல், ஒவ்வொரு கர்மேந்திரியங்களின் மேல் அதாவது தனக்காக தன்னுடைய கட்டுப்படுத்தும் சக்தி என்ன வேண்டுமோ அது குறைவாக இருக்கிறது. இன்னும் அதிகம் வேண்டும் என்று இன்று பாப்தாதா பார்த்தார். பாப்தாதா குழந்தைகளின் ஆன்மீக உரையாடலைக் கேட்டு புன்முறுவலிட்டுக் கொண்டிருந்தார். நான்கு மணி நேரம் சக்திசாலியான நினைவு செய்ய முடிவதில்லை என்று கூறுகிறார்கள். எட்டு மணி நேரங்களிலிருந்து நான்கு மணி நேரமாக பாப்தாதா ஆக்கியிருக்கிறார். மேலும் குழந்தைகள் இரண்டு மணி நேரம் சரியாக இருக்கும் என்று கூறுகிறார்கள். அப்படியானால் கட்டுப்படுத்தும் சக்தி இருந்ததா? மேலும் இப்பொழுதிலிருந்தே ஒருவேளை இந்த பயிற்சி இல்லை என்றால் அந்த நேரம் மதிப்புடன் தேர்ச்சி அடைபவராக, இராஜ்ய அதிகாரியாக எப்படி ஆக முடியும்? ஆகவோ வேண்டும் தான் இல்லையா? குழந்தைகள் சிரிக்கிறார்கள். இன்று குழந்தைகளின் அதிகமான விஷயங்களை பாப்தாதா கேட்டார். பாப்தாதாவை சிரிக்கவும் வைக்கிறார்கள். டிரா∴பிக் கன்ட்ரோல் மூன்று

நிமிடங்கள் ஆவதில்லை, உடல் கட்டுப்பாட்டில் வந்து விடுகிறது, நின்று விடுகிறோம். பெயரோ மனதை கட்டுப்படுத்தக்கூடியது ஆனால் மனம் சில நேரம் கட்டுப்பாட்டில் வருகிறது. சில நேரம் ஆவதில்லை என்று கூறுகிறார்கள். இதற்கு என்ன காரணம்? கட்டுப்படுத்தும் சக்தியின் குறைவு இதை இப்பொழுது இன்னும் அதிகரிக்க வேண்டும். எப்படி கையை மேலே உயர்த்த விரும்புகிறீர்கள் என்றால் உயர்த்தி விடுகிறீர்கள் இல்லையா? கை முறிவு இல்லை என்றால் தூக்கி விடுகிறீர்கள். அதே போல் மனம் என்ற இந்த சூட்சும சக்தியும் கட்டுப்பாட்டில் வர வேண்டும் கொண்டு வரத்தான் வேண்டும். நில் என்று கட்டளை இடுகிறீர்கள் என்றால் நின்று விட வேண்டும் சேவையைப் பற்றி நினைத்தீர்கள், சேவையில் ஈடுபட்டு விட வேண்டும். பரந்தாமம் செல் என்றால் பரந்தாமம் சென்று விட வேண்டும். சூட்சும வதனம் செல் என்றால் ஒரு நொடியில் சென்று விட வேண்டும். என்ன நினைக்கிறீர்களோ அது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். இப்பொழுது இந்த சக்தியை அதிகரியுங்கள். இன்று இந்த சம்ஸ்காரத்தை விரட்டினேன், நேற்று அந்த சம்ஸ்காரத்தை விரட்டினேன் என்று சின்ன சின்ன சம்ஸ்காரங்களில், யுத்தம் செய்வதில் நேரத்தை இழக்காதீர்கள். கட்டுப்படுத்தும் சக்தியை தனக்குள் தாரணை செய்யுங்கள், தனித்தனியாக சம்ஸ்காரத்தின் மேல் நேரத்தை செலவழிக்க வேண்டியதாக இருக்க வேண்டாம். நினைக்கக்கூடாது. செய்யக்கூடாது, பேசக்கூடாது. நில். என்றால் நின்று விட வேண்டும். இது தான் கர்மாதீத் நிலை வரை வந்தடைவதற்கான விதி. அப்படியானால் கர்மாதீத் ஆக வேண்டும் இல்லையா? பாப்தாதாவும் நீங்களே தான் ஆக வேண்டும் என்றும் கூறுகிறார். வேறு யாரும் வர மாட்டார்கள். நீங்களே தான் ! உங்களைத் தான் உடன் அழைத்துச் செல்வோம் ஆனால் கர்மாதீத் நிலையில் உள்ளவர்களைத்தான் அழைத்துச் செல்வோம் இல்லையா? உடன் செல்வீர்களா அல்லது பின்னால் வருவீர்களா? (உடன் செல்வோம்). இதுவோ மிக நல்ல வார்த்தை கூறினீர்கள். உடன் செல்வீர்கள். கணக்கை முடித்து விடுவீர்களா? இதில் ஆம் என்று பதில் கூறவில்லை. கர்மாதீத் ஆகி உடன் செல்வீர்கள் இல்லையா? உடன் செல்வது என்றால் துணைவனாகி செல்ல வேண்டும். ஜோடியோ நல்லதாகத் தான் வேண்டுமா அல்லது பொருத்தமற்ற உயரமானதோ, உயரம் குறைவானதோ பரவாயில்லையா? சமமாக வேண்டும் இல்லையா?

எனவே கர்மாதீத் ஆக ஆகவே தான் வேண்டும். அப்படியானால் என்ன செய்வீர்கள்? இப்பொழுது தன்னுடைய இராஜ்யத்தை மிக நல்ல முறையில் பாதுகாத்துக் கொள்ளுங்கள். தினசரி தனது சபையை கூட்டுங்கள். நீங்கள் இராஜ்ய அதிகாரி அதாவது இராஜா தான் இல்லையா? எனவே தன்னுடைய சபையைக் கூட்டுங்கள். காரியம் செய்பவர்களிடம் நிலைமையை கேளுங்கள், அனைத்தும் கட்டுப்பாட்டில் இருக்கின்றனவா என்று சோதனை செய்யுங்கள். பிரம்மாபாபாவும் தினசரி சபையைக் கூட்டினார். அதே போல் செய்ய வேண்டும் இல்லையா? இவருக்குச் சொல்ல வேண்டும். காண்பிக்க வேண்டும். பிரம்மாபாபாவும் கடுமையாக உழைத்தார், தினசரி சபையைக் கூட்டினார். அதனால் கர்மாதீத் ஆனார். அப்படி இன்னும் எவ்வளவு காலம் வேண்டும்? அல்லது எவரெடியாக இருக்கிறீர்களா? இந்த நிலை மூலம் சேவையும் வேகமாக நடக்கும். ஏன்? ஒரே நேரத்தில் எண்ணம் சக்திசாலியாக, வார்த்தைகள் சக்திசாலியாக சம்மந்தம், தொடர்பில் நடத்தை மற்றும் முகம் சக்திசாலியாக இருக்கிறது. ஒரே நேரத்தில் இந்த மூன்று சேவையும் மிக வேகமாக முடிவைக் கொடுக்கும். இந்த வழி மூலம் சேவை குறைவாக இருக்கும் என்று அப்படி நினைக்காதீர்கள். சுலபமாக வெற்றி அனுபவம் ஆகும். மேலும் யாரெல்லாம் சேவைக்கு பொறுப்பாளர்களோ அவர்கள் அனைவரும் ஒருவேளை குழு ரூபத்தில்அந்த மாதிரி நிலையை உருவாக்குகிறார்கள் என்றால் உழைப்பு குறைவு, வெற்றி அதிகமாக இருக்கும். அப்படி கட்டுப்படுத்தும் சக்தியை அதிகரிப்பதற்கான விசேஷ கவனம் வேண்டும். எண்ணம், நேரம். சம்ஸ்காரம் அனைத்தின் மேல் கட்டுப்பாடு இருக்க வேண்டும். நீங்கள் அனைவரும் இராஜா குழந்தைகள் என்று பாப்தாதா பல தடவைகள் கூறியிருக்கிறார். எப்பொழுது விரும்புகிறீர்களோ, எப்படி விரும்புகிறீர்களோ, எங்கே விரும்புகிறீர்களோ, எவ்வளவு நேரம் விரும்புகிறீர்களோ அந்த மாதிரி மனமும், புக்தியும், சட்டம் மற்றும் ஒழுங்கில் இருக்க வேண்டும். நீங்கள் செய்யாதே என்று கூறுகிறீர்கள், இருந்தும் நடந்து விடுகிறது, செய்து கொண்டிருக்கிறீர்கள் என்றால் சட்டம் மற்றும் ஒழுங்கு இல்லை தான் இல்லையா? எனவே சுயராஜ்ய அதிகாரி தன்னுடைய இராஜ்யத்தை எப்பொழுதும் பிரத்யக்ஷ சொரூபத்தில் கொண்டு வாருங்கள். கொண்டு வர வேண்டும் இல்லையா? கொண்டு வந்து கொண்டும் இருக்கிறீர்கள், ஆனால் எப்பொழுதும் என்ற வார்த்தையை

சேர்த்துக் கொள்ளுங்கள் என்று பாப்தாதா கூறுகிறார். பாப்தாதா இப்பொழுது சந்திப்பதற்கான கடைசி வாய்ப்பில் வருவார், இன்னும் ஒரு வாய்ப்பு இருக்கிறது தான் இல்லையா? அந்த வாய்ப்பில் முடிவைக் கேட்டோம். பதினைந்து நாட்கள் இருக்கின்றன இல்லையா? அப்படி இந்த பதினைந்து நாட்களில் கொஞ்சமாவது காண்பிப்பீர்களே அல்லது இல்லையா? பதினைந்து நாட்களில் ரிசல்ட் இருக்குமா, டீச்சர்கள் கூறுங்கள். நல்லது. மதுபன்னைச் சேர்ந்தவர்கள் பதினைந்து நாட்களில் ரிசல்ட்டை காண்பிப்பீர்களா? ஆம் அல்லது இல்லை என்று இப்பொழுது கூறுங்கள். இப்பொழுது கையை உயர்த்துங்கள் (அனைவரும் கையை உயர்த்தினார்கள். தன்னுடைய கையின் கௌரவத்தைக் காப்பாற்றுங்கள். உங்களில் யார் முயற்சி செய்வோம் என்று நினைக்கிறீர்களோ, அந்த மாதிரி முயற்சி செய்யக்கூடியவர்கள் கையை உயர்த்துங்கள். ஞானசரோவர், சாந்திவனத்தைச் சேர்ந்தவர்கள், எழுந்திரியுங்கள் (பாப்தாதா மதுபன், ஞானசரோவர், சாந்திவனத்தின் முக்கிய பொறுப்பிலிருக்கும் சகோதர சகோதரிகளை தன் எதிரில் அழைத்தார்).

உங்கள் அனைவரையும் பாப்தாதா காட்சியாக காண்பிப்பதற்காக அழைத்திருக்கிறார். உங்கள் அனைவரையும் பார்த்து அனைவரும் குஷி அடைகிறார்கள். இப்பொழுது பாப்தாதா என்ன விரும்புகிறாரோ அதைக் கூறிக் கொண்டிருக்கிறோம், பாண்டவ பவன், சாந்திவன், ஞானசரோவர், ஹாஸ்பிடல் நான்கு இடங்கள் இருக்கின்றன. ஐந்தாவது மிகச் சிறியது. இந்த நான்கு இடங்களிலும் பாப்தாதாவிற்கு ஒரே ஒரு விருப்பம் இருக்கிறது. இந்த நான்கு இடங்களிலும் மூன்று மாதங்களுக்காக இடைவிடாத, தடையற்ற, உறுதியான சுயராஜ்ய அதிகாரி, இராஜாக்களின் ரிசல்ட்டைப் பார்க்க விரும்புகிறார். மூன்று மாதங்களிலும் அங்கங்கே இருந்து எந்தவொரு விஷயத்தையும் கேட்பதாக இருக்கக்கூடாது. அனைவரும் சுயராஜ்ய அதிகாரி நம்பர் மாதிரி இந்த மூன்று மாதங்களில் அந்த ரிசல்ட் இருக்க முடியுமா? (சகோதரர் நிர்வேரிடம்). பாண்டவர்கள் பக்கம் நீங்கள் இருக்கிறீர்கள். அப்படி நடக்க முடியுமா? தாதியோ இருக்கிறார்கள் ஆனால் கூடவே எதிரில் யாரெல்லாம் அமர்ந்திருக்கிறார்களோ அவர்கள் அனைவரும் இருக்கிறார்கள். அப்படி அந்த நிலை ஏற்பட முடியுமா? (அப்படி முடியும் என்று தாதி கூறுகிறார்கள்). பாண்டவ பவனைச் சேர்ந்தவர்கள்

அமர்ந்திருக்கிறீர்கள். கூறுங்கள் அந்த மாதிரி ஆக முடியுமா? கையை உயர்த்துங்கள். நல்லது. உதாரணமாக யாரோ ஒருவர் பலஹீனமாக இருக்கிறார், அவருக்கு ஏதோ ஆகி விடுகிறது என்றால், பிறகு நீங்கள் என்ன செய்வீர்கள். உடன் இருப்பவர்களுக்கும் துணையாக இருந்து, ரிசல்ட்டைக் காண்பிப்போம் என்று நினைக்கிறீர்களா, அந்த அளவு தைரியம் வைத்திருக்கிறீர்களா? அந்த மாதிரி செய்வீர்களா அல்லது தனக்காக மட்டும் தைரியம் இருக்கிறதா? மற்றவர்களின் விஷயத்தையும். உள்ளடக்க முடியுமா? அவருடைய தவறை உள்ளடக்க முடியுமா? சுற்றுப்புறத்தில் பரப்பாதீர்கள், உள்ளடக்கி விடுங்கள், இந்த அளவு செய்ய முடியுமா? ஆம் என்று சப்தமாக சொல்லுங்கள். வாழ்த்துக்கள் ! மூன்று மாதங்களுக்குப் பிறகு அறிக்கையை பார்ப்போம். எந்தவொரு இடத்திலிருந்தும், எந்தவொரு புகாரும் வரக்கூடாது. ஒவ்வொருவருக்கும் வைப்ரேஷன் கொடுத்து உள்ளடக்கி விட வேண்டும். அன்போடு வைப்ரேஷன் கொடுக்க வேண்டும். சண்டையிடக்கூடாது.

அதே போலவே இரட்டை வெளிநாட்டினரும் ரிசல்ட் கொடுப்பீர்கள் தான் இல்லையா? அனைவரும் அப்படி ஆக வேண்டும் தான் இல்லையா? இரட்டை வெளிநாட்டினரில் யார் தன்னுடைய சென்டரில், உடன் இருப்பவர்களுடன் மூன்று மாதங்களுக்கான ரிசல்ட்டை கொடுப்பீர்கள் என்று நினைக்கிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். யார் முயற்சி செய்வோம், சொல்ல முடியாது என்று நினைக்கிறீர்களோ அப்படி யாராவது இருக்கிறீர்கள் என்றால். கையை உயர்த்துங்கள். சுத்தமான இதயம் உள்ளவர்கள், சுத்தமான இதயம் உள்ளவர்களுக்கு உதவி கிடைக்கிறது. நல்லது.

நாலா புறமும்ளிலுமுள்ள அனைத்து சுயராஜ்ய அதிகாரிய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் துண்டுபடாத இராஜ்யத்திற்கு பாத்திரமான ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக கர்மாதீத் நிலை வரை சென்றடையக்கூடியவர்களுக்கு, தந்தையைப் பின்பற்றி நடக்கும் தீவிரமான முயற்சி செய்யும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் ஒவ்வொருவருக்கும் சுபபாவனை, சுபவிருப்பங்களின் சகயோகம் கொடுக்கும் நற்சிந்தனையாளர் குழந்தைகளுக்கு, அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

தாதிகளுடன்: பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்கள், உங்கள் மனதில் தீவிர முயற்சி செய்ய வேண்டும் என்ற எந்த எண்ணம் வெளிப்படுகிறதோ அது மற்றவர்களுக்கு பலம் கொடுத்து, நடக்கச் செய்து கொண்டிருக்கிறது. மனமுடைந்து போன ஆத்மாக்களில் பலத்தை நிரப்புகிறது. மேலும் அனைவரும் புதிய ஊக்கத்தைப் பெற்றுச் செல்கிறார்கள். என்ன நடந்தாலும் சரி, கொஞ்சம் பிரச்சனைகள் ஏற்பட்டாலும் கூட தன்னுடைய முயற்சி செய்வதற்கான ஊக்கத்தை பெரும்பான்மையோர் எடுத்துச் செல்கிறார்கள். எனவே மெது மெதுவாக அனைத்தும் சரியாகிக் கொண்டிருக்கிறது. ஆகி விடும். குறையாது. அதிகரித்துக் கொண்டே இருக்கும். நல்லது, பிரம்மாபாபாவின் துணைவர்களாக இருந்த குழந்தைகள் நல்ல துணையை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பாப்தாதாவிற்கும் பெருமிதமாக இருக்கிறது. ஒன்றும் குறைவில்லை. துணையாக இருந்து காரியம் செய்வதில் நல்ல பங்கை செய்து கொண்டிருக்கிறீர்கள். எனவே பாப்தாதா இருவர்களுமே தன்னுடைய துணையைக் கொடுத்து, துணைவர்களாக இருக்கும் குழந்தைகளுக்கு பலமுறை வாழ்த்துக்கள் என்ன கொடுப்போம், ஆசீர்வாதங்கள் கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். தங்களுடைய பங்கை நன்றாகச் செய்து கொண்டிருக்கிறீர்கள், சாகாரத்தில் தூண் ஆக ஆகியிருக்கிறீர்கள், அதன் ஆதாரத்தில் அனைவரும் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறார்கள். எனவே உங்களுடையது சகஜ முயற்சி ஆகும். ஆசீர்வாதங்களினால் உங்களுடைய கரைக்கு மிகவும் பெருகிக் கொண்டிருக்கிறது. நல்லது.

வரதானம்: ஆன்மீக சக்தியை ஒவ்வொரு காரியத்தில் உபயோகிக்கூடிய யுக்தியுக்த் ஜீவன்முக்த் ஆகுக!

இந்த பிராமண வாழ்க்கையின் விசேஷமே ஆன்மீக நிலை ஆன்மீகத்தின் சக்தி மூலமாகத் தான் தன்னை மற்றும் அனைவரையும் மாற்றம் செய்ய முடியம். இந்த சக்தி மூலம் அனேக விதமான உலகியல் பந்தனங்களிலிருந்து முக்தி கிடைக்கிறது ஆனால் யுக்தியக்த் ஆகி ஒவ்வொரு காரியத்தில் தொய்வு ஏற்படுவதற்குப் பதிலாக, ஆன்மீக சக்தியை உபயோகம் செய்யுங்கள். எண்ணம், சொல் மற்றும் செயல் மூன்றிலும் ஆன்மீகத்தின் சக்தியும் சேர்ந்தே அனுபவம்

ஆகட்டும். யார் மூன்றிலும் யுக்தியுக்த்தாக இருக்கிறாரோ அவர் தான் ஜீவன்முக்த்தாக இருக்கிறார்.

**சுலோகன்: சத்தியத்தின் விசேஷம் மூலமாக குஷி மற்றும் சக்தியை அனுபவம் செய்து கொண்டே இருங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺ ✺✺✺✺✺✺✺✺

## 30.03.1999 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தீவிர முயற்சி செய்வதின் முழு ஈடுபாட்டை ஜுவாலா ரூபம் ஆக்கி எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியத்தின் அலையைப் பரப்புங்கள்!

இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் நெற்றியில் மூன்று ரேகைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதில் ஒரு ரேகை பரமாத்மா பாலனையின் பாக்கியத்தின் ரேகை, இந்த பரமாத்மா பாலனையின் பாக்கியம் முழுக் கல்பத்தில் ஒரே ஒரு தடவை இப்பொழுது தான் கிடைக்கிறது. இந்த சங்கமயுகத்தைத் தவிர வேறு ஒருபொழுதும் பரமாத்மாவின் பாலனை கிடைக்க முடியாது. இந்த பரமாத்மா பாலனை வெகு குறைந்த குழந்தைகளுக்கு பிராப்தி ஆகிறது. இரண்டாவது ரேகை -பரமாத்மா படிப்பின் பாக்கியத்தின் ரேகை. பரமாத்மா படிப்பு எவ்வளவு உயர்ந்த பாக்கியம். அதை சுயம் பரமாத்மா ஆசிரியர் ஆகி படிப்பிக்கிறார். மூன்றாவது ரேகை -பரமாத்மா பிராப்திகளின் ரேகை. எவ்வளவு பிராப்திகள் என்று யோசித்துப் பாருங்கள். பிராப்திகளின் பட்டியல் எவ்வளவு நீளமானது என்று அனைவருக்கும் நினைவு இருக்கிறது தான் இல்லையா? அப்படி ஒவ்வொருவரின் நெற்றியில் இந்த மூன்று ரேகைகள் பிரகாசமாக இருக்கின்றன. அந்த மாதிரி பாக்கியம் நிறைந்த ஆத்மா என்று தன்னை நினைக்கிறீர்களா? பாலனை, படிப்பு மற்றும் பிராப்திகள். கூடவே பாப்தாதா குழந்தைகளின் நிச்சயத்தின் ஆதாரத்தில் ஆன்மீக போதையையும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு பரமாத்மாவின் குழந்தை எவ்வளவு ஆன்மீக போதையுள்ள ஆத்மாக்கள். முழு உலகத்தில் மேலும் முழு கல்பத்தில் அனைவரையும் விட உயர்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள், மிக தூய்மையானவர்களாகவும் இருக்கிறார்கள். மேலும் மகானாகவும்

இருக்கிறார்கள். உங்கள் மாதிரி தூய்மையான ஆத்மாக்களாக உடலாலும் மனதாலும் தூய்மையானவர்கள், மேலும் தேவதை ரூபத்தில் அனைத்து குணங்கள் நிரம்பியவர்கள் மற்றும் முழுமையான விகாரங்கள் அற்றவர்கள், அந்த மாதிரி வேறு யாரும் ஆவதில்லை. மேலும் மிக உயர்ந்தவர்களாகவும், மிகத் தூய்மையானவர்களாகவும் இருக்கிறீர்கள். கூடவே மிகச் செல்வந்தர்களாகவும் இருக்கிறீர்கள். பாப்தாதா ஸ்தாபனையின் தொடக்க காலத்திலும் குழந்தைகளுக்கு நினைவூட்டியிருந்தார். மேலும் உடனே செய்தித்தாள் களிலும் 'ஓம் மண்டலி உலகத்திலேயே மிக செல்வம் நிறைந்தது என்று செய்தி போட வைத்தார். இது ஸ்தாபனை காலத்தில் உங்கள் அனைவரின் மகிமை ஆகும். ஒரு நாளில் எவ்வளவு தான் சம்பாதிக்கும் மிகப் பெரிய பல மடங்கு கோடீஸ்வரனாக P.லகில் யாராவது இருந்தாலும் ஆனால் உங்கள் மாதிரி செல்வந்தர்களாக யாரும் இருக்க முடியாது. இவ்வளவு செல்வந்தனாக ஆவதற்கான வழி என்ன? மிகச் சிறிய வழி தான். மனிதர்கள் செல்வந்தனாக ஆவதற்காக எவ்வளவு உழைக்கிறார்கள். மேலும் நீங்கள் எவ்வளவு சுலபமாக அனைத்தும் நிறைந்தவர்களாக ஆகி விடுகிறீர்கள். வழியைத் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? சின்னஞ்சிறிய புள்ளியை மட்டும் போட வேண்டும் அவ்வளவு தான். புள்ளி இட்டீர்கள் மற்றும் வருமானம் ஏற்பட்டது. ஆத்மாவும் புள்ளி, தந்தையும் புள்ளி மற்றும் நாடகத்தில் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் அப்படி அதுவும் புள்ளி. அப்படி புள்ளி ஆத்மாவை நினைவு செய்தீர்கள். வருமானம் அதிகரித்தது. பொதுவாக உலகத்தில் கூட பார்த்தீர்கள் என்றால் பிந்து (பூஜ்யம்) இடுவதினால் தான் எண்ணிக்கை அதிகரிக்கிறது. ஒன்றின் எதிரில் பிந்து இட்டீர்கள் என்றால் என்னவாகி விடும்? 10. இரண்டு புள்ளி இடுங்கள், மூன்று புள்ளி இடுங்கள். நான்கு புள்ளிகள் இடுங்கள், மதிப்பு அதிகரித்துக் கொண்டே இருக்கும். அப்படி உங்களுடைய வழி எவ்வளவு கலபமானது. 'நான் ஆத்மா' இந்த நினைவின் புள்ளி இடுவது என்றால் பொக்கிஷம் சேமிப்பு ஆவது. பிறகு 'தந்தை என்ற புள்ளி இட்டீர்கள் என்றால் இன்னும் பொக்கிஷம் சேமிப்பாகிறது. காரியத்தில், உறவு நெருக்கத்தில் நாடகத்தின் முற்றுப்புள்ளி இட்டீர்கள் என்றால், இன்னும் பொக்கிஷம் அதிகரிக்கிறது. அப்படி முழு நாளில் எத்தனை தடவை புள்ளி இடுகிறீர்கள் என்பதைக் கூறுங்கள். மேலும் புள்ளி இடுவது எவ்வளவு

சுலபமானது. கடினமாக இருக்கிறதா என்ன? புள்ளி வழுக்கிச் சென்று விடுகிறதா என்ன?

பாப்தாதா வருமானத்திற்கான வழியாக புள்ளி இட்டுக் கொண்டே இருங்கள் என்பதை மட்டும் தான் கற்றுக் கொடுத்திருக்கிறார் என்றால் அனைவருக்கும் புள்ளி இடத்தெரியுமா? ஒருவேளை தெரியும் என்றால் ஒரு கை கைதட்டுங்கள். உறுதியாகத் தான் இல்லையா அல்லது சில நேரம் வழுக்கிச் சென்று விடுகிறதா? மேலும் சில நேரம் இடப்பட்டு விடுகிறதா? புள்ளி இடுவது அனைத்தையும் விட சுலபமானது, யாராவது இந்தக் கண்களால் குருடனாக இருந்தாலும், அவரும் ஒருவேளை காகிதத்தின் மேல் பென்சிலை வைத்தார் என்றால் புள்ளி இடப்பட்டு விடும். மேலும் நீங்களோ மூன்று கண்கள் உடையவர்கள். எனவே இந்த மூன்று புள்ளிகளை எப்பொழுதும் உபயோகியுங்கள். கேள்விக்குறி எவ்வளவு வளைந்ததாக இருக்கிறது, எழுதிப் பார்த்தீர்களா? வளைந்தது தான் இல்லையா? மேலும் புள்ளி எவ்வளவு சுலபமானது. எனவே பாப்தாதா குழந்தைகளை சமமாக ஆவதின் விதியை வேறு வேறு ரூபங்களில் கூறிக் கொண்டே இருக்கிறார். விதியே புள்ளி தான். வேறு எந்த விதியும் இல்லை. ஒருவேளை விதேகி (உடலற்றவராக) ஆகிறீர்கள் என்றால் கூட புள்ளி ஆவது தான் விதியாகும். அசரீரி ஆகிறீர்கள். கர்மாதீத் ஆகிறீர்கள் என்றால் அனைத்திற்கும் விதி புள்ளி. எனவே தான் அமிர்தவேளையில் பாப்தாதாவுடன் சந்திப்பு செய்கிறீர்கள், ஆன்மீக உரையாடல் செய்கிறீர்கள் மற்றும் எப்பொழுது காரியத்தில் வருகிறீர்கள் என்றால் முதலில் மூன்று புள்ளிகளின் திலகத்தை நெற்றியில் இடுங்கள். மற்றபடி அந்த சிகப்பு திலகத்தை இடும் காரியத்தை தொடங்கி விடாதீர்கள் ஆனால் நினைவின் திலகம் இடுங்கள், மேலும் எந்தக் காரணத்தினாலும் இந்த நினைவுத் திலகம் அழியக்கூடாது என்ற இந்த சோதனை செய்யுங்கள். அழியாத அழிக்க முடியாத திலகம். அப்படி இருக்கிறதா?

பாப்தாதா குழந்தைகளின் அன்பையும் பார்க்கிறார். எவ்வளவு அன்போடு ஓடோடி வந்து சந்திப்பதற்காக வந்து சேர்ந்திருக்கிறார்கள், பிறகு இன்று ஹாலிலும் சந்திப்பதற்காக எவ்வளவு கடினத்தோடு, எவ்வளவு அன்போடு, தூக்கம், தாகத்தையும் மறந்து முதல் நம்டரில்

அருகாமையில் அமர்வதற்கான முயற்சி செய்கிறீர்கள். பாப்தாதா அனைத்தையும் பார்க்கிறார்கள். என்னென்ன செய்கிறார்கள் அந்த அனைத்து நாடகத்தையும் பார்க்கிறார்கள். பாப்தாதா குழந்தைகளின் அன்பின் மேல் பலியும் ஆகிறார்கள். மேலும் குழந்தைகளிடம் எப்படி இந்த உலகத்தில் ஸ்தூலமாக சந்திப்பதற்காக ஓடி ஓடி வருகிறீர்கள். அதே போல் தந்தைக்குச் சமமாக ஆகுவதற்காகவும் தீவிர முயற்சி செய்யுங்கள் என்று இதையும் கூறுகிறார். இதிலும் எனக்கு அனைவரையும் விட முன்னுக்கு எண் கிடைக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள் தான் இல்லையா? அனைவருக்குமோ கிடைப்பதில்லை, இது பௌதீக உலகம் இல்லையா! அப்படி இவ்வுலகில் நியமங்கள் வைக்கதான் வேண்டிய திருக்கிறது. பாப்தாதா அந்த நேரம் அனைவருமே முன்னால் எதிரில் வந்து அமர்ந்து விடட்டுமே என்று தான் நினைக்கிறார் ஆனால் இது நடக்குமா? ஆகிக் கொண்டும் இருக்கிறது. எப்படி பின்னால் அமர்ந்திருப்பவர் களை பாப்தாதா எப்பொழுதும் கண்களில் நிரம்பியிருப்பதாக பார்க்கிறார், அப்படி அனைத்தையும் விட அருகில் இருப்பது கண். எனவே நீங்கள் பின்னால் அமர்ந்திருக்கவில்லை ஆனால் பாப்தாதாவின் கண்களில் அமர்ந்திருக்கிறீர்கள். கண்ணின் மணிகள் ஆவீர்கள் நீங்கள். பின்னால் அமர்ந்திருப்பவர்கள் கேட்டீர்களா? தூரத்தில் அமர்ந்திருக்கவில்லை அருகில் இருக்கிறீர்கள். உடலால் பின்னால் அமர்ந்திருக்கிறீர்கள் ஆனால் ஆத்மா அனைவரையும் விட அருகில் இருக்கிறது. மேலும் பாப்தாதாவோ மிக அதிகமாக பின்னால் இருப்பவர்களைத் தான் பார்க்கிறார். பாருங்கள் அருகில் அமர்ந்திருப்பவர்களுக்கு இந்த ஸ்தூல கண்களினால் பார்ப்பதற்கான இந்த வாய்ப்பு இருக்கிறது. மேலும் பின்னால் அமர்ந்திருப்பவர்களுக்கு இந்தக் கண்களால் அருகாமையில் பார்ப்பதற்கான வாய்ப்பு இல்லை. எனவே பாப்தாதா கண்களில் நிரப்பி வைத்து விடுகிறார்.

பாப்தாதா அனைத்தையும் பார்த்து புன்முறுவலிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். 2-மணி ஆனவுடனேயே வரிசையில் நிற்கத் தொடங்கி விடுகிறார்கள். குழந்தைகள் நின்று நின்று களைப்பும் அடைந்து விடுகிறார்கள் என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார் ஆனால் பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் அன்பின் மசாஜ் (காலை பிடித்துவிடுவது) செய்து விடுகிறார். கால்களில் மசாஜ் ஆகி விடுகிறது. பாப்தாதாவின்

மசாஜை பார்த்திருக்கிறீர்கள் தான் இல்லையா? மிகவும் வித்தியாசமானது மற்றும் அன்பானது. அப்படி இன்று அனைவரும் இந்த சீசனின் கடைசி வாய்ப்பை எடுத்துக் கொள்வதற்காக நாலா புறமும்மிலிருந்தும் ஓடோடி வந்து சேர்ந்து விட்டார்கள். நல்லது தான். தந்தையைச் சந்திப்பதற்கான ஊக்கம் உற்சாகம் எப்பொழுதும் முன்னேறச் செய்வித்துக் கொண்டிருக் கிறது ஆனால் பாப்தாதாவோ குழந்தைகளை ஒரு விநாடி கூட மறப்பதில்லை. தந்தை ஒருவர் மற்றும் குழந்தைகள் அனேகர் ஆனால் அனேசு குழந்தைகளையும் ஒரு விநாடி கூட மறப்பதில்லை. ஏனென்றால் காணாமல் போய் கிடைத்த குழந்தைகள் நீங்கள். பாருங்கள் பாரதம் மற்றும் வெளிநாடுகளில் எங்கெல்லாம் பல மூலைகளிலிருந்தும் தந்தை உங்களைத் தேடிக் கண்டுபிடித்திருக்கிறார். நீங்கள் தந்ததையைத் தேட முடிந்ததா? தேடிக் கொண்டே இருந்தீர்கள் ஆனால் சந்திக்க முடியவில்லை. மேலும் தந்தை பல பல தேசங்கள், கிராமங்கள், சந்துகள் என்று எங்கெல்லாம் தந்தையின் குழந்தைகள் இருக்கிறார்களோ அங்கிருந்து தேடிக் கண்டு பிடித்து விட்டார். தன்னுடைய குழந்தைகளாக ஆக்கி விட்டார். நான் பாபாவினுடையவன் மற்றும் பாபா என்னுடையவர் என்ற பாடலைப் பாடுகிறீர்கள் தான் இல்லையா? யாருடைய ஜாதியையும் பார்க்கவில்லை. தேசத்தையும் பார்க்கவில்லை. நிறத்தையும் பார்க்கவில்லை, அனைவரின் நெற்றியில் ஒரே ஒரு ஆன்மீக வண்ணத்தைத் தான் பார்த்தோம் - ஜோதி பிந்து. இரட்டை வெளிநாட்டினர் என்ன நினைக்கிறீர்கள்? தந்தை ஜோதியைப் பார்த்தாரல்லவா ! கருப்பாக இருக்கிறார், வெள்ளையாக இருக்கிறார், அழகாக இருக்கிறார், அழகற்றவராக இருக்கிறார் என்று எதையும் பார்க்கவில்லை. என்னுடைய குழந்தை என்று இதைப் பார்த்தார். அப்படியானால் தந்தையின் அன்பு இருக்கிறதா அல்லது உங்களுடைய அன்பு இருக்கிறதா? யாருடையது இருக்கிறது? (இருவர்களினுடையதும் இருக்கிறது). குழந்தைகளும் பதில் கூறுவதில் சாதுர்யமானவர்கள். பாபா அன்பு மூலம் அன்பு இழுக்கிறது என்று நீங்களே தான் கூறுகிறீர்கள் என்று கூறுகிறார்கள் அப்படி உங்களுடைய அன்பு இருக்கிறது என்றால் எங்களுடையதும் இருக்கிறது. அதனால் தானே ஈர்க்கிறது, குழந்தைகளும் சாதுர்யமானவர்கள். மேலும் இவ்வளவு தைரியம், ஊக்கம் உற்சாகம் வைக்கும் குழந்தைகள் என்று தந்தைக்கும் குஷி இருக்கிறது. பாப்தாதாவிடம் நிறைய

குழந்தைகளிடமிருந்து 15-நாட்களின் ரிசல்ட்டாக சார்ட் வந்திருக்கிறது. நாலா புறமும்ளின் ரிசல்ட்டில் பெரும்பான்மையான குழந்தைகளிடம் கவனம் இருந்தது என்ற ஒரு விஷயத்தைப் பாப்தாதா பார்த்தார்கள். சதவிகிதம் எந்த அளவு அவர்களே விரும்பிகிறார்களோ அந்த அளவு இல்லை, ஆனால் கவனம் இருந்தது. மேலும் யார் தீவிர முயற்சி செய்யும் குழந்தைகளோ அவர்கள் உள்ளப்பூர்வமாக தங்களுடைய உறுதிமொழியை நிறைவேற்றும் லட்சியத்தோடு முன்னேறிச் சென்று கொண்டும் இருக்கிறார்கள். மேலும் முன்னேறிச் சென்று கொண்டே லட்சியத்தையும் சென்றடைந்தே விடுவார்கள். குறைந்தவர்கள் இப்பொழுது கூட அலட்சியத்தின் மற்றும் சில நேரம் சோம்பலின் வசமாகி கவனமும் குறைவாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஒரு விசேஷ சுலோகன் இருக்கிறது. ஆகியே விடும். சென்றே விடுவோம், செல்லத்தான் வேண்டும் என்றில்லாமல் சென்று விடுவோம். ஆகி விடும் என்ற இது அலட்சியம்! செல்லத் தான் வேண்டும் சென்றே தீருவோம் -இது தீவிர முயற்சி பாப்தாதா அதிகமான உறுதிமொழிகளைக் கேட்கிறார், அடிக்கடி மிக நல்ல நல்ல உறுதிமொழிகளை அதிகமாகச் செய்கிறார்கள். குழந்தைகள் உறுதிமொழிகளை நன்றாக அந்த அளவு தைரியத்துடன் செய்கிறார்கள். அந்த நேரம் அதைக் கேட்கும் பாப்தாதாவையும் குழந்தைகள் மனமகிழ வைக்கும் இனிப்பை உண்ணக் கொடுத்துவிடுகிறார்கள். தந்தையும் ஏற்றுக் கொள்கிறார் ஆனால் உறுதிமொழியில் அதாவது முயற்சி செய்வதில் மிக அதிமான லாபம் இருக்கிறது. ஒருவேளை லாபம் இருக்கவில்லை என்றால் செய்த உறுதிமொழி சக்திசாலியாக இருக்கவில்லை. எனவே நன்றாக உறுதிமொழி செய்யுங்கள். இருந்தும் மனதை மகிழ வைக்கும் இனிப்பையும் உண்ணக் கொடுக்கிறீர்கள் இல்லையா? கூடவே தீவிர முயற்சி செய்யும் ஈடுபாட்டை அக்னி ரூபத்தில் கொண்டு வாருங்கள். ஜுவாலாமுகி ஆகுங்கள். நேரத்திற்கு ஏற்றபடி மனதில், சம்மந்தம் தொடர்பில் கணக்கு வழக்குகள் என்னென்ன இன்னும் மிச்சம் இருக்கின்றனவோ அவற்றை ஜுவாலா சொரூபத்தினால் பஸ்பம் செய்யுங்கள். ஈடுபாடும் இருக்கிறது. இதில் பாப்தாதாவும் பாஸ் ஆக்குகிறார் ஆனால் இப்பொழுது ஈடுபாட்டை அக்னி ரூபத்தில் கொண்டு வாருங்கள்.

உலகில் ஒரு பக்கம் மிகத் தீய செயல்கள், மற்றும் அராஜக அக்னி இருக்கும், இன்னொரு பக்கம் குழந்தைகள் உங்களுடைய சக்திசாலியான யோகா அதாவது முழு ஈடுபாட்டின் அக்னி ஜுவாலா சொரூபத்தின் அவசியமாக இருக்கிறது. இந்த ஜுவாலா ரூபம் அந்த கீழான காரியங்கள் மற்றும் அராஜகத்தின் அக்னியை அழிக்கும் மற்றும் அனைத்து ஆத்மாக்களுக்கு சகயோகம் கொடுக்கும். உங்களுடைய ஈடுபாடு ஜுவாலா ரூபத்தினுடையதாக இருக்க வேண்டும் அதாவது சக்திசாலியான யோகா இருக்க வேண்டும். அப்படி இந்த நினைவின் அக்னி அந்த அக்னியை அழிக்கும் மற்றும் இன்னொரு பக்கம் ஆத்மாக்களுக்கு பரமாத்மாவின் செய்தியின், சீதள சொரூபத்தின் அனுபவத்தை செய்விக்கும். எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வை வெளிப்படுத்தும், அது ஒரு பக்கம் பஸ்பமும் ஆக்கும், இன்னொரு பக்கம் சீதளமும் (குளிர்ச்சி) ஆக்கும். எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியத்தின் உணர்வலைகள் உலகம் முழுவதும் பரவும். என்னுடைய யோகாவோ இருக்கிறது, எனக்கோ டாபாவைத் தவிர வேறு யாரும் இல்லை என்று குழந்தைகள் கூறுகிறார்கள். இது மிக நல்லது தான் ஆனால் நேரத்திற்கு ஏற்றபடி இப்பொழுது ஜுவாலா ரூபம் ஆகுங்கள்! நினைவுச் சின்னத்தில் சக்திகளின் சக்தி ரூபம், மகாசக்தி ரூபம், அனைத்து ஆயுதங்கள் தரித்தவராக என்ன காண்பித்திருக்கிறார்களோ அந்த மகாசக்தி ரூபத்தை இப்பொழுது பிரத்யக்ஷம் செய்யுங்கள். பாண்டவர்களானாலும், சக்திகளானாலும் அனைவருமே கடலிலிருந்து வெளிப்பட்ட ஞான நதிகள் ஆவீர்கள். கடல் இல்லை நதி ஆவீர்கள். ஞான நதி ஆவீர்கள். அப்படி ஞான கங்கைகள் இப்பொழுது ஆத்மாக்களை தன்னுடைய ஞானத்தின் சீதள குளிர்ந்த) தன்மை மூலமாக பாவங்களின் அக்னியிலிருந்து விடுவியுங்கள். இது தான் தற்சமயம் பிராமணர்கள் செய்ய வேண்டிய காரியம்.

அனைத்து குழந்தைகளும் இந்த வருடம் என்ன சேவை செய்ய வேண்டும் என்று கேட்கிறார்கள். எனவே முதல் சேவையாக இப்பொழுது நேரத்திற்கு ஏற்றபடி அனைத்து குழந்தைகளும் வானபிரஸ்த் நிலையில் இருக்கிறீர்கள் என்றால் வானபிரஸ்தி தன்னுடைய நேரம், சாதனம் அனைத்தையும் குழந்தைகளுக்கு கொடுத்து விட்டு அவர்கள் வானபிரஸ்த்த (அனைத்தையும் துறந்த)

நிலையில் இருப்பார்கள் என்ற இதைத் தான் பாப்தாதா கூறுகிறார். தன்னுடைய நேரத்தின் பொக்கிஷம், உயர்ந்த எண்ணத்தின் பொக்கிஷம் ஆகியவற்றை இப்பொழுது மற்றவர்களுக்காக ஈடுபடுத்துங்கள். நேரம், எண்ணத்தை தன் பொருட்டு குறைவாக ஈடுபடுத்துங்கள். மற்றவர்களுக்காக ஈடுபடுத்துவதினால் தானும் அந்த சேவையின் பிரத்யக்ஷ பலன் என்ற பழத்தை அருந்துவதற்கு காரணமானவர்கள் ஆகி விடுவீர்கள். மனதால் செய்யும் சேவை, வாய்மொழி சேவை, மேலும் அனைத்தையும் விட அதிகமாக - பிராமணர்கள் ஆனாலும், வேறு யாரெல்லாம் உறவு தொடர்பில் வருகிறார்களோ அவர்களுக்கு ஏதாவது மாஸ்டர் வள்ளலாகி கொடுத்துக் கொண்டே இருங்கள். சுயநலமற்றவராகி குஷியைக் கொடுங்கள். அமைதி கொடுங்கள், ஆனந்தத்தின் அனுபவம் செய்வியுங்கள், அன்பின் அனுபவம் செய்வியுங்கள், கொடுக்க வேண்டும் மேலும் கொடுப்பது என்றாலே இயல்பாக பெறுவது ஆகும். யாரெல்லாம் எந்த நேரம், எந்த ரூபத்தில் உறவு தொடர்பில் வருகிறார்களோ அவர்கள் ஏதாவது ஒன்றை பெற்றுச் செல்லட்டும். வள்ளல் உங்களிடமிருந்து வெறும் கையோடு செல்ல வேண்டாம். எப்படி பிரம்மாபாபாவை பார்த்திருக்கிறீர்கள் -காரியங்கள் செய்து கொண்டிருக்கும் போதே ஏதாவது குழந்தை எதிரில் வந்தார் என்றால் கூட ஏதாவது மாஸ்டர் கொஞ்சம் அனுபவம் இன்றி வெறுமையாகச் செல்வதில்லை. அப்படி யாரெல்லாம் வந்தார்கள் சந்தித்தார்களோ அவர்களுக்கு ஏதாவது கொடுத்தீர்களா? அல்லது காலியாகச் சென்றார்களா? பொக்கிஷங்களால் யார் நிரம்பியிருப்பார்களோ அவர்கள் கொடுக்காமல் இருக்க முடியாது. குறைவில்லாத, இடைவிடாத வள்ளல் ஆகுங்கள். யாராவது கேட்க வேண்டும் என்று அப்படி இருக்க வேண்டாம். வள்ளல் ஒருபொழுதும் கேட்கிறார் என்றால் கொடுக்கலாம் என்று அப்படி பார்க்க மாட்டார், குறைவில்லா பெரும் வள்ளல் அவராகவே கொடுட்டார். அப்படி இந்த வருடம் முதல் சேவையாக மகான் வள்ளலின் சேவை செய்யுங்கள். வள்ளல் மூலமாக கிடைத்திருப்பதை நீங்கள் கொடுக்கிறீர்கள். பிராமணன் ஒன்றும் யாசிப்பவரில்லை ஆனால் சகயோகி எனவே உங்களுக்குள் பிராமணர்களுக்கு ஒருவர் மற்றவருக்கு தானம் கொடுக்க வேண்டாம், சகயோகம் கொடுக்க வேண்டும். இது தான் முதல் நம்பர் சேவை. மேலும் கூடவே பாப்தாதா வெளிநாட்டுக் குழந்தைகளின் குஷியான செய்தியை கேட்டார் -பாப்தாதா பார்த்திருக்கிறார். இந்த

உலகில் செய்தியைப் பரப்புவதற்காக பொறுப்பாளர்களின் அதாவது மைக்கின் பெயர் கொடுத்திருந்தாரோ அதில் வெளிநாட்டுக் குழந்தைகள் அவர்களுக்குள் ஒன்றாக இணைந்து இந்தக் காரியத்தை செய்தார்கள். மேலும் எப்பொழுது திட்டம் உருவாகிறது என்றால் நடைமுறையில் நடக்கத் தான் வேண்டும் ஆனால் பாரதத்திலும் 13-ஜோன்கள் இருக்கின்றன, ஒவ்வொரு ஜோனிலிருந்து குறைந்தது ஒரு விசேஷ சேவாதாரி உருவாக வேண்டும். அவரை மைக் என்று கூறினாலும் அல்லது எதுவாகக் கூறினாலும், செய்தியைப் பரப்புவதற்காக யாராவது ஒருவரை பொறுப்பாக ஆக்குங்கள். குறைந்தது இதைச் செய்யுங்கள் என்று பாப்தாதா கூறினார் ஆனால் பெரிய பெரிய இராஜ்யக்கில் அந்த மாதிரி பொறுப்பானவர்கள் இருக்கிறார்கள் என்றால், மண்டலத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமில்லை, ஆனால் பெரிய இராஜ்யங்களிலிருந்தும் அந்த மாதிரி தயார் செய்து நிகழ்ச்சியை உருவாக்குங்கள். பாப்தாதா வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு உள்ளபூர்வமாக வாழ்த்துக்கள் கூறினார், இப்பொழுது நடைமுறையில் கொண்டு வருவதற்கான திட்டத்தை பாப்தாதாவின் எதிரில் முதலில் கொண்டு வந்தீர்கள் என்று வார்த்தைகளாலும் பாராட்டுக்கள் தெரிவிக்கிறார். பார்க்கப்போனால் பாரதத்தில் இன்னும் சுலபம் என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார் ஆனால் இப்பொழுது கொஞ்சம் தரமுள்ள சேவை செய்து சகயோகிகளை அருகில் கொண்டு வாருங்கள். சகயோகிகள் அதிகம் இருக்கிறார்கள் ஆனால் கூட்டத்தில் அவர்களை இன்னும் அருகில் கொண்டு வாருங்கள். கூடவே ஒவ்வொரு பெரிய நகரங்களின் சுற்றுப்பகுதி மிகப் பெரியதாக இருக்கும். ஒவ்வொரு சென்டரும் தன்னுடைய பகுதியில் இருந்து அந்த மாதிரி விசேஷமாக தயார் செய்வது அவசியமாகும் என்பது பாப்தாதாவின் எண்ணம். ஏனென்றால் நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது. மேலும் இறுதி நேரம் உங்கள் அனைவருக்கும் நீங்களே உங்களுடைய அறிமுகம் கொடுக்க வேண்டாம். உங்கள் தரப்பிலிருந்து அவர்கள் பேச வேண்டும், அவர்கள் பேச்சாளராக இருக்கட்டும், மேலும் நீங்கள் சக்தி கொடுப்பவராக இருங்கள். அப்படி ஒவ்வொருவருக்கும் தன்னுடைய பகுதியிலிருந்து அந்த மாதிரி மைக்கை (வி.ஐ.பி.) உருவாக்க வேண்டும். ஒவ்வொரு பகுதியிலிருந்து ஏதாவது முக்கியமான வியாபாரி என்று சொன்னாலும் அல்லது அந்த மாதிரி வெவ்வேறு துறையிலிருந்து ஏதாவது ஒரு முக்கியமானவர் கண்டிப்பாக இருப்பார். அவரவர்களின் சென்டரில்

தன்னுடைய பகுதியின் விசேஷ ஆத்மாக்களை தயார் செய்யுங்கள். அவர்களுக்கு இந்த ஞானம் என்றால் என்ன என்பதைக் கூறுங்கள். இறுதி நேரத்தில் நீங்கள் அனைவரும் காட்சியளிக்கும் மூர்த்தி ஆகி ஃபரிஷ்தா ஆகி, திருஷ்டி கொடுங்கள். மேலும் அவர்கள் பேச்சாளர் ஆகட்டும். பேச்சாளர் ஆவதோ நீங்கள் அனைவரும் கற்றுக் கொண்டு விட்டீர்கள், சின்ன சின்ன டீச்சர்களும் மிக நன்றாக பேசுகிறார்கள். அனைவரும் சொற்பொழிவு நிகழ்த்துகிறார்கள். இப்பொழுது பேச்சாளராக மற்றவர்களைத் தயார் செய்யுங்கள். உங்களுடைய திருஷ்டி மற்றும் இரண்டு வார்த்தைகள் அவர்களுக்கு அதிக நேரம் பேசியது போன்ற உணர்வை ஏற்படுத்தட்டும். அந்த மாதிரி நேரமும் வரத்தான் போகிறது. நல்லது.

நாலா புறமும்ளிலுமுள்ள பரமாத்மா பாலனையின் அதிகாரி ஆத்மாக்களுக்கு, பரமாத்மா படிப்பின் அதிகாரி உயர்ந்த ஆத்மாக்களுக்கு. பரமாத்மா பிராப்திகளினால் நிரம்பிய ஆத்மாக்களுக்கு. எப்பொழுதும் புள்ளியின் விதி மூலம் தீவிர முயற்சி செய்யும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் கடும் உழைப்பிலிருந்து விடுபட்டு அன்பில் மூழ்கியிருக்கும் ஆத்மாக்களுக்கு, ஜுவாலா சொரூப விசேஷ ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: மர்ஜீவா ஜென்மத்தின் (இறந்து மறுபிறவியில் வாழும்) நினைவின் மூலமாக கர்ம பந்தனத்தை சம்மந்தத்தில் மாற்றம் செய்யக்கூடிய பரோபகாரி ஆகுக!

உலகியல் கர்ம பந்தனத்தின் சம்மந்தம் இப்பொழுது மர்ஜீவா ஜென்மத்தின் காரணமாக ஸ்ரீமத்தின் ஆதாரத்தில் சேவையின் சம்மந்தத்திற்கு ஆதாரம் ஆகும். கர்ம பந்தனம் இல்லை. சேவையின் சம்மந்தம். சேவையின் சம்மந்தத்தில் பல விதமான ஆத்மாக்களுக்கு ஞானத்தை தாரணை செய்து கொண்டே இருந்தீர்கள் என்றால் பந்தனத்தில் மனமுடைந்து போக மாட்டீர்கள் ஆனால் மிக பாவ ஆத்மா, அபகாரி ஆத்மா மேலும் வெறுப்படைவதற்குப் பதிலாக இரக்கமனம் உடையவராகி இரக்கத்தின் பாவனையை வைத்துக் கொண்டே சேவையின் சம்மந்தம் என்று புரிந்து சேவை செய்தீர்கள் என்றால்,

பெயர் பெற்ற உலகிற்கு நன்மை செய்பவர் மற்றும் பரோபகாரி என்று வர்ணிக்கப்படுவீர்கள்.

சுலோகன்: நேரம் மற்றும் சூழ்நிலைக்கேற்றபடி வைராக்கியம் வருகிறது என்றால் இதுவும் அற்ப கால வைராக்கியம் ஆகும், நிரந்தரமான வைராக்கியம் உடையவராக ஆகுங்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 23.10.1999 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நேரத்தின் அழைப்பு வள்ளல் ஆகுங்கள்!

இன்று அனைத்தையும் விட உயர்ந்த பாக்கியத்தை உருவாக்குபவர், அனைத்து சக்திகளின் வள்ளல் பாப்தாதா நாலா புறமும்ளிலுமுள்ள அனைத்து குழந்தைகளையும் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். மதுபனில் நேரெதிரில் இருந்தாலும், பாரதம் மற்றும் வெளிநாட்டில் நினைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்தாலும், பார்த்துக் கொண்டிருந்தாலும், எங்கே அமர்ந்திருந்தாலும் ஆனால் உள்ளத்தினால் நேரெதிரில் இருக்கிறார்கள். அந்த அனைத்து குழந்தைகளையும் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். நீங்கள் அனைவரும் கூட மகிழ்ச்சி அடைகிறீர்கள் தான் இல்லையா? குழந்தைகளும் மகிழ்ச்சி அடைகிறார்கள் மற்றும் பாப்தாதாவும் மகிழ்ச்சி அடைகிறார். மேலும் இந்த உள்ளத்தின் நிரந்தரமான உண்மையான மகிழ்ச்சி தான் முழு உலகத்தையும் துக்கத்திலிருந்து விடுவிக்கக்கூடியது. இந்த உள்ளத்தின் மகிழ்ச்சி ஆத்மாக்களுக்கு தந்தையின் அனுபவம் செய்விக்கக்கூடியது. ஏனென்றால் தந்தையும் எப்பொழுதும் அனைத்து ஆத்மாக்களுக்காக சேவாதாரியாக இருக்கிறார். மேலும் நீங்கள் அனைத்து குழந்தைகளும் தந்தையுடன் சேர்ந்து சேலையின் துணைவர்களாக இருக்கிறீர்கள். துணைவர்கள் தான் இல்லையா? தந்தையின் துணைவனாக மற்றும் உலகின் துக்கங்களை மாற்றம் செய்து, நிரந்தர குஷியுடன் இருப்பதற்கான வழி கொடுக்கும் சேவையில் எப்பொழுதும் ஆஜராகி இருக்கிறீர்கள். நிரந்தர சேவாதாரிகள் நீங்கள். சேவையை நான்கு மணி நேரம். ஆறு மணி நேரம் மட்டும் செய்பவர்கள் அல்ல நீங்கள். ஒவ்வொரு விநாடியும் சேவையின் மேடையில் பங்கைச் செய்யக்கூடிய பரமாத்மாவின் துணைவர்கள் நீங்கள். நினைவு நிரந்தரமாக இருக்கிறது, அதே போலவே சேவையும் நிரந்தரமாக இருக்கிறது. தன்னை நிரந்தர சேவாதாரி என்று அனுபவம் செய்கிறீர்களா? அல்லது 8, 10-மணி நேரங்களின் சேவாதாரியா? இந்த பிராமண ஜென்மமே நினைவு மற்றும் சேவைக்காகத் தான் இருக்கிறது.

வேறு ஏதாவது செய்ய வேண்டுமா என்ன? இது தான் இல்லையா? ஒவ்வொரு மூச்சிலும், ஒவ்வொரு விநாடியும் நினைவு மற்றும் சேவை சேர்ந்தே இருக்கிறதா அல்லது சேவையின் நேரம் வேறு மற்றும் நினைவிலிருப்பதற்கான நேரம் வேறாக இருக்கிறதா? அப்படி இல்லை தான் இல்லையா? நல்லது. சமநிலை இருக்கிறதா? ஒருவேளை 100-சதவிகிதம் சேவை இருக்கிறது என்றால் 100-சதவிகிதமும் நினைவு இருக்கிறதா? இரண்டிற்கும் சமநிலை இருக்கிறதா? வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது தான் இல்லையா? கர்மயோகியின் அர்த்தமே -கர்மம் மற்றும் நினைவு, சேவை மற்றும் நினைவு இரண்டின் நிலை சமமாக இருப்பது, சமமாக இருக்க வேண்டும். சில நேரம் நினைவு அதிகமாக மற்றும் சேவை குறைவாக அல்லது சேவை அதிகமாக மற்றும் நினைவு குறைவாக அப்படி இல்லையே? எப்படி ஆத்மா மற்றும் உடல் எதுவரை மேடையில் இருக்கிறதோ அதுவரை சேர்ந்தே இருக்கிறது தான் இல்லையா? தனியாகப் பிரிய முடியுமா? அதே போல் நினைவு மற்றும் சேவை சேர்ந்தே இருக்க வேண்டும். நினைவு என்றால் தந்தைக்குச் சமமான நிலை, தன்னுடைய சுவமானத்தின் நினைவும் இருப்பது. தந்தையின் நினைவு இருக்கிறது என்றால், இயல்பாகவே சுவமானத்தின் நினைவும் இருக்கிறது. ஒருவேளை கவமானத்தில் இருக்கவில்லை என்றால் நினைவும் சக்திசாலியாக இருக்காது.

சுவமானம் என்றால் தந்தைக்குச் சமமான நிலை. சம்பூர்ண சுவமானம் தான் தந்தைக்குச் சமமான நிலை. மேலும் அந்த மாதிரி நினைவில் இருக்கும் குழந்தைகள் எப்பொழுதுமே வள்ளலாக இருப்பார்கள். யாசிப்பவர்களாக மற்றும் பெறுபவர்களாக இருக்க மாட்டார்கள். தேவதா என்றாலே கொடுப்பவர். அப்படி இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் வள்ளல் தன்மையை, எந்த அளவு வள்ளலின் குழந்தைகள் வள்ளலாக ஆகியிருக்கிறார்கள் என்பதை சோதனை செய்து கொண்டிருந்தார். எப்படி தந்தை ஒருபொழுதும் பெறுவதற்கான எண்ணம் வைக்க முடியாது, கொடுப்பதற்கானதை வைக்கிறார். ஒருவேளை அனைத்து பழையதையும் கொடுத்து விடு என்று கூறினால் கூட பழையவற்றிற்குப் பதிலாக புதியதைக் கொடுக்கிறார். பெறுவது என்றாலே தந்தைக்குக் கொடுப்பது. அப்படி தற்சமயம் பாப்தாதாவிற்கு குழந்தைகளின் ஒரு தலைப்பு மிகவும் பிடித்திருக்கிறது. அது எந்த தலைப்பு? வெளிநாட்டின் தலைப்பாகும். அது எது? (கால் ஆ்ஃப் டைம்).

அதாவது நேரத்தின் அழைப்பு, குழந்தைகளுக்காக நேரத்தின் அழைப்பு என்ன இருக்கிறது என்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். நீங்கள் உலகத்திற்காக, சேவைக்காகப் பார்க்கிறீர்கள், பாப்தாதாவின் சேவையின் துணைவர்களாகவோ இருக்கவே இருக்கிறீர்கள் ஆனால் குழந்தைகளுக்காக நேரத்தின் அழைப்பாக என்ன இருக்கிறது என்பதை பாப்தாதா பார்க்கிறார். நீங்களும் நேரத்தின் அழைப்பு என்ன என்பதை புரிந்து கொண்டிருக்கிறீர்கள் இல்லையா?

தனக்காக யோசியுங்கள். சேவைக்காக சொற்பொழிவு நிகழ்த்தினீர்கள், செய்து கொண்டிருக்கிறீர்கள் தான் இல்லையா? ஆனால் தனக்காக, எனக்காக நேரத்தின் அழைப்பு என்னவாக இருக்கிறது என்று தன்னிடமே கேளுங்கள். தற்சமயத்தின் அழைப்பு என்னவாக இருக்கிறது? அப்படி இப்பொழுதைய நேரத்தின் அனுசாரம், ஒவ்வொரு குழந்தைக்கும் வள்ளல் தன்மையின் நினைவை இன்னும் அதிகரிக்க வேண்டும். அது சுயமுன்னேற்றத்திற்காக வள்ளல் தன்மையின் உணர்வு, அனைவருக்காகவும் அன்பு வெளிப்படும் ரூபத்தில் தென்படுவதாகவும் இருக்கலாம். யார் எப்படி இருந்தாலும், என்னவாக இருந்தாலும் நான் கொடுக்க வேண்டும். அப்படி வள்ளல் எப்பொழுதுமே எல்லைக்கப்டாற்பட்ட உள்ளுணர்வு உடையவராக இருப்பார், எல்லைக்குட்பட்டது அல்ல. மேலும் எப்பொழுதும் வள்ளல் சம்பன்னமாக நிரம்பி இருப்பார். வள்ளல் எப்பொழுதுமே மன்னிக்கும் மாஸ்டர் கடலாக இருப்பார். இதன் காரணமாக எல்லைக்குட்பட்ட தன்னுடைய சம்ஸ்காரம் அல்லது மற்றவர்களின் சம்ஸ்காரம் என்னவாக இருக்கிறதோ அவை உள்ளடங்கி விடும், வெளிப்படாது. நான் கொடுக்க வேண்டும். யாராவது கொடுத்தாலும் சரி, கொடுக்காவிட்டாலும் சரி, ஆனால் நான் வள்ளல் ஆக வேண்டும். எந்த விதமான சம்ஸ்காரத்தின் வசமாகி மற்றவர்களின் / மற்றவைகளின் வசமான ஆத்மாவாக இருந்தாலும் அந்த ஆத்மாவிற்கும் நான் சகயோகம் கொடுக்க வேண்டும். அப்படி எந்த விதமான எல்லைக்குட்பட்ட சம்ஸ்காரம் உங்களை பிரபாவம் செய்யாது. யாராவது மரியாதை கொடுத்தாலும், சரி, யாராவது கொடுக்காவிட்டாலும் சரி, ஆனால் நான் கொடுக்க வேண்டும். அந்த மாதிரி வள்ளல் தன்மை இப்பொழுது வெளிப்பட வேண்டும். மனதில் பாவனையோ இருக்கிறது ஆனால் ஆனால் என்பது வர வேண்டாம்.

நான் கண்டிப்பாக செய்ய வேண்டும், யாராவது அந்த மாதிரி நடத்தை மற்றும் வார்த்தைகள் உள்ளவராக இருக்கிறார், அது உங்களுக்கு உதவாதது, பிடிக்கவில்லை என்றால் அதை ஏற்றுக் கொள்ளவே செய்யாதீர்கள். தீய பொருட்களை ஏற்றுக் கொள்வார்களா என்ன? மனதில் தாரணை செய்வது என்றால் ஏற்றுக்கொள்வது. புத்தி வரை கூட வேண்டாம். புத்தியிலோ விஷயம் வந்து விடுகிறது தான் இல்லையா? அதுவும் வேண்டாம். எப்பொழுது அது தீயதாக இருக்கிறது நல்லதாக இல்லை என்றால் புத்தியில் மற்றும் இதயத்தில் ஏற்றுக்கொள்ளாதீர்கள் அதாவது தாரணை செய்யாதீர்கள், இன்னும் அதிகமாக ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக சுபபாவனை, சுபவிருப்பங்களை வள்ளலாகி கொடுங்கள். ஏற்றுக்கொள்ளாதீர்கள் ஏனென்றால் இப்பொழுது நேரத்திற்கு ஏற்றபடி ஒருவேளை இதயம் மற்றும் புத்தி காலியாக இருக்கவில்லை என்றால் நிரந்தர சேவாதாரியாக ஆகமுடியாது. இதயம் அல்லது புத்தி எப்பொழுது ஏதாவது விஷயங்களில் மிகவும் பிஸியாகி விட்டது என்றால் சேவை என்ன செய்வீர்கள்? பிறகு எப்படி உலகத்தில் 8-மணி நேரம், 10-மணி நேரம் வேலை செய்கிறார்கள். அதே போல் இங்கேயும் ஆகி விடும். 8-மணி நேரங்களின் சேவாதாரி, 6-மணி நேரங்களின் சேவாதாரி. நிரந்தர சேவாதாரி ஆக முடியாது, மனம் மூலமாக சேவை செய்தாலும் சரி, வாய்மொழி மூலமாக செய்தாலும் சரி, காரியம் அதாவது சம்மந்தம் தொடர்பு மூலம் செய்தாலும் சரி, அப்படி ஒவ்வொரு விநாடியும் வள்ளல் அதாவது சேவாதாரி. புத்தியை காலியாக வைப்பதினால் தந்தையின் சேவையின் துணைவனாக ஆக முடியும். இதயத்தை எப்பொழுதும் சுத்தமாக வைப்பதினால் நிரந்தரமாக தந்தையின் சேவையின் துணைவன் ஆக முடியும். உங்கள் அனைவரின் உறுதிமொழி என்ன? உடன் இருப்போம், உடன் செல்வோம் என்ற இந்த உறுதிமொழி தான் இல்லையா? அல்லது நீங்கள் முன்னே இருங்கள், நாங்கள் பின்னே பின்னே வருகிறோம் என்றா? இல்லைதான் இல்லையா? உடன் இருப்போம் என்ற உறுதிமொழி தான் இல்லையா? அப்படி தந்தை சேவையின்றி இருக்கிறாரா? நினைவு இன்றியும் இருப்பதில்லை. எந்த அளவு தந்தை நினைவிலிருக்கிறாரோ அந்த அளவு நீங்கள் கடும் உழைப்பில் இருக்கிறீர்கள். இருக்கிறீர்கள் ஆனால் கடும் உழைப்பில் மற்றும் கவனத்தில் மேலும் தந்தையை பொருத்தளவில் என்ன தான் இருக்கிறது? பரமாத்மாவைப்

பொருத்தளவில் இருப்பதே ஆத்மாக்கள் தான். வரிசைக்கிரமமான ஆத்மாக்களோ இருக்கவே இருக்கிறார்கள். குழந்தைகளின் நினைவின்றி தந்தை இருக்கவே முடியாது. தந்தை குழந்தைகளின் நினைவின்றி இருக்க முடியுமா? நீங்கள் இருக்க முடியுமா? நேரங்களில் குறும்புக்காரர்களாக ஆகி விடுகிறார்கள். சில அப்படி என்ன கேட்டீர்கள்? நேரத்தின் அழைப்பு - வள்ளல் ஆகுங்கள். மிக அவசியமாக இருக்கிறது. ஹே எங்களுடைய இஷ்ட தேவி தேவதைகளே... என்று முழு உலகின் ஆத்மாக்களின் கூக்குரல் இருக்கிறது. இஷ்ட தேவி தேவதையாகவோ இருக்கிறீர்கள் தான் இல்லையா? ஏதாவது ஒரு ரூபத்தில் அனைத்து ஆத்மாக்களுக்காகவும் இஷ்டமானவர்களாக இருக்கிறீர்கள். அப்படி இந்த நேரம் அனைத்து ஆத்மாக்களின் கூக்குரல் -ஹே இஷ்ட தேவி தேவதைகளே! மாற்றம் செய்யுங்கள். இந்தக் குரலைக் கேட்க முடிகிறதா? பாண்டவர்களுக்கு இந்தக் குரல் கேட்கிறதா? கேட்டு பிறகு என்ன செய்கிறீர்கள். கேட்க முடிகிறது என்றால் ஏதாவது அவர்களுக்கு தேவையானதை செய்கிறீர்களா அல்லது ஆம் செய்வோம் என்று யோசிக்கிறீர்களா? கூக்குரலைக் கேட்க முடிகிறதா? அப்படி நேரத்தின் அழைப்பை மற்றவர்களுக்கும் கூறுகிறீர்களா? அல்லது ஆத்மாக்களின் அழைப்பைக் கேட்க மட்டும் தான் செய்கிறீர்களா? எனவே இஷ்ட தேவி தேவதைகளே இப்பொழுது தன்னுடைய வள்ளல் தன்மையின் ரூபத்தை வெளிப்படுத்துங்கள். கொடுக்க வேண்டும். எந்தவொரு ஆத்மாவும் வஞ்சிக்கப்பட்டு இருந்து விடக்கூடாது. இல்லைபென்றால் முறையீடுகளின் மாலைகள் வந்து விழும். முறையீடுகளோ கொடுப்பார்கள் இல்லையா? அப்படியானால் முறையீடுகளின் மாலை அணிபவர்கள் இஷ்ட தேவி தேவதைகளா அல்லது மலர்களால் ஆன மாலை அணிபவர் இஷ்ட தேவி தேவதைகளா? எந்த மாதிரியான இஷ்ட தேவி தேவதைகள் நீங்கள்? பூஜைக்குரியவர்கள் தான் இல்லையா? நானோ பின்னால் வந்திருக்கிறேன் யார் மிகப் பெரியவர்களோ அவர்கள் தான் வள்ளல் ஆவார்கள். நான் எங்கே ஆவேன் என்று அந்த மாதிரி நினைக்கக்கூடாது. அனைவரும் வள்ளல் ஆக வேண்டும்.

யார் முதல் தடவையாக மதுபனிற்கு வந்திருக்கிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். யார் முதல் தடவை வந்திருக்கிறீர்களோ அவர்கள் வள்ளல் ஆக முடியுமா அல்லது இரண்டாவது, மூன்றாவது

வருடத்தில் வள்ளல் ஆவீர்களா? ஒரு வருடம் ஆனவர்கள் வள்ளல் ஆக முடியுமா? (ஆம்) மிக நல்ல புத்திசாலிகள் தைரியத்தைப் பார்த்து பாப்தாதா எப்பொழுதும் குஷி அடைகிறார். ஒரு மாதம் ஆனவராக இருந்தாலும், இவர்களுக்கோ ஒரு வருடம் அல்லது 6-மாதங்கள் ஆகியிருக்கலாம் ஆனால் ஒரு வருடம் ஆனவர்களானாலும் அல்லது ஒரு மாதம் ஆனவர்களானாலும், ஒரு மாதத்தில் கூட தன்னை பிரம்மா குமார் அல்லது பிரம்மா குமாரி என்று கூறுகிறீர்கள் தான் இல்லையா? அப்படி பிரம்மா குமார் மற்றும் பிரம்மா குமாரி என்றால் பிரம்மாபாபாவின் ஆஸ்தியின் அதிகாரி ஆகி விட்டீர்கள், பிரம்மாவை தந்தை என்று ஏற்றுக் கொண்டீர்கள். அதனால் தான் குமார் - குமாரி ஆனீர்கள் இல்லையா? அப்படி பிரம்மா குமார் மற்றும் பிரம்மா குமாரி. பிரம்மாபாபா, சிவ பாபாவின் ஆஸ்தியின் அதிகாரி ஆனார் இல்லையா அல்லது ஒரு மாதம் ஆனவர்களுக்கு ஆஸ்தி கிடைக்காதா? ஒரு மாதம் ஆனவர்களுக்கு ஆஸ்தி கிடைக்குமா? எப்பொழுது ஆஸ்தி கிடைத்து விட்டது என்றால், கொடுப்பதற்காக வள்ளலாக இருப்பீர்கள் தான் இல்லையா? எதுவொன்று கிடைக்கிறதோ அதை பிறருக்கு வழங்குவதை தொடங்கி விடத் தான் செய்ய வேண்டும் இல்லையா?

ஒருவேளை தந்தை என்று புரிந்து தொடர்பை இணைத்து கொண்டீர்கள் என்றால் ஒரு நாளில் கூட ஆஸ்தியைப் பெற முடியும். ஆம் நன்றாக இருக்கிறது, ஏதோ ஒரு சக்தி இருக்கிறது, புரிந்து கொள்ள முடிகிறது என்று அப்படி வேண்டாம். ஆஸ்தியின் அதிகாரியாக குழந்தைகள் இருப்பார்கள். புரிந்து கொள்பவர்கள், பார்ப்பவர்கள் ஆவதில்லை. ஒருவேளை ஒரு நாளில் கூட உள்ளப்பூர்வமாக தந்தை என்று ஏற்றுக் கொண்டார் என்றால் ஆஸ்தியின் அதிகாரி ஆக முடியும். நீங்கள் அனைவருமே அதிகாரிகள் தான் இல்லையா? நீங்களோ பிரம்மா குமார், குமாரிகள் தான் இல்லையா அல்லது ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? ஆகி விட்டீர்களா அல்லது ஆவதற்காக வந்திருக்கிறீர்களா? யாராவது உங்களை மாற்ற முடியுமா? பிரம்மா குமார் குமாரிக்குப் பதிலாக குமார் - குமாரி என்று மட்டும் ஆகி விடுங்கள், என்ற இது நடக்க முடியுமா? பிரம்மா குமார் மற்றும் குமாரி ஆவதில் எவ்வளவு லாடம் இருக்கிறது? ஒரு ஜென்மத்தின் லாடம் மட்டும் இல்லை, அனேக ஜென்மங்களின் லாபம். முயற்சி அரை ஜென்மம், கால் ஜென்மத்தில் செய்வது மேலும் பிராப்தி பல ஜென்மங்களுக்கானது. லாபமே லாபம் தான் இல்லையா?

பாப்தாதா நேரத்திற்குத் தகுந்தாற்போல் தற்சமயம் விசேஷமாக ஒரு விஷயத்தில் கவனம் கொடுக்கிறார். ஏனென்றால் பாப்தாதாவோ குழந்தைகளின் ரிசல்ட்டைப் பார்த்துக் கொண்டே இருக்கிறார் இல்லையா? அப்படி தைரியம் மிக நன்றாக இருக்கிறது என்று ரிசல்ட்டில் பார்க்க முடிந்தது. லட்சியமும் மிக நன்றாக இருந்தது. ஸட்சியத்தின் அனுசாரம் இதுவரையிலும் லட்சியம் மற்றும் லட்சணம் இதனிடையே வித்தியாசம் இருக்கிறது. அனைவரின் லட்சியமும் நம்பர் ஒன் ஆக இருக்கிறது, யாரிடமாவது உங்களுடைய லட்சியம் 21 ஜென்மங்களின் இராஜ்ய பாக்கியத்தை பெறுவதா. சூரிய வம்சியாக ஆவதற்கான லட்சியம் இருக்கிறதா? அல்லது சந்திர வம்சி ஆவதற்கான லட்சியம் இருக்கிறதா என்று கேட்டால் நீங்கள் அனைவரும் எதில் கையை உயர்த்துவீர்கள்? சூரிய வம்சத்திற்காகத் தான் உயர்த்துவீர்கள் இல்லையா? யாராவது சந்திரவம்சியாக ஆக விரும்புகிறீர்களா? யாராவது ராம் ஆக ஆகுபவர் இருக்கிறாரா? யாருமில்லை. ஒருவரோ ஆகி விடுங்களேன். யாராவது ஒருவர் ராமாக ஆகத்தான் வேண்டும் இல்லையா? (ஒருவர் கையை உயர்த்தினார்). நல்லது. இல்லை என்றால் ராமின் இருக்கை காலியாக இருந்து விடும். அப்படி அனைவரின் லட்சியம் மிக நன்றாக இருக்கிறது. லட்சியம் மற்றும் லட்சணத்தின் சமநிலை அதன் மேல் அவசியம் கவனம் கொடுக்க வேண்டும். அதற்கான காரணம் என்ன? சில நேரம் பெறுபவர்களாக ஆகி விடுகிறார்கள். இதை இன்று கூறினோம். இது இருந்தது என்றால் இதைச் செய்வேன். இவர் உதவி செய்தால், இவர் மாறினால் நான் மாறுவேன். இந்த விஷயம் சரியாகி விட்டது என்றால், நானும் சரியாகி விடுவேன். இது வள்ளல் தன்மை அல்ல! பெறுபவர் ஆவது. யாராவது கொடுத்தாலும் சரி கொடுக்காவிட்டாலும் சரி, தந்தையோ அனைத்தையும் கொடுத்து விட்டார். தந்தை யாருக்காவது குறைவாகக் கொடுத்தார் மற்றும் யாருக்காவது அதிகமாகக் கொடுத்தாரா என்ன? அனைவருக்கும் ஒரே பாடம் தான் இல்லையா? 60-வருடங்கள் ஆனவர்கள் ஆனாலும், ஒரு மாதம் ஆனவர்கள் ஆனாலும், பாடமோ ஒன்றே தான் இல்லையா அல்லது 60-வருடங்கள் நிறைந்தவர்களுக்கு தனிப் பாடம், ஒரு மாதம் ஆனவர்களுக்குத் தனிப் பாடம் எவை? இருக்கிறதா? அவர்களும் இதே பாடத்தை தான் கற்றுக் கொண்டார்கள். மேலும் இப்பொழுதும் கூட அதே பாடம் தான். அதே

ஞானம் தான், அதே அன்பு தான். அதே அனைத்து சக்திகளும் தான். அனைத்தும் ஒரே மாதிரி தான் அவர்களுக்கு 16-சக்திகள். இவர்களுக்கு 8-சக்திகள் என்று அப்படி இல்லை! அனைவருக்கும் ஒரே மாதிரியான ஆஸ்தி. அப்படி எப்பொழுது தந்தை அனைவரையும் நிரப்பி விட்டார் என்றால், பிறகு நிரம்பிய ஆத்மா வள்ளலாக ஆகிறதேயன்றி பெறுபவராக ஆவதில்லை. நான் கொடுக்க வேண்டும். யார் கொடுத்தாலும் கொடுக்கவில்லை என்றாலும் சரி, பெற வேண்டும் என்ற இச்சையற்றவன். கொடுப்பதற்கான இச்சை (ஆசை) உள்ளவன். மேலும் எந்த அளவு கொடுப்பீர்களோ, வள்ளல் ஆவீர்களோ அந்த அளவு பொக்கிஷம் அதிகரித்துக் கொண்டே இருக்கும். உதாரணமாக நீங்கள் யாருக்காவது சவமானம் (சுயமரியாதை) கொடுத்தீர்கள் என்றால். மற்றவர்களுக்கு கொடுப்பது என்றால் தன்னுடைய சுவமானத்தை அதிகரிப்பது. வெறும் கொடுப்பதாக இருப்பதில்லை ஆனால் கொடுப்பது என்றால் பெறுவது. பெறாதீர்கள், கொடுத்தீர்கள் என்றால் பெறுவது ஆகி விடும். அப்படி நேரத்தின் அழைப்பு என்ன என்று புரிந்து கொண்டீர்களா? வள்ளல் ஆகுங்கள். ஒரு வார்த்தையை நினைவில் வையுங்கள். எந்த விஷயம் நடந்தாலும், வள்ளல்' என்ற வார்த்தையை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். இச்சை என்றால் என்னவென்று தெரியாத நிலையில் இருக்க வேண்டும். சூட்சுமமாக பெறுவதற்கான இச்சையும் இருக்க வேண்டாம். மேலும் ஸ்தூலமாகப் பெறுவதற்கான இச்சையும் இருக்க வேண்டாம். வள்ளலின் அர்த்தமே இச்சா மாத்ரம் அவித்யா இச்சை என்றால் என்னவென்றெ தெரியாத நிலை). நிரம்பியவர். எதையும் அடையாதநிலை இருக்காது. அதைப் பெறுவதற்கான இச்சையும் இருக்காது. அனைத்தும் கிடைத்ததால் நிரம்பியவர். அப்படியானால் லட்சியம் என்ன? நிரம்பியவர் ஆவதற்கானது தான் இருக்கிறது இல்லையா? அல்லது எவ்வளவு கிடைக்கிறதோ அவ்வளவு நல்லதா? நிரம்பியவர் ஆவது தான் சம்பூர்ணம் ஆவது,

இன்று பிரத்யேகமாக வெளிநாட்டினர்களுக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. நல்லது தான். முதல் வாய்ப்பை வெளிநாட்டினர்கள் எடுத்திருக்கிறார்கள். செல்லமானவர்கள் ஆகி விட்டார்கள் இல்லையா. அனைவரையும் தடை செய்தார்கள். மேலும் வெளிநாட்டினருக்கு அழைப்பு கொடுத்தார்கள். பாப்தாதாவிற்கோ அனைத்து குழந்தைகளின் நினைவோ இருக்கிறது. இருந்தாலும் இரட்டை வெளிநாட்டினரைப்

பார்த்து, அவர்களின் தைரியத்தைப் பார்த்து மிகுந்த குஷி ஏற்படுகிறது. இப்பொழுது தற்சமயம் அந்தளவு குழப்பத்தில் வருவதில்லை. கொஞ்சம் மாற்றம் வந்து விட்டது. தொடக்க காலத்தில் இது இந்திய கலாச்சாரம், வெளிநாட்டு கலாச்சாரம் என்ற கேள்விகள் எழுந்தன தான் இல்லையா? இப்பொழுது புரிந்து கொண்டார்கள். இப்பொழுது பிராமண கலாச்சாரத்தில் வந்து விட்டார்கள். இந்திய கலாச்சாரமும் இல்லை. வெளிநாட்டு கலாச்சாரமும் இல்லை, பிராமண கலாச்சாரத்தில் வந்து விட்டார்கள். இந்திய கலாச்சாரம் கொஞ்சம் பிரச்சனை செய்யும் ஆனால் பிராமண கலாச்சாரம் கலடம் தான் இல்லையா? பிராமண கலாச்சாரமே சுயமரியாதையில் இருங்கள் மேலும் சுயராஜ்ய அதிகாரி ஆகுங்கள் என்பது தான். இது தான் பிராமண கலாச்சாரம். இது விருப்பம் தான் இல்லையா? இப்பொழுதோ இந்திய கலாச்சாரத்தில் எப்படி வருவது, கடினம் என்ற கேள்வியே இல்லை தான் இல்லையா? சுலபமாக ஆகி விட்டது இல்லையா? பார்த்துக் கொள்ளுங்கள். பிறகு அங்கே சென்ற பிறகு கொஞ்சம் இது கடினம் என்று சொல்லாதீர்கள். அங்கே சென்ற பிறகு அந்த மாதிரி எழுதாதீர்கள். சுலபம் என்று என்னவோ சொல்லிவிட்டோம் ஆனால் இது கொஞ்சம் கடினம். சுலபமாக இருக்கிறதா அல்லது கொஞ்சம் கொஞ்சம் கடினமாக இருக்கிறதா? கொஞ்சம் கூட கடினம் இல்லை, மிக சுலபம். இப்பொழுது முழு விளையாட்டும் முடிவடைந்து விட்டது. எனவே சிரிப்பு வருகிறது. இப்பொழுது உறுதியானவர்கள் ஆகி விட்டார்கள். குழந்தைப் பருவத்தின் விளையாட்டு இப்பொழுது முடிவடைந்து விட்டது. இப்பொழுது அனுபவிகள் ஆகி விட்டீர்கள். மேலும் எந்த அளவு பழையவர்கள் உறுதியாகிக் கொண்டே இருக்கிறார்கள் என்றால், புதியதாக யார் யார் வருகிறார்களோ அவர்களும் உறுதியாகி விடுகிறார்கள். நல்லது தான். ஒவ்வொருவரையும் மிக நன்றாக முன்னேற்றிக் கொண்டே இருக்கிறீர்கள். உழைப்பை நன்றாக செய்கிறீர்கள். இப்பொழுது தாதிகளிடம் கதைகளை எடுத்துச் செல்வது இல்லையே? கதைகள் கட்டுரைகளை தாதிகளிடம் எடுத்துச் செல்கிறீர்களா? குறைந்து விட்டது. வித்தியாசம் இல்லையா (தாதி ஜானகியிடம்), அப்படி இப்பொழுது நீங்களும் யுற்றவர் ஆகாதீர்கள். கதை கட்டுரைகளில் நோய் இருக்கும். அதுவோ முடிவடைந்து விட்டது. நல்லது தான். அனைவரிலும் மிக நல்ல விசேஷ குணம் இருக்கிறது. இதயத்தின் சுத்தம் மிக நன்றாக இருக்கிறது. உள்ளே வைத்துக்

கொள்வதில்லை, வெளியில் எடுத்து விடுவார்கள். எந்த விஷயம் நடந்தாலும் உண்மையைச் சொல்லிவிடுவார்கள். அந்த மாதிரி இல்லை, இந்த மாதிரி. அப்படி அந்த மாதிரி, இந்த மாதிரி என்று சொல்வதில்லை. என்ன விஷயமோ அதைக் கூறி விடுவார்கள். இந்த விசேஷம் மிக நன்றாக இருக்கிறது. எனவே தான் உண்மை மற்றும் சுத்தமான மனதில் தந்தை எப்பொழுதும் திருப்தியாக இருக்கிறார் என்று தந்தை கூறுகிறார். பார்க்கலாம் என்று அப்படியில்லை. நிர்பந்தத்தில் இருப்பதில்லை. அப்படி இருந்து நடக்கிறார்கள் என்றால் முழுமையாக நடக்கிறார்கள், இல்லை என்றால் இல்லை. நல்லது. ஒரு நொடியில் மேலே பறந்து செல்ல முடியுமா? இறக்கை சக்தி நிறைந்தது தான் இல்லையா? பாபா என்று மட்டும் கூறுங்கள். பிறகு பறந்து விடுங்கள். (யோகப் பயிற்சி டிரில்)

நாலா புறமும் உள்ள அனைத்து உயர்ந்த தந்தைக்குச் சமமான வள்ளல் தன்மையின் பாவனை வைக்கக்கூடிய, உயர்ந்த ஆத்மாக்களுக்கு நிரந்தர நினைவு மற்றும் சேவையில் முழுமையாக ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு, பரமாத்மா சேவையின் துணையாக இருக்கும் குழந்தைகளுக்கு, எப்பொழுதும் லட்சியம் மற்றும் லட்சணத்தை சமமாக ஆக்கக்கூடிய, எப்பொழுதும் தந்தையின் அன்பிற்குரிய மற்றும் சமமான நெருக்கமானவர் ஆகக்கூடிய பாப்தாதாவின் கண்களின் நட்சத்திரங்கள், எப்பொழுதும் உலக நன்மைக்கான பாவனையில் இருக்கக்கூடிய இரக்க மனம் உடையவர், மாஸ்டர் மன்னிக்கும் கடல் குழந்தைகளுக்கு, தூாரமாக அமர்ந்திருப்பவர்களுக்கு, மதுபனில் கீழே அமர்ந்திருப்பவர்களுக்கு, மேலும் பாப்தாதாவின் எதிரில் அமர்ந்திருக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்,

வரதானம்: எப்பொழுதும் தன்னுடைய உயர்ந்த பாக்கியத்தின் போதை மற்றும் குஷியில் இருக்கக்கூடிய பல மடங்கு பாக்கியம் நிறைந்தவர் ஆகுக!

முழு உலகத்தில் யாரெல்லாம் தர்மத்தந்தைகள் (மத குருமார்) மற்றும் தன்னை ஜகத்குரு என்று கூறுபவர்களாக ஆகியிருக்கிறார்களோ அவர்கள் யாருக்கும் தாய் தந்தையின் சம்மந்தத்தில் ஆன்மீகப் பிறவி

மற்றும் பாலனை கிடைப்பதில்லை. அவர்கள் ஆன்மீகத் தாய் தந்தையின் அனுபவத்தை கனவிலும் செய்ய முடியாது. மேலும் பல மடங்கு செல்வந்தர்களான உயர்ந்த ஆத்மாக்கள் நீங்கள் ஒவ்வொரு நாளும் தாய் தந்தையின் மற்றும் அனைத்து சம்மந்தங்களின் அன்பு நினைவுகளைப் பெறுவதற்கு உரியவர்கள். சுயம் சர்வ சக்திவான் தந்தை குழந்தைகள் உங்களின் சேவகன் ஆகி ஒவ்வொரு அடியிலும் துணையைக் கொடுத்து நடந்து கொள்கிறார் என்றால். இதே உயர்ந்த பாக்கியத்தின் போதை மற்றும் குஷியில் இருங்கள்.

**சுலோகன்: உடல் மற்றும் மனதை எப்பொழுதும் குஷியாக வைத்துக் கொள்வதற்காக குஷி நிறைந்த சக்திசாலியான எண்ணத்தை மட்டும் வையுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 15.11.1999 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தந்தைக்குச் சமமாக ஆவதற்கான சுலபமான முயற்சி கட்டளைப்படி நடப்பவராக ஆகுங்கள்!

இன்று பாப்தாதா தன்னுடைய புனித அன்னப்பறவைகள் சபையை பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தையும் புனித அன்னப்பறவை. எப்பொழுதும் மனதில் ஞான ரத்தினங்களை சிந்தித்துக் கொண்டே இருக்கிறார்கள். புனித அன்னப்பறவையின் வேலையே விணானதின் கற்களை தவிர்ப்பது மற்றும் ஞான ரத்தினங்களை சிந்தனை செய்வது. ஒவ்வொரு ரத்தினமும் எவ்வளவு விலைமதிக்க முடியாதது. ஒவ்வொரு குழந்தையும் ஞான ரத்தினங்களின் சுரங்கம் ஆகி விட்டார். ஞான ரத்தினங்களின் பொக்கிஷங்களினால் எப்பொழுதும் நிரம்பியிருக்கிறார்கள்.

இன்று பாப்தாதா குழந்தைகளின் ஒரு விசேஷ விஷயத்தை சோதனை செய்து கொண்டிருந்தார். அது என்னவாக இருந்தது? ஞானம் அல்லது யோகாவின் சுலபமான தாரணைக்கான சுலபமான வழி தந்தை மற்றும் தாதாவின் (பிரம்மாபாபாவின்) கட்டளைப்படி நடப்பவராகி நடந்து கொள்வது. தந்தையின் ரூபத்திலும் கட்டளைப்படி நடப்பவர், ஆசிரியரின் ரூபத்திலும் மற்றும் சத்குருவின் ரூபத்திலும். மூன்று ரூபங்களிலுமே கட்டளைப்படி நடப்பவர் ஆவது என்றால் சுலபமாக முயற்சி செய்பவர் ஆவது. ஏனென்றால், மூன்று விதங்களில் குழந்தைகளுக்கு கட்டளை கிடைத்திருக்கிறது. அமிர்தவேளையில் தொடங்கி இரவு வரை ஒவ்வொரு நேரத்திற்கும், ஒவ்வொரு காரியத்திற்கும் கட்டளை கிடைத்திருக்கிறது. கட்டணைப்படி நடந்து கொண்டே இருந்தீர்கள் என்றால் எந்த விதமான கடும் உழைப்பும், கடினமும் அனுபவம் ஆகாது. ஒவ்வொரு நேரத்தின் மனதில் எழும் எண்ணம், வார்த்தைகள் மற்றும் செயல் மூன்றுக்குமே தெளிவான

கட்டளை கிடைத்திருக்கிறது. இதைச் செய்யலாமா, செய்யக்கூடாதா என்று யோசிப்பதற்கும் அவசியமில்லை. இது சரியா அல்லது தவறா என்று யோசிப்பதற்கான உழைப்பும் தேவையில்லை. பரமாத்மாவின் கட்டளையோ எப்பொழுதுமே உயர்ந்தது. எனவே வந்திருக்கும் அனைத்து குமாரர்கள், மிக நல்ல ஒரு கூட்டம். நீங்கள் ஒவ்வொருவரும் தந்தையின் குழந்தை ஆனவுடனேயே தந்தையிடம் உறுதிமொழி செய்திருக்கிறீர்களா? எப்பொழுது தந்தையின் குழந்தை ஆனீர்களோ அப்பொழுது முதன் முதலில் என்ன உறுதிமொழி கொடுத்தீர்கள்? பாபா உடல், மனம், செல்வம் என்னவெல்லாம் இருக்கிறதோ, குமாரர்களிடம் செல்வமோ அதிகம் இருப்பதில்லை இருந்தாலும் என்ன இருக்கிறதோ, அனைத்தும் உங்களுடையது என்ற இந்த உறுதிமொழியைச் செய்துள்ளீர்களா? உடலும், மனமும், செல்வமும் மற்றும் சம்மந்தமும் அனைத்தும் உங்களுடன் என்ற இந்த உறுதிமொழியை உறுதி செய்திருக்கிறீர்களா? எப்பொழுது உடல், மனம், செல்வம், சம்மந்தம் அனைத்தும் உங்களுடையது என்றால் என்னுடையதாக என்ன இருந்தது? பிறகு என்னுடையது என்பது ஏதாவது இருக்கிறதா? உடல், மனம், செல்வம், மக்கள். அனைத்தையும் தந்தையிடம் ஒப்படைத்து விட்டீர்களா? இல்லறத்தைச் சேர்ந்தவர்களும் செய்தீர்களா? மதுபனைச் சேர்ந்தவர்கள் செய்தீர்களா? உறுதியாகத் தான் இல்லையா? எப்பொழுது மனதும் தந்தையினுடையது ஆகி விட்ட பிறகு என்னுடைய மனம் என்பது இல்லை தான் இல்லையா? அல்லது மனம் என்னுடையதா? என்னுடையது என்று புரிந்து உபயோகம் செய்ய வேண்டுமா? எப்பொழுது மனதை தந்தையிடம் கொடுத்து விட்டீர்கள் என்றால் இதுவும் உங்களிடம் நம்பிக்கை வைத்து கொடுக்கப்பட்ட ஒன்றாகும். பிறகு யுத்தம் எதன் ஆதாரத்தில் செய்கிறீர்கள். என்னுடைய மனம் குழப்பத்தில் இருக்கிறது, எனது மனதில் வீணான எண்ணங்கள் வருகின்றன, என்னுடைய மனம் சஞ்சலம் ஆகிறது... எப்பொழுது என்னுடையது என்பது இல்லை என்றால், நம்பிக்கையின் பேரில் கொடுக்கப்பட்டது என்ற ஒன்றை என்னுடையது என்று எண்ணிக் கொண்டு உபயோகம் செய்வது என்பது, நம்பிக்கையின் பேரில் கொடுக்கப்பட்ட ஒன்றில் மோசடி, செய்வது. மாயாவின் வாசல் 'நான் மற்றும் என்னுடையது. அப்படி உடலும் உங்களுடையது அல்ல, பிறகு தேக அபிமானத்தின் நான் என்கின்ற வார்த்தை எங்கிருந்து வந்தது?

மனமும் உங்களுடையது இல்லை என்றால், என்னுடையது, என்னுடையது என்பது எங்கிருந்து வந்தது? உங்களுடையதா அல்லது என்னுடையதா? தந்தையினுடையது. அல்லது சொல்ல மட்டும் வேண்டும். செய்ய வேண்டாமா? சொல்வது தந்தையினுடையது ஆனால் நம்புவது தன்னுடையது என்று. தேக உணர்வின் நான் என்பதும் இல்லை. என்னுடையது என்பதும் இல்லை என்ற இந்த முதல் உறுதிமொழியை மட்டும் தவறாது நினைவு செய்யுங்கள். அப்படி என்னவெல்லாம் தந்தையின் கட்டளையாக இருக்கிறதோ, உடலையும், மனதையும் நம்பிக்கையில் கொடுக்கப்பட்டு ஒன்று என்று புரிந்து கொள்ளுங்கள். பிறகு கடின உழைப்பு செய்வதற்கு அவசியம் இருக்கிறதா என்ன? ஏதாவது பலஹீனம் வருகிறது என்றால் இந்த இரண்டு வார்த்தைகளிலிருந்து வருகிறது -'நான் மற்றும் என்னுடையது'. எனவே உங்களுடைய உடலும் அல்ல, தேக உணர்வின் நான் என்பதும் அல்ல. மனதில் என்னென்ன எண்ணங்கள் எல்லாம் வருகின்றன, அவற்றிற்காக தந்தையின் கட்டளை என்னவாக இருக்கிறது. ஒருவேளை நீங்கள் தந்தையின் கட்டளைப்படி நடப்பவராக இருக்கிறீர்கள் என்றால், நேர்மறையாக யோசியுங்கள். சுபபாவனையின் எண்ணத்தை வையுங்கள். வீணான எண்ணங்கள் வை என்பது தந்தையின் கட்டளையா என்ன? இல்லை. எனவே எப்பொழுது உங்களுடைய மனமே இல்லை என்ற பிறகு வீணான எண்ணங்கள் வைக்கிறீர்கள் என்றால் தந்தையின் கட்டளையை நடைமுறையில் கொண்டு வரவில்லை இல்லையா? நான் பரமாத்மாவின் கட்டளைப்படி நடக்கும் குழந்தை என்ற இந்த ஒரு வார்த்தையை மட்டும் நினைவில் வையுங்கள். இது தந்தையின் கட்டளையா அல்லது இல்லையா என்று அதை யோசியுங்கள். யார் கட்டளைப்படி நடக்கும் குழந்தைகளாக இருப்பார்களோ அவர்கள் தந்தைக்கு இயல்பாகவே நினைவில் வருகிறார்கள். இயல்பாகவே அன்பிற்குரியவர்களாக இருப்பார்கள். இயல்பாகவே தந்தையின் நெருக்கத்தில் இருப்பார்கள். எனவே நான் தந்தையின் நெருக்கத்தில் இருக்கிறேனா, தந்தையின் கட்டளைப்படி நடப்பவனா என்று சோதனை செய்யுங்கள். நான் யார் என்ற இந்த ஒரு வார்த்தையை அமிர்தவேளையில் நினைவு செய்ய முடியும். சுட்டளைப்படி நடப்பவனா அல்லது சில நேரம் கட்டளைப்படி நடப்பவன், சில நேரம் கட்டளையிலிருந்து விலகிச் செல்பவரா? எந்த ரூபத்திலும் ஒருவேளை ஒரு பாபாவின் சம்மந்தம் தான் நினைவு

இருக்கிறது, இதயத்திலிருந்து பாபா என்பது வெளிப்பட்டது என்றால், பாபாவின் அருகாமையை அனுபவம் செய்வீர்கள். என்று மந்திரம் மாதிரி சொல்லாதீர்கள். அவர்கள் ராம், ராம் என்று கூறுகிறார்கள். மேலும் நீங்கள் பாபா, பாபா என்று கூறுகிறீர்கள் ஆனால் பாபா என்பது இதயத்திலிருந்து வெளியாக வேண்டும். ஒவ்வொரு காரியம் செய்வதற்கு முன்பும் மனதிற்காக, உடலிற்காக அல்லது பணம். செல்வத்திற்காக பாபாவின் கட்டளை என்ன என்று முதலில் சோதனை செய்யுங்கள். குமாரர்களிடம் எவ்வளவு தான் கொஞ்சம் செல்வம், பணம் இருக்கிறது என்றாலும், எப்படி தந்தை கட்டளை இட்டிருக்கிறார். பணம் செல்வத்தின் கணக்கை எந்தவிதமாக வைக்க வேண்டும். அந்த மாதிரி வைத்திருக்கிறீர்களா? அல்லது எப்படி வருகிறதோ அப்படியே செலவழித்துக் கொண்டிருக்கிறீர்களா? ஒவ்வொரு குமாரர்களுக்கும் பணத்தின் கணக்கை அவசியம் வைக்க வேண்டும். பணத்தை எங்கே மற்றும் எப்படி உபயோகிக்க வேண்டும், மனதையும் எங்கே மற்றும் எப்படி உபயோகிக்க வேண்டும், உடலையும் எந்தக் காரியத்தில் ஈடுபடுத்த வேண்டும். இந்த அனைத்து கணக்கும் இருக்க வேண்டும். தாதிகள் நீங்கள் எப்பொழுது தாரணைக்கான வகுப்பு எடுக்கிறீர்கள் என்றால் பணத்தை எப்படி உபயோகிக்க வேண்டும். என்ன கணக்கு வைக்க வேண்டும் என்று புரிய வைக்கிறீர்கள் இல்லையா? கணக்கு எப்படி வைக்க வேண்டும், எங்கே கொடுக்க வேண்டும் என்று தெரியுமா? கணக்கை வைத்திருக்கிறீர்களா? குமாரர்களுக்கு எப்படி கணக்கை எழுத வேண்டும் மற்றும் எங்கே ஈடுபடுத்த வேண்டும் என்ற இது தெரியுமா? குறைவானவர்கள் தான் கையை உயர்த்துகிறார்கள் அதில் புதியவர்களும் அதிகம் இருக்கிறார்கள், இவர்களுக்கு தெரியாது, என்னென்ன செய்ய வேண்டும் என்று இவர்களுக்கு அவசியம் இதைக் கூற வேண்டும். கவலையின்றி ஆகி விடுவார்கள், சுமையாக இருக்காது. ஏனென்றால் உங்கள் அனைவருடைய லட்சியமே குமார் என்றால் லேசாக இருப்பவர். இரண்டு விதமாகவும் லேசாக இருட்பவர். நான் நம்பர் ஒன்-ல் வர வேண்டும் என்பது தான் குமாரர்களின் லட்சியம் இல்லையா? எனவே லட்சியத்தின் கூடவே லட்சணமும் வேண்டும். லட்சியம் மிக உயர்ந்ததாக இருந்து, மேலும் லட்சணம் இல்லை என்றால் லட்சியம் வரை சென்றடைவது கடினம் ஆகும். எனவே தந்தையின் கட்டளையாக என்னென்ன இருக்கிறதோ அதை எப்பொழுதும் புத்தியில் வைத்து பிறகு செயலில் வாருங்கள்.

பிராமண வாழ்க்கையின் முக்கிய பொக்கிஷங்கள் எண்ணம், நேரம் மற்றும் சுவாசம் என்று ஏற்கனவே பாப்தாதா புரிய வைத்திருக்கிறார். உங்களுடைய சுவாசம் கூட மிக மிக விலைமதிக்க முடியாதது. ஒரு சுவாசம் கூட சாதாரணமாக இருக்க வேண்டாம், வீணானதாக இருக்க வேண்டாம். பக்தியில் ஒவ்வொரு சுவாசத்திலும் தன்னுடைய இஷ் தேவி தேலதையை நினைவு செய்யுங்கள் என்று கூறுகிறார்கள். அப்படி சுவாசம் கூட வீணாகச் செல்ல வேண்டாம். ஞானத்தின் பொக்கிஷம், சக்திகளின் பொக்கிஷம் . இவைகளோ இருக்கவே இருக்கின்றன ஆனால் எண்ணம், நேரம் மற்றும் சுவாசம் இந்த மூன்று பொக்கிஷங்களும் முக்கியமானவை. இந்த மூன்றும் கட்டளைக்கு ஏற்றபடி பயன்படுத்தப்படுகின்றனவா? வீணாகச் செல்லவில்லையே? ஏனென்றால் வீணாகச் செல்லும்போது சேமிப்பாவதில்லை. மேலும் சேமிப்புக்கான கணக்கில் இந்த சங்கம யுகத்தில் தான் சேமிப்பு செய்ய வேண்டும். சத்யுகம், திரேதாயுகத்தில் உயர்ந்த வாழ்க்கையை அடைவதாக இருந்தாலும், துவாபர கலி யுகத்தில் உயர்ந்த பூஜைக்குரிய பதவியை அடைவதாக இருந்தாலும். இந்த இரண்டிற்குமான சேமிப்பு இந்த சங்கம யுகத்தில் செய்ய வேண்டும். இந்த கணக்கின்படி சங்கம யுக கால வாழ்க்கையின், சின்னஞ்சிறு ஜென்மத்தின் எண்ணம், நேரம் மற்றும் சுவாசம் எவ்வளவு விலைமதிக்க முடியாதது என்று யோசித்துப் பாருங்கள். இதில் அலட்சியமானவராக ஆகாதீர்கள். எப்படி வந்ததோ அப்படியே நாள் கழிந்து சென்றது என்றால் நாள் கழிந்தது அல்ல, ஆனால் ஒரு நாளில் மிக அதிகமாக இழந்தீர்கள். எப்பொழுதாவது ஏதாவது வீணான எண்ணம், வீணான நேரம் செல்கிறது என்றால் ஐந்து நிமிடங்கள் தானே சென்றது, அதனால் என்ன என்று அப்படி நினைக்காதீர்கள். நேரத்திற்குத் தகுந்தாற்போல் இயற்கை தனது காரியத்தில் எவ்வளவு தீவிரமாக இருக்கிறது என்று பாருங்கள். ஏதாவது ஒன்றைக் காண்பித்துக் கொண்டே இருக்கிறது. எங்கேயாவது தனது லீலைகளைக் காண்பித்துக் கொண்டே இருக்கிறது ஆனால் இயற்கையின் தலைவனான பிராமண குழந்தைகளின் லீலையே பறக்கும் கலைக்கானது. அப்படி இயற்கை தனது விளையாட்டைக் காண்பிக்கிறது ஆனால் பிராமணர்கள் தனது பறக்கும் கலையின் விளையாட்டை காண்பித்துக் கொண்டு இருக்கிறார்களா? (யாரோ பாப்தாதாவிடம் ஒரிசாவில் வந்த புயலின் செய்தியை இந்த அளவு

நஷ்டம் ஏற்பட்டது என்று எழுதிக் கொடுத்திருந்தார்). இந்த இயற்கையின் விளையாட்டையோ பார்த்து விட்டீர்கள் ஆனால் நீங்கள் இயற்கையின் விளையாட்டை மட்டும் பார்த்தீர்களா அல்லது தனது பறக்கும் கலையின் விளையாட்டில் பிஸியாக இருந்தீர்களா? அல்லது செய்தியை மட்டும் கேட்டுக் கொண்டே இருந்தீர்களா? அனைத்து செய்திகளையோ கேட்கத் தான் வேண்டியதிருக்கிறது, ஆனால் எவ்வளவு செய்தி கேட்பதில் ஆர்வம் இருந்ததோ, அதே போல் தன்னுடைய பறக்கும் கலையின் விளையாட்டில் இருப்பதற்கான ஆர்வம் இருந்ததா! சில குழந்தைகள் குப்த (வெளியில் தெரியாத) யோகிகளாகவும் இருக்கிறார்கள், அந்த மாதிரி குப்த யோகி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் உதவியும் அதிகம் கிடைத்தது. மேலும் அந்த மாதிரி குழந்தைகள் அவர்களே ஆடாமல் அசையாதவர்களாக இருந்தார்கள், சாட்சியாக இருந்தார்கள் மற்றும் சற்றுப்புறத்திலும் தேவையான நேரத்தில் சகயோகம் கொடுத்தார்கள். எப்படி ஸ்தூல சகயோகம் கொடுப்பவர்கள். அரசங்கமாக இருந்தாலும் மற்றும் அக்கம்பக்கத்தில் இருக்கும் மனிதர்களும் சகயோகம் கொடுப்பதற்குத் தயாராகி விடுகிறார்கள். அதே போல் பிராமண ஆத்மாக்களும் தன்னுடைய சகயோகமான சக்தி, அமைதி, சுகம் கொடுப்பதற்கான உயர்ந்த ஈஸ்வரிய காரியத்தைச் செய்தார்களா? எப்படி அந்த அரசாங்கம் இதைச் செய்தது, இந்த தேசம் இதைச் செய்தது என்று உடனேயே அறிவிப்பு செய்து விடுகிறார்கள். பிராமணர்கள் நீங்களும் உங்களுடைய இந்தக் காரியத்தை செய்தீர்களா என்று பாப்தாதா கேட்கிறார். நீங்களும் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும். ஸ்தூல சகயோகம் கொடுப்பது இதுவும் அவசியமாக இருக்கிறது. இதில் பாப்தாதா மறுப்பு சொல்வதில்லை ஆனால் பிராமண ஆத்மாக்களின் விசேஷ காரியமாக என்ன இருக்கிறதோ அந்த சகயோகத்தை வேறு யாரும் கொடுக்க முடியாது, அந்த மாதிரி சகயோகத்தை விழிப்புணர்வோடு இருந்து நீங்கள் கொடுத்தீர்களா? கொடுக்கத் தான் வேண்டும் இல்லையா? அல்லது அவர்களுக்கு ஆடை வேண்டும், உணவு பொருட்கள் மட்டும் வேண்டும் என்றிருக்கிறதா? முதலிலோ மனதில் அமைதி வேண்டும். எதிர்நோக்கும் சக்தி வேண்டும். அப்படி ஸ்தூலத்தின் கூடவே சூட்சும சகயோகத்தை பிராமணர்கள் தான் கொடுக்க முடியும், வேறு யாரும் கொடுக்க முடியாது. அப்படி இது ஒன்றுமே இல்லை. இதுவோ ஒத்திகையாக இருந்தது.

உண்மையானதோ இனி வரப்போகிறது. அதனுடைய ஒத்திகையை உங்களுக்கும் தந்தை மற்றும் இயற்கை செய்வித்துக் கொண்டிருக்கிறது. என்னென்ன சக்திகள் மற்றும் பொக்கிஷங்கள் உங்களிடம் இருக்கின்றனவோ அதை தேவையான நேரத்தில் உபயோகிக்கத் தெரியுமா?

குமாரர்கள் என்ன செய்வீர்கள்? சக்திகள் சேமிப்பாக இருக்கின்றனவா? அமைதி கக்தி சேமிட்டாக இருக்கிறதா? அதை உபயோகிக்கத் தெரியுமா? கையையோ மிக நன்றாக உயர்த்துகிறீர்கள், இப்பொழுது நடைமுறையில் காண்பிக்க வேண்டும். சாட்சியாக இருந்து பார்க்கவும் வேண்டும். கேட்கவும் வேண்டும் மற்றும் சகயோகம் கொடுக்கவும் வேண்டும். இறுதியில் உண்மையான பங்கு எப்பொழுது நடக்குமோ அதில் சாட்சியாகவும், பயமற்றவராகவும் இருந்து பார்க்கவும் வேண்டும் மற்றும் தன்னுடைய பங்கைச் செய்யவும் வேண்டும். எந்தப் பங்கு? வள்ளலின் குழந்தைகள், வள்ளலாகி ஆத்மாக்களுக்கு என்ன வேண்டுமோ அதைக் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்படி நீங்கள் மாஸ்டர் வள்ளல் தான் இல்லையா? கையிருப்பை சேமித்து வையுங்கள். எந்த அளவு கையிருப்பு தன்னிடம் இருக்குமோ அந்த அளவே வள்ளல் ஆக முடியும். இறுதி வரையிலும் தனக்காகவே சேமித்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால் வள்ளல் ஆக முடியாது. அனேக ஜென்மங்களுக்காக உயர்ந்த வாழ்க்கை பதவியாக என்ன அடைய வேண்டுமோ அதை அடைய முடியாது. எனவே ஒரு விஷயத்தில் கையிருப்பை தன்னிடம் சேமித்து வையுங்கள். சுபபாவனை, சுபவிருப்பங்களின் களஞ்சியம் எப்பொழுதும் நிரம்பி இருக்கட்டும். இரண்டாவது எந்த நேரம் யாருக்கு எந்த விசேஷ சக்திகள் வேண்டுமோ அதைக் கொடுக்க முடிய வேண்டும். இப்பொழுது நேரத்திற்குத் தகுந்தாற் போல் தன்னுடைய முயற்சிக்காக எண்ணம் மற்றும் நேரத்தை மட்டும் கொடுங்கள். கூடவே வள்ளல் ஆகி உலகிற்கும் சகயோகம் கொடுங்கள். தான் என்ன முயற்சி செய்ய வேண்டும் என்பதையோ கூறியிருக்கிறோம் - அமிர்தவேளையிலேயே நான் கட்டளைப்படி நடக்கும் குழந்தையா என்று யோசியுங்கள். ஒவ்வொரு காரியத்திற்காகவும் கட்டளை கிடைத்திருக்கிறது. எழுவதற்கு, தூங்குவதற்கு, உணவு அருந்துவதற்கு மற்றும் கர்மயோகி ஆவதற்கு அப்படி ஒவ்வொரு காரித்திற்கும் கட்டளை கிடைத்திருக்கிறது. கட்டளைப்படி நடப்பவர் ஆவது தான் தந்தைக்குச்

சமமாக ஆவது. ஸ்ரீமத்படி நடக்க வேண்டும், மனம் சொல்லும் வழியும் மற்றவர்கள் சொல்லும் வழியும் வேண்டாம். வேறு எந்த வழியும் சேர்ந்து விட வேண்டாம். சில நேரம் மனம் சொல்லும் வழியிலும் சில நேரம் மற்றவர்கள் சொல்லும் வழியிலும் நடந்தீர்கள் என்றால் கடுமையாக உழைக்க வேண்டியதிருக்கும். சுலபமாக இருக்காது. ஏனென்றால் மனம் சொல்லும் வழி, மற்றவர்கள் சொல்லும் வழி மேலே பறக்க விடாது. மனம் சொல்லும் வழி, மற்றவர்கள் சொல்லும் வழியும் சுமையானது. மேலும் சுமையானவர் மேலே பறக்க முடியாது. ஸ்ரீமத் டபுள் லைட் ஆக்குகிறது. ஸ்ரீமத்படி நடப்பது என்றால் சுலபமாக தந்தைக்குச் சமமாக ஆவது. ஸ்ரீமத்படி நடந்து கொண்டிருப்பவரை எந்தவொரு சூழ்நிலையும் கீழே கொண்டு வர முடியாது. உங்களுக்கு ஸ்ரீமத்படி நடக்கத் தெரியுமா?

நல்லது -இப்பொழுது குமாரர்கள் என்ன செய்வீர்கள். அழைப்பு கிடைத்திருக்கிறது. விசேஷ கவனிப்பு ஏற்பட்டது. பாருங்கள் நீங்கள் எவ்வளவு செல்லமானவர்கள் ஆகி விட்டீர்கள். இப்பொழுது வரும் நாட்களில் என்ன செய்வீர்கள்? பதில் சொல்வீர்களா அல்லது அங்கே சென்றீர்கள் என்றால் அங்கே உள்ளவர்களாகவே ஆகி விட்டீர்கள், மேலும் இங்கே வந்தீர்கள் என்றால் இங்கே உள்ளவர்களாக ஆகி விட்டீர்கள். அந்த மாதிரியோ நீங்கள் இல்லை தான் இல்லையா? இங்கேயோ நீங்கள் மிகவும் மகிழச்சியாக இருக்கிறீர்கள். மாயாவின் தாக்குதலிலிருந்து பாதுகாப்பாக இருக்கிறீர்கள். உங்களில் அந்த மாதிரி மதுபன்னிலும் மாயா வந்ததாக. யாராவது இருக்கிறீர்களா? யாருக்கு மதுபன்னில் வந்து கூட கடும் முயற்சி செய்ய வேண்டியதாக இருந்தது? பாதுகாப்பாக இருக்கிறீர்கள், நல்லது தான் : பாப்தாதாவும் குஷி அடைகிறார். இளைஞர்களின் குரூப்பின் மேல் அரசாங்கத்தின் கவளமும் செல்லும். அந்த மாதிரி நேரமும் வரும் ஆனால் எப்பொழுது நீங்கள் விக்ன விநாஷக் ஆகி விடுவீர் களோ அப்பொழுது நடக்கும், விக்ன விநாஷக் என்பது யாருடைய பெயர்?. உங்களுடையது தான் இல்லையா? குமாரர்களை எதிர்க்கும் அளவிற்கு தடைகளுக்கு தைரியமே இருக்கக்கூடாது. அப்பொழுது தான் விக்ன விநாஷக் என்று கூறுவோம். விக்னத்தின் தோல்வி ஏற்பட்டால் ஏற்படட்டும் ஆனால் தாக்குதல் செய்யக்கூடாது. விக்ன விநாஷக் ஆவதற்கான தைரியம் இருக்கிறதா? அல்லது அங்கே சென்று தாதி நான் மிக நன்றாக

இருந்தேன், ஆனால் எனக்கு என்ன ஆயிற்று என்று எனக்கே தெரியவில்லை என்று கடிதம் எழுதுவீர்களா? இந்த குஷியான செய்தியை மட்டுமே அனைவருக்கும் எழுதுங்கள் - ஓ.கே, வெரி குட் மற்றும் நான் விக்ன விநாஷக் ஆவேன்! ஒரு வார்த்தை மட்டும் எழுதுங்கள். மிக நீண்ட கடிதம் எழுதாதீர்கள். ஓ.கே - நல்லது.

உலகில் நாலா புறமும் உள்ள கட்டளைப்படி நடக்கும் குழந்தைகளுக்கு, எப்பொழுதும் விக்ன விநாஷக் ஆக இருக்கும் குழந்தைகளுக்கு, எப்பொழுதும் ஸ்ரீமத்படி சுலபமாக நடந்து கொள்பவர்களுக்கு, கடின உழைப்பிலிருந்து விடுபட்டு இருப்பவர்களுக்கு, எப்பொழுதும் மகிழ்ச்சியில் பறக்கும் மற்றும் பறக்க வைப்பவர்களுக்கு, அனைத்து பொக்கிஷங்களின் களஞ்சியங்களில் நிரம்பியவராகி அந்த மாதிரி தந்தையின் நெருக்கமான சமமாக இருக்கும் குழந்தைகளுக்கு, மிக அதிகமான அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம். குமாரர்களுக்கும் விசேஷமாக களைப்பற்று மற்றும் எப்பொழுதும் தயார் நிலையில் இருக்கக்கூடிய எப்பொழுதும் பறக்கும் கலையில் பறக்கக்கூடியவர்களுக்கு பாப்தாதாவின் விசேஷ அன்பு நினைவுகள்.

வரதானம்: திருப்தியின் மூன்று சான்றிதழ்கள் மூலமாக எப்பொழுதும் வெற்றியை அடையக்கூடிய உயர்ந்த பதவிக்கு உரியவர் ஆகுக!

ஒவ்வொருவருக்கும் இந்த மூன்று சான்றிதழ்கள் -தந்தை, தன்னிடம் மற்றும் பரிவாரத்திலிருந்து பெற வேண்டும். குடும்பத்தை திருப்தியாக வைத்துக் கொள்வதற்கான ஒரு சின்ன விஷயத்தை நினைவில் வையுங்கள். மரியாதை கொடுப்பது என்ற இசைத்தட்டு எப்பொழுதும் ஒலித்துக் கொண்டே இருக்கட்டும், இதில் சுயநலம் அற்றவராக ஆகுங்கள். தந்தையை திருப்தி படுத்துவதற்காக உண்மையானவர் ஆகுங்கள். மேலும் தன்னை திருப்திபடுத்துவதற்காக எப்பொழுதும் ஸ்ரீமத் என்ற கோட்டிற்கு உள்ளேயே இருங்கள். இந்த மூன்று சான்றிதழ்கள் உயர்ந்த வாழ்க்கைப் பதவிக்கு உரியவர் ஆக்கி விடும்.

சுலோகன்: யார் உருவத்தைப் பார்க்காமல் சைத்தன்யம் மற்றும் சரித்திரத்தைப் (நடத்தை) பார்க்கிறார்களோ, அவர்கள் தான் உயர்ந்த சரித்திரவான்கள்!

❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋
❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋

# 30.11.1999 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மதிப்புடன் தேர்ச்சி பெறுவோர் ஆவதற்காக அனைத்து பொக்கிஷங்களின் கணக்கின் சேமிப்பை நிரம்பியதாக ஆக்குங்கள்!

இன்று பாப்தாதா எந்த சபையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்? இன்றைய சபையில் ஒவ்வொரு குழந்தையும் மிக உயர்ந்த மற்றும் அழியாத பொக்கிஷங்களினால் நிரம்பிய மிகப் பெரிய செல்வந்தராக இருக்கிறார். உலகத்தினர் எவ்வளவு தான் செல்வந்தராக இருந்தாலும், அவர்கள் ஒரு பிறவிக்கு மட்டும் செல்வந்தராக இருக்கிறார்கள். அந்த ஒரு பிறவியில் கூட செல்வந்தராக இருப்பாரா, இல்லையா என்ற இதுவும் நிச்சயமில்லை. அப்படி எவ்வளவு தான் உலகத்திலேயே மிகப் பெரிய செல்வந்தராக இருந்தாலும் அது ஒரு பிறவிக்கு மட்டும் தான். மேலும் நீங்கள் நிச்சயம் மற்றும் போதையோடு நாங்கள் அனேக பிறவிகளுக்கு மிகப் பெரிய செல்வந்தர்களாக இருக்கிறோம் என்று கூறுகிறீர்கள். ஏனென்றால் நீங்கள் அனைவரும் அழியாத பொக்கிஷங் களினால் நிரம்பியவர்களாக இருக்கிறீர்கள். நான் இந்த நேரத்தில் செய்யும் முயற்சி மூலம் ஒரு நாளில் கூட மிக அதிக வருமானம் செய்பவள் என்றும் நீங்கள் அனைவரும் தெரிந்திருக்கிறீர்கள். ஒரு நாளில் நீங்கள் எவ்வளவு வருமானம் செய்கிறீர்கள் என்ற அதைத் தெரிந்திருக்கிறீர்களா? அந்த கணக்கை தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? ஒரு அடியில் பல மடங்கு என்ற வர்ணனையும் இருக்கிறது. மேலும் அனுபவமும் இருக்கிறது. அப்படி ஒரு நாளில் தந்தை மூலமாக, தந்தையின் ஞானத்தின் மூலமாக நினைவு மூலமாக ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு சேமிப்பு ஆகிறது. அப்படி முழு நாளில் நினைவிலிருந்து எத்தனை அடி எடுத்து வைக்கிறீர்களோ அந்த அளவு பலமடங்கு சேமிப்பு செய்கிறீர்கள். அந்த மாதிரி வருமானம்

செய்பவர், பொக்கிஷத்தை சேமிப்பவர் உலகில் வேறு யாராவது இருப்பார்களா? மேலும் இருக்கிறார்களா? உலகைச் சுற்றி வாருங்கள். உங்களைத் தவிர இந்த அளவு சேமிப்பை வேறு யாரும் செய்ய முடியாது. எனவே ஆத்மா என்னுடைய பாக்கியம் பரமாத்மா மூலமாக அந்த மாதிரி உயர்ந்ததாக ஆகியிருக்கிறது என்ற இந்த உயர்ந்த நினைவில் இருங்கள் என்று தந்தை கூறுகிறார்.

தன்னுடைய பொக்கிஷம் எது என்றும் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? நேரத்தின் பொக்கிஷமாகிய இந்த சங்கமயுகத்தின் காலம் எவ்வளவு உயர்ந்தது என்றும் தெரிந்திருக்கிறீர்கள், என்ன பிராப்தி வேண்டுமோ அதை உரிமையுள்ளோராகி தந்தையிடமிருந்து அடைந்து கொண்டிருக்கிறீர்கள். அனைத்து அதிகாரத்தையும் அடைந்து விட்டீர்கள் தான் இல்லையா? ஒவ்வொரு உயர்ந்த எண்ணமும் எவ்வளவு பெரிய பொக்கிஷம், நேரமும் பெரிய பொக்கிஷம் என்றால். எண்ணமும் பெரிய பொக்கிஷம். அனைத்து சக்திகளும் எவ்வளவு பெரிய பொக்கிஷம். ஒவ்வொரு ஞான ரத்தினமும் எவ்வளவு பெரிய பொக்கிஷம். ஒவ்வொரு குணமும் எவ்வளவு பெரிய பொக்கிஷம், மூச்சுக்கு மூச்சு நினைவு செய்வதினால் மூச்சும் பயனுள்ளதாக மற்றும் வெற்றியுள்ளதாகி விடுகிறது என்று உலகத்தினரும் நம்புகிறார்கள். அப்படி உங்கள் அனைவரின் மூச்சு வெற்றி சொரூபமானதேயன்றி வீணானது இல்லை. ஒவ்வொரு மூச்சிலும் வெற்றியின் அதிகாரம் நிரம்பியிருக்கிறது. பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் அனைத்து பொக்கிஷங்களையும் ஒரே மாதிரி கொடுத்திருக்கிறார். அனைத்தும் கொடுத்திருக்கிறார். மேலும் சமமாகக் கொடுத்திருக்கிறார். சிலருக்கு ஒரு குணமும், சிலருக்கு பத்து குணங்களும், சிலருக்கு நூறு குணங்களும் என்று அப்படி கொடுக்கவில்லை. கொடுக்கக் கூடிய தந்தையே! ஒவ்வொரு குழந்தைக்கும் பிராமணன் ஆனவுடனேயே அனைத்து பொக்கிஷங்களையும் சமமான ரூபத்தில் கொடுத்திருக்கிறார் ஆனால் பொக்கிஷத்தை எவ்வளவு சேமிக்கிறார்கள் அல்லது இழக்கிறார்கள் என்பது ஒவ்வொருவரின் மேல் இருக்கிறது. நான் முழு நாளில் எவ்வளவு சேமிக்கிறேன் அல்லது இழக்கிறேன் என்று ஒவ்வொருவரும் சோதனை செய்ய வேண்டும். சோதனை செய்கிறீர்களா? அவசியம் சோதனை செய்ய வேண்டும். ஏனென்றால் இது ஒரு பிறவிக்கானது அல்ல, ஆனால் ஒவ்வொரு பிறவிக்குமானது,

# 1999 அவ்யக்த முரளி

அனேக ஜென்மங்களுக்கு சேமிப்பு தேவையாக இருக்கிறது. சேமிப்பு செய்வதற்கான விதியைத் தெரிந்திருக்கிறீர்களா? மிக சுலபமானது. புள்ளியை (பூஜ்யத்தை) மட்டும் இட்டுக் கொண்டே செல்லுங்கள், பூஜ்யம் நினைவிருக்கிறது என்றால் சேமிப்பாகிறது. எப்படி ஸ்தூல செல்வத்திலும் கூட ஒன்றின் கூடவே பூஜ்யத்தை இட்டுக் கொண்டே சென்றீர்கள் என்றால், அதன் மதிப்பும் அதிகரித்துக் கொண்டே இருக்கும் இல்லையா? அது போன்றே ஆத்மாவும் புள்ளி, தந்தையும் புள்ளி, மேலும் டிராமாவில் என்ன கடந்து சென்றதோ அதற்கும் முற்றுப்புள்ளி அதாவது புள்ளி ஒருவேளை ஒவ்வொரு பொக்கிஷத்தையும் புள்ளி ரூபத்தில் நினைவு செய்தீர்கள் என்றால் சேமிப்பு ஆகிக் கொண்டே இருக்கும். அனுபவம் இருக்கிறது தான் இல்லையா? புள்ளி வைத்தீர்கள் மற்றும் வீணானவற்றிலிருந்து சேமிப்பு ஆகிக் கொண்டே இருக்கிறது. புள்ளி வைக்கத் தெரியுமா? அனேக தடவைகள் அந்த மாதிரியும் ஆகிறது. புள்ளி இடுவதற்கு முயற்சி செய்கிறார்கள் ஆனால் புள்ளிக்குப் பதிலாக நீளமான கோடு ஆகி விடுகிறது. புள்ளிக்குப் பதிலாக கேள்விக்குறி ஆகி விடுகிறது. ஆச்சரியத்தின் குறி இடப்பட்டு விடுகிறது. அப்படி சேமிப்புக் கணக்கை அதிகரிப்பதற்கான விதி புள்ளி. மேலும் இழப்பதற்கான வழி நீளமான கோடு போடுவது, கேள்விக்குறி இடுவது மற்றும் ஆச்சர்யக்குறியை இடுவது. இதில் சுலபமானது எது? புள்ளி தான் இல்லையா? அப்படி விதி மிகவும் சுலபமானது -சுவமானம் மற்றும் தந்தையின் நினைவு மற்றும் வீணானதற்கு முற்றுப்புள்ளி இடுவது.

தினசரி அமிர்தவேளையில் தனக்குத் தானே மூன்று புள்ளிகளின் நினைவுத் திலகம் இட்டுக் கொள்ளுங்கள் என்று பாப்தாதா ஏற்கனவே கூறியிருக்கிறார். மூன்று புள்ளிகளின் நினைவுத் திலகத்தை இட்டீர்கள் என்றால் பொக்கிஷமும் வீணாகச் செல்லாது. ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு பொக்கிஷமும் சேமிப்பாகிக் கொண்டே இருக்கும். அனைத்து குழந்தைகளின் ஒவ்வொரு பொக்கிஷத்தின் சேமிப்பு சார்ட்டை பாப்தாதா பார்த்தார். அதில் என்ன பார்த்தோம்? இதுவரையிலும் கூட சேமிப்புக் கணக்கு எந்த அளவு இருக்க வேண்டுமோ அந்த அளவு இல்லை. நேரம், எண்ணம் மற்றும் வார்த்தைகள் வீணாகவும் செல்கிறது. நடைமுறையில் சில நேரம் நேரத்தின் மகத்துவம் வெளிப்படும் ரூபத்தில் குறைவாக இருக்கிறது.

ஒருவேளை நேரத்தின் மகத்துவம் எப்பொழுதும் நினைவில் இருக்கிறது என்றால், வெளிப்படும் ரூபத்தில் இருக்கிறது என்றால் நேரத்தையும் இன்னும் அதிகமாக பயனுள்ளதாக ஆக்க முடியும். முழு நாளில் நேரம் சாதாரண ரூபத்தில் சென்று விடுகிறது. தவறு என்பது இல்லை, ஆனால் சாதாரணமாக இருக்கிறது. அதே போலவே எண்ணமும் தீயதாக இருக்கவில்லை, ஆனால் வீணானவைகளாக இருக்கின்றன. ஒரு மணிநேரத்தின் சோதனை செய்யுங்கள். ஒவ்வொரு மணி நேரத்தில் நேரம் மற்றும் எண்ணம் எவ்வளவு சாதாரணமாகச் செல்கிறது. சேமிப்பு ஆவதில்லை. பிறகு பாப்தாதா சமிக்ஞையும் கொடுக்கிறார் என்றால் பாப்தாதாவிற்கும் மிகுந்த மன ஆறுதல்கள் கொடுக்கிறார்கள். பாபா அந்த மாதிரி சிறிதளவு எண்ணம் மட்டும் தான் இருக்கிறது. மற்றபடி ஒன்றும் இல்லை, எண்ணம் கொஞ்சம் ஓடுகிறது. சம்பூர்ணமாக ஆகி விடுவோம். சரியாக ஆகி விடுவோம். இப்பொழுது இறுதி நேரம் எங்கே வந்திருக் கிறது, கொஞ்சம் நேரமோ இருக்கிறது தான் இல்லையா? அந்த நேரத்தில் சம்பன்னம் ஆகி விடுவோம் என்று கூறுகிறார்கள் ஆனால் நீண்ட காலத்து சேமிப்பு வேண்டும் என்று பாப்தாதா அடிக்கடி கூறியிருக்கிறார். சேமிப்புக் கணக்கை இறுதி நேரத்தில் நிரப்பி விடுவோம், நேரம் வரும் போது ஆகி விடுவோம் என்று அப்படி அல்ல. வெகுகாலத்து சேமிப்பு வெகு காலம் செல்லும். ஆஸ்தியைப் பெறுவதிலோ நாங்கள் லட்சுமி நாராயணன் ஆவோம் என்று அனைவரும் கூறுகிறீர்கள். ஒருவேளை திரேதாயுகவாசியாக ஆவீர்களா என்று கேட்டு கையை உயர்த்த வைத்தோம் என்றால் யாருமே கை உயர்த்துவதில்லை. மேலும் லட்சுமி நாராயணன் ஆவீர்களா என்று கேட்டால் அனைவரும் கையை உயர்த்துகிறார்கள். ஒருவேளை வெகுகாலத்து சேமிப்பு கணக்கு இருக்கும் என்றால் முழு ஆஸ்தி கிடைக்கும். ஒருவேளை சிறிதளவு சேமிப்பு இருக்கிறது என்றால், முழு ஆஸ்தி எப்படி கிடைக்கும்? எனவே அனைத்து பொக்கிஷங்களையும் எந்த அளவு சேமிப்பு செய்ய முடியுமோ அந்தளவு இப்பொழுதிலிருந்தே சேமிப்பு செய்யுங்கள். ஆகி விடும், வந்து விடுவோம் என்று அப்படி சொல்லாதீர்கள். கண்டிப்பாகச் செய்ய வேண்டும் என்ற இது திடத்தன்மை. அமிர்தவேளையில் நல்ல மனநிலையில் அமர்கிறார்கள் என்றால் மனதாலேயே இதைச் செய்வோம், அதைச் செய்வோம் என்று அதிக உறுதிமொழிகளை எடுக்கிறார்கள். அதிசயக் காரியம் செய்து காண்பிப்போம். இது

என்னவோ நல்ல விஷயம் தான். சிரேஷ்ட எண்ணம் வைக்கிறார்கள் ஆனால் இந்த அனைத்து உறுதிமொழிகளையும் காரியத்தில் கொண்டு வாருங்கள் என்று பாப்தாதா கூறுகிறார். உறுதிமொழியை மட்டும் செய்யாதீர்கள் ஆனால் என்னென்ன உறுதிமொழி செய்கிறீர்களோ அதை எண்ணம், சொல், செயலில் கொண்டு வாருங்கள் குழந்தைகள் நல்ல நல்ல எண்ணங்களை வைக்கிறார்கள், பாப்தாதா அந்த நேரம் குஷி அடைகிறார். ஏனென்றால் தைரியம் வைக்கிறார்கள் இல்லையா! இதுவாக ஆவோம், இதைச் செய்வோம் என்ற இந்த தைரியத்தை மிக நல்ல முறையில் வைக்கிறார்கள். அப்படி அவருடைய தைரியத்தின் மேல் பாப்தாதா குஷி அடைகிறார் ஆனால் எப்பொழுது காரியத்தில் வர வேண்டியதாக இருக்கிறது என்றால், சில நேரம் என்பது ஆகி விடுகிறது. உறுதிமொழி கொடுப்பது மிக சுலபம், ஆனால் காரியத்தில் கொண்டு வருவது என்றால், உறுதிமொழியைக் கடைப்பிடித்து நடப்பது. உறுதிமொழி செய்பவர்களோ அதிகமாக இருக்கிறார்கள் ஆனால் அதன்படி நடப்பவர்கள் வரிசைக்கிரமமாக ஆகி விடுகிறார்கள், எனவே எண்ணம் மற்றும் காரியத்தை, திட்டம் மற்றும் நடைமுறை காரியம் இரண்டையும் சமமாக்குங்கள். ஆக்க முடியும் தான் இல்லையா. வியாபாரிகள் இன்று வந்திருக்கிறார்கள். வியாபாரிகளோ வியாபாரம் செய்வதை தெரிந்திருக்கிறார்கள் தான் இல்லையா? சேமிப்பு செய்வதை தெரிந்திருக்கிறார்கள் தான் இல்லையா? மேலும் பொறியாளர் மற்றும் விஞ்ஞானியும் நடைமுறையில் காரியம் செய்கிறார்கள். மேலும் யார் சரளமாக இருக்கிறார்களோ, பாப்தாதா அவர்களை ஆட்சி செய்பவர்கள் என்று கூறுகிறார். ஏனென்றால் ஒருவேளை இந்த சேவை செய்யவில்லை என்றால் யாரும் செல்ல முடியாது. இன்று மூன்று துறைகளைச் சேர்ந்தவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் காரியம் செய்பவர்கள். சொல்பவர்களாக மட்டும் இல்லை செய்பவர்கள். அப்படி அனைத்து உறுதிமொழிகளைக் காரியத்தில் கொண்டு வரக்கூடிய ஆத்மாக்கள் தான் நீங்கள் இல்லையா? அல்லது உறுதிமொழி செய்பவர்களாக மட்டும் இருக்கிறீர்களா? உறுதிமொழி செய்யும் நேரத்தில் பாப்தாதாவிற்கு தைரியம் கொடுத்து குஷியாக்கி விடுகிறார்கள். பாப்தாதாவிடம் ஒவ்வொரு குழந்தை செய்த உறுதிமொழிகளின் கோட்பு இருக்கிறது. அங்கே (சூட்சும வதனத்தில்) உறுதிமொழிகளின் கோப்புக்களை வைப்பதற்காக அலமாரி மற்றும் இடம் வேண்டும் என்ற விஷயம் கிடையாது. சில நேரங்களில் பாப்தாதா

தன்னுடைய ஆன்மீக தொலைக்காட்சி பெட்டியை திடீரென்று துவக்குகிறார். எப்பொழுதும் துவக்குவதில்லை, எப்பொழுதாவது துவக்குகிறார் என்றால் இந்த அனைத்து விஷயங்களையும் கேட்க முடிகிறது. உங்களுக்குள் என்னென்ன பேசிக் கொள்கிறீர்களோ அதையும் கேட்கிறோம். எனவே பாப்தாதா கூறுகிறார் வீணானதாக இருப்பதை மாற்றி சேமிப்பு கணக்கில் சேமிப்பு செய்யுங்கள்.

பிராமணன் என்றால் ஆன்மீகமாக இருப்பவர். பிராமண வாழ்க்கையின் மகத்துவம் மிகப் பெரியது. பிராப்திகள் மிகப் பெரியது. சுயமரியாதையும் மிகப் பெரியது. மேலும் சங்கமயுக காலத்தில் தந்தையின் குழந்தையாக ஆவது என்ற இதுவும் மிகப் பெரிய பலமடங்கு பாக்கியம் ஆகும். எனவே ஒவ்வொரு பொக்கிஷத்தின் மகத்துவத்தை வையுங்கள் என்று பாப்தாதா கூறுகிறார். எப்படி மற்றவர்களுக்காக நிகழ்த்தும் சொற்பொழிவில் சங்கமயுகத்தின் மகிமையை எவ்வளவு கூறுகிறீர்கள். ஒருவேளை உங்களிடம் சங்கமயுகத்தின் மகிமை செய்யுங்கள் என்ற தலைப்பை கொடுத்து யாராவது பேசச் சொன்னால் எவ்வளவு நேரம் பேசமுடியும்? ஒரு மணி நேரம் பேச முடியுமா? டீச்சர்கள் இதற்கு பதில் கூறுங்கள். யாரால் பேச முடியுமோ அவர்கள் கையை உயர்த்துங்கள். எப்படி மற்றவர்களுக்கு மகத்துவத்தை கூறுகிறீர்கள், மகத்துவத்தை மிக நன்றாகத் தெரிந்திருக்கிறீர்கள். நீங்கள் தெரிந்திருக்கவில்லை என்று பாப்தாதா அந்த மாதிரி கூற மாட்டார். எப்பொழுது கூற முடியும் என்றால் தெரிந்திருக்கிறீர்கள், எனவே தான் கூறுகிறீர்கள் ஆனால் நடப்பது என்னவென்றால் அது உள்ளடங்கிப் போய் விடுகிறது. வெளிப்படையான ரூபத்தில் நினைவு இருக்க வேண்டும். சில நேரம் அது குறைவாகி விடுகிறது, சில நேரம் அதிகமாக இருக்கிறது. எனவே தன்னுடைய ஈஸ்வரிய போதையை வெளிப்படும் ரூபத்தில் வையுங்கள். ஆம் நானோ ஆகி விட்டேன் என்று அப்படி இல்லை. நடைமுறையில் நான் இருக்கிறேன் என்ற இது வெளிப்படும் ரூபத்தில் இருக்க வேண்டும். நிச்சயம் இருக்கிறது ஆனால் நிச்சயத்தின் அடையாளம் ஆன்மீக போதை. எனவே முழு நேரமும் போதை இருக்கட்டும். ஆன்மீக போதை -நான் யார்? என்ற இந்த போதை வெளிப்படும் ரூபத்தில் இருக்கிறது என்றால், ஒவ்வொரு விநாடியும் சேமிப்பாகிக் கொண்டே இருக்கும்.

இன்று பாப்தாதா சேமிப்புக் கணக்கைப் பார்த்தார். எனவே நேரத்தின் முடிவு திடீரென்று ஏற்படும் என்று இந்த விசேஷ கவனம் கொடுக்கிறார். தெரியவோ வரும், அந்த நேரத்தில் சரியாகி விடுவோம் என்று இப்படி நினைக்காதீர்கள். யார் நேரத்தின் ஆதாரத்தை எடுக்கிறார், அந்த நேரத்தில் சரி செய்து விடுவோம். அல்லது அந்த நேரத்தில் ஆகி விடும் என்றிருக்கிறார் என்றால், அவருடைய ஆசிரியர் யார்? நேரமா அல்லது சுயம் பரமாத்மாலா? பரமாத்மா மூலம் சம்பன்னம் ஆக முடியவில்லை, ஆனால் நேரம் சம்பன்னம் ஆக்கி விடும் என்றால், இதை என்னவென்று கூறுவது? நேரம் உங்களுடைய ஆசிரியரா அல்லது பரமாத்மா உங்களுடைய ஆசிரியரா? அப்படியானால் நாடகத்தின் பிரகாரம் ஒருவேளை காலம் உங்களுக்குக் கற்றுக் கொடுக்கிறது அல்லது காலத்தின் ஆதாரத்தில் மாற்றம் ஏற்படுகிறது என்றால், பிராப்தியும் சமயம் வரும்போதுதான் (கால தாமதமாக) கிடைக்கும் என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார். ஏனென்றால், நேரம் தானே ஆசிரியராக இருக்கிறது. நேரம் உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறது. நீங்கள் நேரத்திற்காக காத்துக் கொண்டிருக்காதீர்கள். அது உங்களுடைய படைப்பு மேலும் நீங்கள் மாஸ்டர் படைப்பவர். படைப்பவருக்காக படைப்பு காத்திருக்க வேண்டும். நீங்கள் மாஸ்டர் படைப்பவர். நேரத்திற்காக காத்திருக்காதீர்கள். மேலும் கடினமானதாக எது இருக்கிறது? சுலபமானதை நீங்களே கடினமாக ஆக்கி விடுகிறீர்கள். கடினம் என்பது இல்லை, கடினமாக ஆக்குகிறீர்கள். எதுவெல்லாம் சுமையாக இருக்கிறதோ அந்த சுமையை தந்தையிடம் கொடுத்து விடுங்கள் என்று எப்பொழுது தந்தை கூறுகிறாரோ அப்பொழுது கொடுக்கத் தெரியாதா? சுமையை தூக்கவும் செய்கிறீர்கள், பிறகு களைப்பும் அடைகிறீர்கள். அதன் பிறகு என்ன செய்வது? எப்படிச் என்று தந்தையிடம் முறையீடும் செய்கிறீர்கள். தன் மேல் ஏன் சுமையையும் ஏற்றுகிறீர்கள். உங்களுடைய அனைத்து சுமையை தந்தையிடம் ஒப்படைத்து விடுங்கள் என்று தந்தை தானாகவே முன் வந்து வாய்ப்பு கொடுக்கிறார். 63-ஜென்மங்களாக சுமை தூக்குவதற்கான பழக்கம் ஏற்பட்டிருக்கிறது தான் இல்லையா? எனவே பழக்கத்தின் கட்டாயத்தில் இருக்கிறீர்கள். எனவே கடினமாக உழைக்க வேண்டியதாக இருக்கிறது. சில நேரம் சுலபமாக இருக்கிறது, சில நேரம் கடினமாக இருக்கிறது. ஒன்று எந்தவொரு காரியமும் சுலபமாக நடக்கிறது அல்லது கடினமாக

இருக்கிறது. சில நேரம் சுலபம். சில நேரம் கடினமாக ஏன் இருக்கிறது? ஏதாவது காரணம் இருக்கும் இல்லையா? அதற்கான காரணம் பழக்கத்தின் வசம் ஆகி விடுகிறீர்கள். மேலும் குழந்தைகள் கஷ்டப்படுவது தந்தைக்கு மிகப் பெரிய விஷயமாக அனுபவம் ஆகிறது. பிடிப்பதில்லை. மாஸ்டர் சர்வ சக்திவான் மேலும் கஷ்டப்படுவதா? உங்களுக்கு என்ன பட்டம் கொடுக்கிறீர்கள்? கடின யோகியா அல்லது சகஜ யோகியா? நாங்கள் சகஜயோகி இல்லை என்றால் தன்னுடைய பட்டத்தை மாற்றம் செய்யுங்கள். சில நேரம் சகஜயோகி மற்றும் சில நேரம் கடினயோகியா? மேலும் யோகா என்பதே என்ன? நினைவு செய்ய வேண்டும் அவ்வளவு தான் இல்லையா? மேலும் சக்திசாலியான யோகாவின் எதிரில் கடினம் இருக்கவே முடியாது. யோகா முழு ஈடுபாட்டின் அக்னி அக்னி எவ்வளவு தான் கடினமான பொருளையும் மாற்றி விடும். இரும்பையும் உருக்கி விடும், வளைத்து விடும். அப்படி இந்த முழு ஈடுபாட்டின் அக்னி கடினத்தை சுலபமாக ஆக்க முடியாதா? சில குழந்தைகள் பாபா என்ன செய்வது சூழ்நிலை அந்த மாதிரி, உடன் இருப்பவர்கள் அந்த மாதிரி என்று மிக நல்ல நல்ல விஷயங்கள் கூறுகிறார்கள். நீங்கள் பிராமணர்கள் எந்த ஒப்பந்தத்தை எடுத்திருக்கிறீர்கள் என்று தந்தை கேட்கிறார். உலகத்தை மாற்ற வேண்டும் என்ற ஒப்பந்தத்தை எடுத்திருக்கிறீர்கள். அப்படி யார் உலகை மாற்றம் செய்வாரோ அவர் தன்னுடைய கடினத்தை அகற்ற முடியாதா?

அப்படியானால் இன்று என்ன செய்வீர்கள்? சேமிப்புக் கணக்கை அதிகரியுங்கள். மேலும் சாஜயோகி என்று கூறுகிறீர்கள். அதை அனுபவம் செய்யுங்கள். சில நேரம் கடினம், மேலும் சில நேரம் சகஜம் என்றிருந்தால் அதில் மகிழ்ச்சி இல்லை. பிராமண வாழ்க்கையே மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கை, சங்கமயுகம் மகிழ்ச்சி நிறைந்த யுகம். சுமையைத் தூக்குவதற்கான யுகம் இல்லை. சுமையை இறக்குவதற்கான யுகம். எனவே சோதனை செய்யுங்கள், தன்னுடைய எதிர்காலத்தின் ரூபத்தை ஞானம் என்ற கண்ணாடியில் மிக நன்றாகப் பாருங்கள். புரிந்ததா? நல்லது.

உலகில் நாலா புறமும் உள்ள அனைத்து பொக்கிஷங்களின் அதிபதி குழந்தைகளுக்கு, எப்பொழுதும் கடினத்தை ஒரு நொடியில் மாற்றம் செய்யக்கூடிய நிரந்தர சகஜயோகிகளுக்கு, எப்பொழுதும் எண்ணம்,

சொல். செயல் மற்றும் நேரத்தை சிரேஷ்டமாக ஆக்கக்கூடிய, எப்பொழுதும் சேமிப்பு கணக்கை அதிகரிக்கக்கூடிய, எப்பொழுதும் மனதின் எஜமானன் ஆகி, மனம், புத்தி, சம்ஸ்காரத்தை தன்னுடைய ஆணைப்படி நடத்தக்கூடிய, அந்த மாதிரி சுயராஜ்ய அதிகாரி குழந்தைகளுக்கு, பாரதத்தில் இருந்தாலும் சரி அல்லது வெளிநாடுகளில் இருந்தாலும் சரி, ஆனால் இதயத்தினால் தூரமாக இல்லை, அந்த மாதிரி நாலா புறமும் உள்ள குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: சூட்சும எண்ணங்களின் பந்தனத்திலிருந்தும் விடுபட்டு உயர்ந்த நிலையை அனுபவம் செய்யக்கூடிய பந்தனமற்றவர் ஆகும்!

எந்தக் குழந்தைகள் எந்தளவு பந்தனமற்றவர்களாக இருக்கிறார்களோ அந்த அளவு உயர்ந்த நிலையில் நிலைத்திருக்க முடியும். எனவே எண்ணம், சொல், செயலிலும் ஏதாவது சூட்சும கயிறு கட்டப்பட்டிருக்கவில்லையே என்று சோதனை செய்யுங்கள். ஒரு தந்தையைத் தவிர வேறு நினைவு வர வேண்டாம். தன்னுடைய உடலும் நினைவில் வருகிறது என்றால், உடலையும் சேர்த்து உடலின் உறவுகள், பொருட்கள், உலகம் அனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாக வந்துவிடும். நான் பந்தனமற்றவன் என்ற இந்த வரதானத்தை நினைவில் வைத்து முழு உலகத்தை மாயாவின் வலையிலிருந்து விடுவிக்கும் சேவை செய்யுங்கள்.

சுலோகன்: ஆத்ம அபிமானி நிலை மூலமாக உடல் மற்றும் மனதின் கலகத்திற்கு முடிவு கட்டுபவரே உறுதியாக இருக்கிறார்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 15.12.1999 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எண்ண சக்தியின் மகத்துவத்தை தெரிந்து, இதை அதிகரியுங்கள் மேலும் நடைமுறை பயன்பாட்டில் கொண்டு வாருங்கள்!

இன்று உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தை தன்னுடைய நாலா புறமும் உள்ள சிரேஷ்ட குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். ஏனென்றால் முழு உலகின் ஆத்மாக்களை விட குழந்தைகள் நீங்கள் சிரேஷ்டமானவர்கள் அதாவது மிக உயர்ந்தவர்கள். உலகத்தினர் உலகத்திலேயே மிக உயர்ந்தவர் என்று கூறுகிறார்கள். மேலும் அதுவும் ஒரு ஜென்மத்திற்காக ஆனால் நீங்கள் குழந்தைகள் முழுக் கல்பத்திலும் மிக உயர்ந்தவர்கள். முழுக் கல்பத்திலும் நீங்கள் சிரேஷ்டமாக இருந்திருக்கிறீர்கள். அதைத் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? உங்களுடைய அனாதி காலத்தை (பரந்தாமத்தில் இருந்த காலத்தை) பாருங்கள். அனாதி காலத்திலும் நீங்கள் அனைத்து ஆத்மாக்களும் தந்தையின் அருகாமையில் இருப்பவர்கள், அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? அனாதி ரூபத்தில் தந்தையின் கூடவே மிக அருகில் இருக்கும் சிரேஷ்ட ஆத்மாக்கள் நீங்கள். அனைவருமோ இருக்கிறார்கள், ஆனால் உங்களுடைய இடம் மிக அருகாமையில் இருக்கிறது. அப்படி அனாதி ரூபத்திலும் நீங்கள் உயர்ந்ததிலும் உயர்ந்தவர்கள். பிறகு ஆதி காலத்தில் (கல்பத்தின் தொடக்க காலத்தில்) வாருங்கள், அங்கே நீங்கள் அனைத்து குழந்தைகளும் தேவ பதவி அடைந்த தேவதை ரூபத்தில் இருக்கிறீர்கள். தன்னுடைய தேவதை சொரூபம் நினைவில் இருக்கிறதா? ஆதி காலத்தில் நீங்கள் அனைத்து பிராப்தி சொரூபமானவர்கள். உடல், மனம், செல்வம் மற்றும் மனிதர்கள் அப்படி நான்கு சொரூபக்திலுமேயே சிரேஷ்டமானவர்கள். நீங்கள் எப்பொழுதும் நிரம்பியவர்களாக அனைத்து பிராப்தி சொரூபமானவர்களாக இருக்கிறீர்கள். அந்த மாதிரியான தேவ பதவி வேறு எந்த ஆத்மாக்களுக்குப் பிராப்தி ஆவதில்லை. தர்ம

ஆத்மாக்களானாலும், மகாத்மாக்களாக இருந்தாலும் ஆனால் அந்த மாதிரி அனைத்து பிராப்திகளின் சிரேஷ்டமான, இதனை பிராப்தியாக அடையவில்லை என்பதின் பெயர் அடையாளம் கூட இல்லாத நிலையை வேறு யாரும் அனுபவம் செய்ய முடியாது. பிறகு மத்திய காலத்திற்கு வந்தீர்கள் என்றால், மத்திய காலத்திலும் ஆத்மாக்கள் நீங்கள் பூஜைக்குரியவர் ஆகிறீர்கள். உங்களுடைய ஜட விக்கிரகங்கள் பூஜை செய்யப்படுகின்றன. வேறு எந்த ஆத்மாக்களுக்கும் அந்த மாதிரி விதிப்பூர்வமான பூஜை நடப்பதில்லை. எப்படி பூஜைக்குரிய ஆத்மாக்களுக்கு விதிப்பூர்வமாக பூஜை நடக்கிறது என்றால் அந்த மாதிரி விதிப்பூர்வமாக வேறு யாருக்காவது பூஜை நடக்கிறதா என்று யோசித்துப் பாருங்கள். உங்களுடைய ஒவ்வொரு காரியத்திற்கும் பூஜை நடக்கிறது. ஏனென்றால், நீங்கள் கர்மயோகி ஆகிறீர்கள். எனவே பூஜையும் நீங்கள் செய்யும் ஒவ்வொரு கர்மத்திற்கும் (காரியத்திற்கும்) நடக்கிறது. தர்ம ஆத்மாக்களாக இருந்தாலும் அல்லது மகான் ஆத்மாக்களை கோவில்களில் உடன் வைத்தாலும், அவர்களுக்கு விதிப்பூர்வமான பூஜை நடப்பதில்லை. அப்படி நீங்கள் மத்திய காலத்திலும் மிக உயர்ந்தவர்கள். பிறகு தற்சமயத்தின் இறுதி காலத்தில் வாருங்கள். இறுதி காலத்திலும் சங்கமயுகத்தில் நீங்கள் சிரேஷ்ட ஆத்மாக்கள், என்ன சிரேஷ்டத்தன்மை இருக்கிறது? சுயம் பாப்தாதா, அதாவது பரமாத்ம ஆத்மா மற்றும் ஆதி ஆத்மா, ஆக பாப்தாதா இருவர் மூலமாகவும் பாலனைப் பெறுகிறீர்கள், படிப்பையும் படிக்கிறீர்கள் கூடவே சத்குரு மூலமாக ஸ்ரீமத்தை பெறுவதற்கு உரியவராகவும் ஆகி விடுகிறீர்கள். அப்படி அனாதி காலம், ஆதி காலம், மத்திய காலம் மற்றும் இப்பொழுது இறுதி காலத்திலும் சிரேஷ்டமானவர்களாக இருக்கிறீர்கள். இந்த அளவு போதை இருக்கிறதா?

இந்த நினைவை வெளிக்கொணர்ந்து எண்ணிப் பாருங்கள் என்று பாப்தாதா கூறுகிறார். மனதில், புத்தியில் இந்த பிராப்தியை ஓட விடுங்கள். எந்த அளவு நினைவை வெளிக்கொணருவீர்களோ அந்த அளவு நினைவில் ஆன்மீக போதை இருக்கும். குஷி இருக்கும், சக்திசாலியாக ஆவீர்கள். அந்த அளவு மிக உயர்ந்த ஆத்மாவாக ஆகியிருக்கிறீர்கள். நான் தான் மிக உயர்ந்தவன், சிரேஷ்டமாக ஆகியிருந்தேன், ஆகியிருக்கிறேன், மேலும் எப்பொழுதும் ஆகிக்

கொண்டே இருப்பேன் என்ற இந்த நிச்சயம் உறுதியாக இருக்கிறதா? போதை இருக்கிறதா? உறுதியான நிச்சயம் இருக்கிறது என்றால் கையை உயர்த்துங்கள். டீச்சர்களும் கையை உயர்த்தினார்கள்.

மாதர்களோ எப்பொழுதும் குஷியின் ஊஞ்சலில் ஆடுகிறார்கள். ஆடுகிறீர்கள் தான் இல்லையா? மாதர்களுக்கு மிகுந்த போதை இருக்கிறது, என்ன போதை இருக்கிறது? எங்களுக்காக தந்தை வந்திருக்கிறார். இந்த போதை இருக்கிறது தான் இல்லையா? துவாபரயுகத்தில் இருந்து அனைவருமே உங்களை கீழே தள்ளினார்கள், எனவே தந்தைக்கு மாதர்கள் மேல் மிகுந்த அன்பு இருக்கிறது மேலும் பிரத்யேகமாக மாதர்களுக்காக தந்தை வந்திருக்கிறார். குஷி அடைகிறார்கள் ஆனால் எப்பொழுதும் குஷியோடு இருக்க வேண்டும். இப்பொழுது கையை உயர்த்துகிறீர்கள், குஷியாக இருக்கிறீர்கள் ஆனால் ஊர் திரும்பும் பயணத்தில் செல்லும் போது கொஞ்சம் கொஞ்சம் போதை இறங்கி விடுகிறது என்று அப்படி இருக்க வேண்டாம். எப்பொழுதும் ஒரே சீரான அழியாத போதை இருக்கட்டும். சில நேரத்தின் போதை இல்லை, நிரந்தரமான டோதை நிரந்தரமான குஷியைக் கொடுக்கிறது. மாதர்கள் உங்களுடைய முகம் தூரத்திலிருந்து பார்ப்பதற்கு ஆன்மீக ரோஜா மாதிரி தென்பட வேண்டும். ஏனென்றால், இந்த விஷ்வ வித்யாலயத்தைப் பற்றிய விஷயத்தில் மாதர்கள் ஆன்மீக ரோஜா மலருக்குச் சமமாக எப்பொழுதும் மலர்ந்திருக்கும் மலர்களாக இருக்கிறார்கள். மேலும் மாதர்களே பொறுப்புகளை எடுத்து இவ்வளவு பெரிய காரியம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற விஷயம் தான் அனைவருக்கும் மிகவும் பிடித்திருக்கிறது, விசேஷமாகத் தென்படுகிறது. மகாமண்டலேஷ்வராக இருந்தாலும் அவரும் மாதர்கள் பொறுப்பாளர்களாக ஆகி, இந்த மாதிரியான சிரேஷ்ட காரியத்தை சுலபமாக செய்வித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறார். பெண்களைப் பற்றி ஒரு பழமொழி இருக்கிறது. உண்மையில்லை, ஆனால் பழமொழி, அதாவது இரண்டு பெண்கள் சேர்ந்து ஒரு காரியம் செய்வது என்பது மிகக் கடினம் ஆனால் இங்கே யார் பொறுப்பில் இருக்கிறார்கள். பெண்களே தான் இல்லையா? யாராவது சந்திக்க வருகிறார்கள் என்றால் என்ன கேட்கிறார்கள், பெண்களா நடத்துகிறார்கள். அவர்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வதில்லையா, பிரச்சனை செய்வதில்லையா

என்று கேட்பார்கள் ஆனால் இவர்கள் சாதாரண பெண்கள் இல்லை, இவர்கள் பரமாத்மா மூலமாக பொறுப்பாளர் ஆகியிருக்கும் ஆத்மாக்கள் என்று அவர்களுக்கு எப்படித் தெரியும்? பரமாத்மாவின் வரதானம் இவர்களை நடத்துவித்துக் கொண்டிருக்கிறது என்று அவர்களுக்கு என்ன தெரியும்? சகோதரர்கள் இங்கு பெண்களுக்குத் தான் மரியாதை, எங்களுக்கு இல்லையா என்ன என்று அப்படி நினைக்கவில்லையே. உங்களைப் பற்றியும் ஐந்து பாண்டவர்களின் மகிமை வர்ணனை செய்யப்பட்டு இருக்கிறது. சக்திகளுடன் 7-சீதளைகளைக் (தேவி) காண்பிக்கிறார்கள் என்றால் ஒரு பாண்டவரையும் காண்பித்திருக்கிறார்கள். மேலும் பாண்டவர்களின்றி பெண்களும் நடத்த முடியாது பெண்களின்றி பாண்டவர்களும் நடத்த முடியாது. இரண்டு புஜங்களும் வேண்டும் ஆனால் தாய்மார்களை மிகவும் கீழே தள்ளினீர்கள் தான் இல்லையா? இந்த உலகத்தினர் பெண்களால் நடத்துவது அசம்பவம் என்று நினைத்தார்கள் இல்லையா? எனவே தந்தை அதை சம்பவமாக்கிக் காண்பித்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் மாதர்களைப் பார்த்து குஷியடைகிறீர்கள் தான் இல்லையா? அல்லது இல்லையா? குஷி தான் இல்லையா. ஒருவேளை பெண்களை தந்தை பொறுப்பாளராக ஆக்கவில்லை என்றால் புதிய ஞானம். புதிய சிஸ்டம் (முறை) ஆன காரணத்தினால் பாண்டவர்களைப் பார்த்து மிகுந்த குழப்பம் ஏற்படும். பெண்கள் கவசமாக இருக்கிறார்கள். ஏனென்றால் புதிய ஞானம் இல்லையா? புதிய விஷயங்கள் இல்லையா? ஆனால் சகோதரிகளுடன் எப்பொழுதும் சகோதரர்கள் உடன் இருக்கிறார்கள். பாண்டவர்கள் அவர்கள் காரியத்தில் முன்னுக்கு இருக்கிறார்கள் மேலும் சகோதரிகள் அவர்களுடைய காரியத்தில் முன்னுக்கு இருக்கிறார்கள். இருவர்களின் கருத்துப்படி ஒவ்வொரு காரியமும் தடையின்றி நடந்து கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு நாளும் பாப்தாதா குழந்தைகள் செய்யும் விதவிதமான காரியத்தைப் பார்த்துக் கொண்டே இருக்கிறார். புதுப்புது திட்டங்கள் உருவாகிக் கொண்டே இருக்கிறது. நேரமோ அனைவர்களுக்கும் நினைவு இருக்கிறது தான் இல்லையா? நினைவு இருக்கிறதா? 1999-ன் வட்டமும் முடிவடைந்தது தான் இல்லையா? 1999 வந்து விட்டது, 1999 வந்து விட்டது என்று என்ன யோசித்தீர்கள் ஆனால் உங்கள் அனைவருக்கும் சேவை செய்வதற்கான வருடம், தடையற்று

இருப்பதற்கான வருடமாக கிடைத்தது. பாருங்கள் 1999 லேயே மௌன பட்டிகள் செய்கிறீர்கள் தான் இல்லையா? உலகம் பயப்படுகிறது. மேலும் நீங்கள், எவ்வளவு அவர்கள் பயப்படுகிறார்களோ அந்த அளவு நீங்கள் அனைவரும் நினைவின் ஆழத்தில் சென்று கொண்டிருக்கிறீர்கள். மனதின் மௌனமே ஞானக்கடலின் ஆழத்தில் செல்வது மற்றும் புதுப்புது அனு வங்களின் இரத்தினங்களைக் கொண்டு வருவது. பாப்தாதா இதற்கு முன்பு சமிக்ஞை கொடுத்திருக்கிறார். அனைத்தையும் விட மிகப் பெரிய களஞ்சியம் எது நிகழ்காலத்தையும் மற்றும் எதிர்காலத்தையும் உருவாக்குகிறது. அது தான் உயர்ந்த களஞ்சியம், உயர்ந்த எண்ணத்தின் களஞ்சியம். எண்ண சக்தி மிகப் பெரிய சக்தி, அந்த சிரேஷ்ட எண்ணத்தின் சக்தி குழந்தைகள் உங்களிடம் இருக்கிறது. எண்ணமோ அனைவரிடமும் இருக்கிறது ஆனால் சிரேஷ்ட சக்தி, சுபபாவனை மற்றும் சுபவிருப்பங்களின் எண்ணத்தின் சக்தி, மனம், புத்தியை ஒருமித்த நிலை ஆக்கும் சக்தி, அது உங்களிடம் மட்டும் தான் இருக்கிறது. மேலும் நீங்கள் எவ்வளவு முன்னேறிச் சென்று கொண்டே இருப்பீர்களோ. அவ்வளவு இந்த எண்ணத்தின் சக்தியை சேமித்துக் கொண்டே இருப்பீர்கள். வீணாக இழக்க மாட்டீர்கள். வீணாக இழப்பதின் முக்கிய காரணம் வீணான எண்ணம். வீணான எண்ணம் பெரும்பான்மையான குழந்தைகளிடம் முழு நாளிலும் இன்றும் கூட இருக்கிறது என்று பாப்தாதா பார்த்தார். எப்படி ஸ்தூலமான பணம், செல்வத்தை சிக்கனத்தோடு உபயோகிப்பவர் எப்பொழுதுமே நிரம்பியவராக இருக்கிறார், ஆனால் வீணாக இழப்பவர்கள் எங்காவது ஏமாற்றத்தை அடைந்து விடுகிறார்கள். அந்த மாதிரி சிரேஷ்ட சுத்த எண்ணத்தில் உங்களுடைய கேட்சிங் பவர் (புரிந்து கொள்ளும் சக்தி), வைப்ரேஷனை பிடிப்பதற்கான சக்தி மிக அதிகரித்து விடுகிறது அந்த அளவிற்கு அதில் சக்தி இருக்கிறது. எப்படி இந்த கம்பியில்லாத தொலைபேசி மற்ற அறிவியல் சாதனங்கள் காரியங்கள் செய்கின்றன அதே போல் சுத்த எண்ணத்தின் பொக்கிஷம் மூலம் யாராவது லண்டனில் அமர்ந்திருக்கும் ஆத்மாவின் எண்ண அலைகளைக் கூட உங்களால் அந்த மாதிரி மிகத் தெளிவாகப் பிடித்துக் கொள்ள முடியும் எப்படி கம்பியில்லா தொலைபேசி மற்றும் தொலைக்காட்சி பெட்டிகள் காரியம் செய்கின்றனவோ இவற்றை விட தெளிவாக உங்களுடைய கேட்சிங் பவர், ஒருமித்த நிலையின் சக்தி மூலம் இன்னும் அதிகரிக்கும். இந்த (அறிவியல்) ஆதாரங்களோ

அழிந்து விடும். இந்த அனைத்து சாதனங்களும் எதன் ஆதாரத்தில் இருக்கின்றன? மின்சாரத்தின் ஆதாரத்தில். என்னென்ன சுகத்திற்கான சாதனங்கள் இருக்கின்றனவோ. அவற்றில் பெரும்பான்மையானவை மின்சாரத்தின் ஆதாரத்தில் இயங்குகின்றன. அப்படி உங்களுடைய ஆன்மீக சக்தி ஆத்மாவின் சக்தி இந்தக் காரியத்தை செய்ய முடியாதா என்ன? எண்ண அலைகள் அருகில் இருந்தாலும், தூரத்தில் இருந்தாலும் உங்களால் அதைப் பிடிக்க முடியும். இப்பொழுது நிலைமை என்னவென்றால், ஒருமித்த நிலையின் சக்தி, மனம், புத்தி இரண்டுமே ஒருமித்த நிலையில் இருக்கிறது என்றால் தான் கேட்சிங் பவர் இருக்கும். மிக அதிக அனுபவம் செய்வீர்கள். சுயநலம் மற்ற, சுத்தமான, தெளிவான எண்ணத்தை உருவாக்கினீர்கள் என்றால் அது மிக விரைவிலேயே அனுபவம் செய்விக்கும். அமைதி சக்தியின் எதிரில் இந்த அறிவியல் சக்தி தலைவணங்கும். அறிவியலில் கூட ஏதோ வெற்றிடம் இருக்கிறது அதை நிரப்ப வேண்டும் என்று இப்பொழுது கூட உணர்ந்து கொண்டே இருக்கிறார்கள். எனவே பாப்தாதா மீண்டும் இறுதி நிலை, இறுதி சேவை நேரத்தில் இந்த எண்ணத்தின் சக்தி மிக வேகமான சேவை செய்விக்கும் என்று அடிக்கோடிட்டு காண்பிக்கிறார். எனவே எண்ண சக்தியின் மேல் இன்னும் அதிக கவனம் செலுத்துங்கள். அதை மிச்சப்படுத்துங்கள். சேமிப்பு செய்யுங்கள். மிக உதவியாக இருக்கும். இந்த எண்ணத்தின் சக்தி மூலம் சக்திகளை உபயோகப்படுத்துபவராக ஆவீர்கள். அறிவியலின் மகத்துவம் என்ன? உபயோகத்தில் வருகிறது என்பதால் தான் இந்த அறிவியல் நல்ல காரியம் செய்கிறது என்று நினைக்கிறார்கள். எனவே அமைதியின் சக்தியை காரியத்தில் கொண்டு வருவதற்காக ஒருமித்த நிலையின் சக்தி வேண்டும். மேலும் ஒருமித்த நிலைக்கான மூல ஆதாரம் மனதின் கட்டுப்படுத்தும் சக்தி அதன் மூலம் மனோபலம் அதிகரிக்கிறது. மனோபலத்திற்கு மிகுந்த மகிமை இருக்கிறது, மந்திர தந்திரம் செய்பவர்கள் கூட மனோபலம் மூலமாக அற்ப காலத்தின் அதிசயங்களைச் செய்து காண்பிக்கிறார்கள். நீங்களோ விதிப்பூர்வமாக, மந்திர தந்திரம் இல்லை. விதிப்பூர்வமாக நன்மை பயக்கும் அதிசயம் காண்பிப்பீர்கள். அது வரதானம் ஆகி விடும், உலக ஆத்மாக்களுக்காக இந்த எண்ணத்தின் சக்தியை உபயோகப்படுத்துவது வரதானமாக நிரூபணம் ஆகி விடும். எனவே மனதைக் கட்டுப்படுத்துவதற்கான யடுத்தும் சக்தி என்னிடம் இருக்கிறதா என்று முதலில் சோதனை செய்யுங்கள். ஒரு நொடியில், எப்படி அறிவியல்

சக்தியில் பொத்தானின் ஆதாரத்தினால், பொத்தானை அழுத்துங்கள், பொத்தானை விடுவியுங்கள் - அதே போல் மனதை எங்கே விரும்புகிறீர்களோ, எப்படி விரும்புகிறீர்களோ, எவ்வளவு நேரம் விரும்புகிறீர்களோ அந்த அளவு கட்டுப்படுத்த முடியுமா? தனக்காகவும் மற்றும் சேவைக்காகவும் மிக நல்ல நல்ல வெற்றி ரூபம் தென்படும் ஆனால் எண்ணத்தின் சக்தியின் சேமிப்பு கணக்கில் இப்பொழுது கூட உங்களுக்கு சாதாரண கவனம் தான் இருக்கிறது என்று பாப்தாதா டார்க்கிறார். எந்த அளவு கவனம் இருக்க வேண்டுமோ அந்த அளவு இல்லை. எண்ணத்தின் ஆதாரத்தில் பேச்சு மற்றும் காரியம் தானாக நடக்கின்றன. இன்று வார்த்தைகள் மேல் கட்டுப்பாடு செய்யங்கள், இன்று பார்வையை கவனத்தில் கொண்டு வாருங்கள். கடுமையாக முயற்சி செய்யுங்கள், இன்று உள்உணர்வை கவனம் வைத்து மாற்றம் செய்யுங்கள் என்று தனித்தனியாக முயற்சி செய்வதற்கான அவசியமே இல்லை. ஒருவேளை எண்ணத்தின் சக்தி மிகவும் சக்திசாலியாக இருக்கிறது என்றால் இவை அனைத்தும் தானாகவே கட்டுப்பாட்டில் வந்து விடுகின்றன. கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விடுவீர்கள். எனவே எண்ணத்தின் சக்தியின் மகத்துவத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்.

விசேஷமாக இந்த பட்டிகள் ஏன் செய்விக்கிறோம் என்றால் இது பழக்கமாகி விடவேண்டும். இந்தப் பழக்கத்தை எதிர்காலத்திலும் கவனம் வைத்து செய்து கொண்டே இருந்தீர்கள் என்றால் தான் அழியாததாக ஆகி விடும். மகத்துவம் என்ன என்று புரிந்ததா? உங்களிடம் உயர்ந்ததிலும் உயர்ந்த பொக்கிஷத்தை தந்தை கொடுத்திருக்கிறார். இந்த சிரேஷ்ட எண்ணம், சுப பாவனை, சுப விருப்பத்தின் எண்ணத்தின் பொக்கிஷம் இருக்கிறதா? தந்தை அனைவருக்கும் கொடுத்திருக்கிறார் ஆனால் சேமிப்பை வரிசைக்கிரமமாக செய்கிறார்கள் மேலும் பயன்பாட்டில் கொண்டு வருவதின் சக்தி கூட வரிசைக்கிரமமாக இருக்கிறது. இப்பொழுது கூட சுபபாவனை மற்றும் சுபவிருப்பங்கள் இவற்றை காரியத்தில் பயன்படுத்தினீர்களா? விதிப்பூர்வமாக செய்வதினால் சித்தியின் (வெற்றியின்) அனுபவம் ஆகிறதா? இப்பொழுது கொஞ்சம் கொஞ்சம் ஆகிறது. இறுதியில் உங்களுடைய எண்ணத்தின் சக்தி அந்த அளவு மகான் ஆகி விடும் -சேவையில் வாய்மொழி மூலம் செய்தி

கொடுப்பதில் என்ன நேரத்தையும் ஈடுபடுத்துகிறீர்கள், பணத்தையும் ஈடுபடுத்துகிறீர்கள், குழப்பத்திலும் வந்து விடுகிறீர்கள், களைப்படைந்தும் விடுகிறீர்கள் ஆனால் சிரேஷ்ட எண்ணத்தின் சேவையில் இவை அனைத்தும் மிச்சம் ஆகி விடும். அதை அதிகரியுங்கள். இந்த எண்ணத்தின் சக்தியை அதிகரிப்பதினால் பிரத்யக்ஷமும் விரைவில் ஏற்படும். இப்பொழுது 62-63 வருடங்கள் ஆகி விட்டன, இவ்வளவு காலத்தில் எத்தனை ஆத்மாக்களை உருவாக்கியிருக்கிறீர்கள்? 9-லட்சம் கூட இன்னும் முழுமையாகவில்லை. மேலும் முழு உலகத்திற்கும் செய்தியைக் கூற வேண்டும் என்றால், எத்தனை கோடி கணக்கான ஆத்மாக்கள் இருக்கிறார்கள்? இன்று வரையிலும் கூட பகவான் இவர்களின் ஆசிரியர், பகவான் இவர்களை செய்வித்துக் கொண்டிருக்கிறார், செய்விப்பவர் பரமாத்மா, செய்வித்துக் கொண்டிருக்கிறார் என்ற இந்த விஷயம் தெளிவாகவில்லை. நல்ல காரியம் மற்றும் சிரேஷ்ட காரியம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த செய்தி பரவி இருக்கிறது ஆனால் செய்விப்பவர் இப்பொழுது கூட குப்தமாக (மறைமுகமாக) இருக்கிறார். எனவே இந்த எண்ண சக்தி மூலம் ஒவ்வொருவரின் புத்தியை மாற்றம் செய்ய முடியும். ஆஹா பிரபு! என்று கூறி பிரத்யக்ஷமானாலும் சரி, தந்தையின் ரூபத்தில் பிரத்யக்ஷமானாலும் சரி. எனவே இப்பொழுது கூட எண்ணத்தின் சக்தியை அதிகரியுங்கள். மேலும் நடைமுறை உபயோகத்தில் கொண்டு வந்து கொண்டே இருங்கள் என்று பாப்தாதா மீண்டும் கவனம் கொடுக்கிறார். புரிந்ததா ?

நல்லது. இன்று மாதர்களுக்கான வாய்ப்பு, ஒன்று மாதர்களின் குரூப் மற்றும் இன்னொன்று மருத்துவத்துறையைச் சேர்ந்தவர்கள். மாதர்கள் என்ன அதிசயம் செய்வீர்கள்? உறுப்பினராக ஆகி விட்டீர்களா? பெண்களின் துறையில் உறுப்பினராக இருக்கிறீர்களா? நல்ல விஷயம் தான் இல்லையா? ஆனால் யாரெல்லாம் உறுப்பினர் ஆகியிருக்கிறார்களோ அவர்கள் நல்ல காரியம் செய்திருக்கிறார்கள். இப்பொழுது உங்கள் அனைவருடைய பட்டியலை அரசாங்கத்திற்கு அனுப்புவோம். ஏன் அனுப்புவோம் என்று பயப்படாதீர்கள். வருமான வரித்துறையைச் சேர்ந்தவர்கள் உங்களிடம் வரமாட்டார்கள். எனவே இந்த அனைத்து மாதர்களும் இப்பொழுது உலக மாதர்கள் ஆகி உலகத்தைத் திருத்துவார்கள் என்று அனுப்புவோம். இந்தக் காரியம்

செய்வீர்கள் தான் இல்லையா. எனவே இவ்வளவு பெண்கள் உலகைச் சொர்க்கமாக ஆக்குபவர்கள் என்று உங்களுடைய பெயரை அரசாங்கத்திற்கு அனுப்பலாமா? அனுப்பலாமா, கையை உயர்த்துங்கள், பயப்படவில்லையே? பயப்படாதீர்கள் ஆனால் ஒருவேளை உங்களைப் பற்றி அப்படியே விசாரித்தார்கள் என்றால், முதலில் உங்களுடைய வீடு சொர்க்கமாக ஆகியிருக்கிறதா என்பதில் கவனம் வைக்க வேண்டும். ஏனென்றால் முதலில் தன்னுடைய வீடு பிறகு உலகம். அப்படி எந்தவொரு மாதரின் வீட்டிற்கு வந்து சுகம், சாந்தி இருக்கிறதா என்று பார்க்கட்டும். அப்படி தென்படுமா, வீட்டை சொர்க்கமாக ஆக்குவீர்களா? அல்லது உலகை சொர்க்கமாக ஆக்குவீர்கள், வீட்டை இல்லை என்று அப்படியா? முதலில் வீட்டை ஆக்கினீர்கள் என்றால் தான் மற்றவர்கள் மீது பிரபாவம் ஏற்படும். இல்லையென்றால் வீட்டில் கலகம் தான் இருக்கிறது. சொர்க்கம் எங்கே இருக்கிறது? என்று கூறுவார்கள். எனவே மாதர்களுக்கு அந்த மாதிரி வாயுமண்டலத்தை உருவாக்க வேண்டும். அதை யார் பார்த்தாலும் மாதர்கள் நல்ல மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று தென்பட வேண்டும். நல்லது. யார் உறுப்பினரோ அவர்கள் கையை உயர்த்துங்கள். எத்தனை உறுப்பினர்கள் இருக்கிறார்கள்? (1000 வந்திருக்கிறார்கள்) 1000 கூட மிக அதிகம். யாரெல்லாம் உறுப்பினர் என்று கையை உயர்த்தினார்களோ அவர்களுடைய வீட்டில் சுகம், சாந்தி இருக்கிறதா? ஆம் என்கிற அந்த கையை உயர்த்துங்கள். எழுந்து நில்லுங்கள். புரிந்து கொண்டீர்களா அல்லது அப்படியே எழுந்து நின்று விட்டீர்களா? வீடு சொர்க்கமாக இருக்கிறதா? வீட்டில் அமைதி இருக்கிறதா? நல்லது. இவர்களைப் புகைப்படம் எடுங்கள். நல்லது.

நாலா புறமும்ளின் சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, முதல், இடை மற்றும் கடையில் சிரேஷ் டங்கைச் செய்யக்கூடிய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தன்னுடைய சிரேஷ்ட எண்ணத்தின் விதியை அனுபவம் செய்யக்கூடிய, எப்பொழுதும் சகஜயோகியின் கூடவே யோகத்தைக் காரியத்தில் பயன்படுத்தக்கூடிய, எப்பொழுதும் எண்ணத்தின் சக்தி மூலமாக அனைத்து சக்திகளையும் அதிகரிக்கக்கூடிய, மனம் மற்றும் புத்தியின் மீது கட்டுப்பாடு வைக்கக்கூடிய, சதா பிரயோகித்து வரும் குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: பழைய சம்ஸ்காரங்கள் மற்றும் தடைகளிலிருந்து முக்தி (விடுதலை) அடையக்கூடிய எப்பொழுதும் சக்தி நிறைந்தவர் ஆகுக!**

எந்த விதமான தடைகளிலிருந்தும் பலஹீனங்களிலிருந்தும் அல்லது பழைய சம்ஸ்காரங்களிலிருந்தும் முக்தி விரும்புகிறீர்கள் என்றால், சக்தியை தாரணை செய்யுங்கள். அதாவது அலங்கரிக்கப்பட்ட ரூபமாகி இருங்கள், யார் அலங்காரங்களினால் எப்பொழுதும் அலங்கரிக்கப்பட்டு இருக்கிறார்களோ அவர்கள் எதிர்காலத்தில் விஷ்ணு வம்சத்தினர் ஆகிறார்கள் ஆனால் இப்பொழுது வைஷ்ணவர் ஆகி விடுகிறார்கள். அவர்களை எந்தவிதமான கீழ்த்தரமான எண்ணம் மற்றும் சம்ஸ்காரம் தொட முடியாது. அவர்கள் பழைய உலகம் மற்றும் உலகத்தின் எந்தவொரு பொருள் மற்றும் நபர்களிலிருந்து சுலபமாகவே விலகி விடுகிறார்கள். அவர்களை எக்காரணத்தைக் கொண்டும் யாரும் தொட முடியாது.

**சுலோகன்: ஒவ்வொரு நேரமும் ஒவ் காரியத்திலும் சமநிலை வைப்பது தான் அனைவரின் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கான வழி ஆகும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 31.12.1999 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# புது நூற்றாண்டில் தன்னுடைய நடத்தை மற்றும் முகம் மூலம் ஃபரிஷ்தா சொரூபத்தை வெளிப்படுத்துங்கள்!

இன்று பாப்தாதா தன்னுடைய பரமாத்மா வளர்ப்பிற்கு உரிமையுள்ள குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். சுயம் பரமாத்மாவின் வளர்ப்பில் வளர்ந்து கொண்டிருக்கும் இவர்கள் எவ்வளவு பாக்கியம் நிறைந்தவர்கள். உலகத்தினர் எங்களுக்கு பரமாத்மா தான் உணவளிக்கிறார் (படியளக்கிறார்) என்று கூறுகிறார்கள், ஆனால் மிகக்குறைந்த விசேஷ ஆத்மாக்கள் நீங்கள் நடைமுறையில் அவருடைய வளர்ப்பில் வளர்ந்து கொண்டிருக்கிறீர்கள். பரமாத்மாவின் வளர்ப்பு இருக்கிறது, பரமாத்மாவின் ஸ்ரீமத் இருக்கிறது, அந்த ஸ்ரீமத்படியே நடந்து கொண்டிருக்கிறீர்கள். வளர்ந்து கொண்டிருக்கிறீர்கள். அந்த மாதிரி தன்னை விசேஷ ஆத்மாக்கள் என்று அனுபவம் செய்கிறீர்களா? தன்னுடைய மகான் நிலையை தெரிந்திருக்கிறீர்களா? தற்சமயமோ பிராமண ஆத்மாக்கள் மகான் தான் ! மேலும் எதிர்காலத்திலும் சர்வ சிரேஷ்ட மகானாக இருக்கிறீர்கள். துவாபர்யுகத்திலும் உங்களுடைய ஜட விக்கிரகங்கள் அந்த அளவு மகான் ஆகி விடுகின்றன. உங்களுடைய ஜட விக்கிரகங் களின் எதிரில் யார் சென்றாலும் தலை வணங்குவார். உங்களுடைய மகான் நிலை அந்த மாதிரியானது, இந்நாட்களால் கூட எந்தவொரு ஆத்மாவையும் வேஷம் போட்டு தேவதை போன்று ஆக்கி விடுகிறார்கள், லட்சுமி நாராயணன் ஆக்கி விடுகிறார்கள், ஸ்ரீராம் ஆக்கி விடுகிறார்கள் என்றாலும் எதுவரை அந்த ஆத்மா தேவதையின் கதாபாத்திரத்தை நடித்துக் கொண்டிருக்கிறதோ அதுவரையிலும் அவர் சாதாரண மனிதன் தான் என்று தெரிந்திருந்தும், தேவதை வேடம் பூண்டிருக்கும் அந்த சாதாரண ஆத்மாவைக் கூட தலைவணங்குவார்கள். அப்படி உங்களுடைய ரூபத்திற்கும் மகான் தன்மை இருக்கிறது ஆனால்

வெறும் பெயர் சூப்பப்பட்ட ஆத்மாக்களையும் மகான் என்று நினைக்கிறார்கள். எனவே அந்த மாதிரியான மகான் நிலையை அனுபவம் செய்கிறீர்களா? தெரிந்திருக்கிறீர்களா? புரிந்திருக்கிறீர்களா மற்றும் வெளிப்படும் ரூபத்தில் தன்னை அனுபவம் செய்கிறீர்களா? ஏனென்றால், மூல ஆதாரமே. அனுபவம் செய்வது தான் !

பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் கேட்பவர்களாக மற்றும் தெரிந்து கொள்பவர்களாக மட்டுமின்றி அனுபவம் நிறைந்தவர்களாக ஆக்குகிறார். அனுபவமோ ஒவ்வொருவரின் முகத்திலிருந்தும் நடத்தையிலிருந்தும் தெரிய வந்து விடும். நடத்தை மூலம் அவருடைய நிலை தெரிய வந்து விடும். அப்படியானால் என்னுடைய நடத்தை எப்படி இருக்கிறது? பிராமண நடத்தையா? பிராமணன் என்றால் எப்பொழுதும் நிரம்பிய ஆத்மா. சக்திகளினாலும் நிரம்பியவர், குணங்களி னாலும் நிரம்பியவர்... அப்படியெனில் நடத்தை அப்படி இருக்கிறதா? இவர் சாதாரணமாக இருந்த போதிலும் தெய்வீகமானவர் என்று உங்களுடைய மூகத்திலிருந்து தென்படுகிறதா? உங்கள் அனைவரின் பார்வை, உள்ளுணர்வு, எண்ண அலைகள் ஆன்மீகத்தை, தெய்வீகத்தை அனுபவம் செய்விக்கிறதா? எப்பொழுது கடைசி ஜென்மம் வரையிலும் உங்களுடைய தெய்வீக நிலை, மகான் நிலையை ஜட விக்கிரகங்களிலிருந்து அனுபவம் செய்கிறார்கள் என்றால், தற்சமயம் சைத்தன்ய சிரேஷ்ட அந்த ஆத்மாக்கள் உங்கள் மூலமாக அனுபவம் ஆகிறதா? ஜட விக்கிரகங்கள் உங்களுடையவை தான் இல்லையா?

என்னுடைய பார்வை தெய்வீகமாக. ஆன்மீகமாக இருக்கிறதா என்று அமிர்தவேளையில் தொடங்கி ஒவ்வொரு நடத்தையிலும் சோதனை செய்யுங்கள்? முகத்தின் ரூபம் எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கிறதா? ஒரே சீரான ஆன்மீக நிலை இருக்கிறதா அல்லது அவ்வப்பொழுது மாறிக் கொண்டே இருக்கிறதா? யோகாவில் அமரும் நேரத்தில் மற்றும் ஏதாவது விசேஷ சேவையின் நேரத்தில் மட்டும் ஆன்மீக நினைவு மற்றும் உள்ளுணர்வு இருக்கிறது ஆனால் சாதாரண காரியம் செய்து கொண்டிருந்தாலும் நடத்தை மற்றும் முகத்தில் விசேஷம் தென்படுகிறதா? யாராவது உங்களைப் பார்த்தாலும் நீங்கள் செயல்களைச் செய்வதிலேயே மிகவும் பிஸியாக இருக்கிறீர்கள்,

ஏதாவது குழப்பமான விஷயம் எதிரில் இருந்தாலும், நீங்கள் உங்களை ஆன்மீகமானவர் என்று நினைக்கிறீர்களா? எனவே பேச்சு, முகம் சாதாரண காரியம் செய்வதிலும் விலகியிருந்து அன்பானதாக இருப்பதாக அனுபவம் ஆகிறதா என்று சோதனை செய்யுங்கள். எந்த நேரத்திலும் திடீ ரென்று ஏதாவது ஒரு ஆத்மா உங்கள் எதிரில் வந்து விட்டார் என்றால், உங்களுடைய எண்ண அலைகள் மூலம், பேச்சுவார்த்தைகள் மூலம் இவர் ஒரு ஆன்மீக பரிஷ்தா என்று புரிந்து கொள்வாரா? ஏனென்றால் இன்றைய நாள் சங்கமத்தின் நாளாகும். பழையது சென்று கொண்டிருக்கிறது, புதியது வந்து கொண்டிருக்கிறது. எனவே உலகின் எதிரில் என்ன புதுமை தென்பட வேண்டும்? மனதில் நினைவிருக்கிறது மற்றும் புரிந்து கொள்கிறீர்கள் என்ற விஷயம் வேறு ஆனால் ஸ்தாபனை காரியம் தொடங்கி எவ்வளவு காலம் ஆகி விட்டது? எவ்வளவு காலம் கடந்து சென்று விட்டது? என்று இதனை யோசியுங்கள். கடந்து சென்ற காலத்தின் கணக்குப்படி இன்னும் எத்தனை காலம் மிச்சம் இருக்கிறது? என்ன அனுபவம் ஆக வேண்டும்? மிக நல்ல நல்ல முயற்சி செய்பவர்களும் இருக்கிறார்கள், முயற்சி செய்து கொண்டும் இருக்கிறார்கள், பறந்து கொண்டும் இருக்கிறார்கள் என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார் ஆனால் பாப்தாதா இந்த 21வது நூற்றாண்டில் புதுமையைப் பார்க்க விரும்புகிறார். நீங்கள் அனைவரும் நல்லவர்கள், விசேஷமானவர்கள், மகானாகவும் இருக்கிறீர்கள் ஆனால் தந்தையின் பிரத்யக்ஷத்தின் (வெளிப்படுத்துதல்) ஆதாரம் - சாதாரண காரியம் செய்து கொண்டும் பரிஷ்தாவின் நடத்தை மற்றும் நிலை இருக்க வேண்டும். விஷயமே அப்படி இருந்தது. காரியமும் அப்படி இருந்தது, சூழ்நிலைகள், பிரச்சனைகளும் அந்த மாதிரி இருந்தன. எனவேதான் சாதாரண நிலை ஆகி விட்டது என்ற இந்த நிலையைப் பாப்தாதா பார்க்க விரும்பவில்லை. பரிஷ்தா சொரூபம் என்றால் நினைவு சொரூபம் இருக்க வேண்டும். வெளிப்படும் ரூபத்தில் இருக்க வேண்டும். புரிந்து கொள்வது வரை இல்லை, நினைவு வரை இல்லை ஆனால் சொரூபத்தில் இருக்க வேண்டும். அந்த மாதிரியான மாற்றம் அதன் காரணமாக எந்த நேரத்திலும், எந்த நிலையிலும் ஆன்மீக சொரூபம் அனுபவம் ஆக வேண்டும். அந்த மாதிரி இருக்கிறதா? அல்லது கொஞ்சம் மாறுகிறதா? எப்படி விஷயமோ அப்படி தன்னுடைய சொரூபத்தை உருவாக்காதீர்கள். விஷயம் உங்களை ஏன் மாற்ற வேண்டும். ஸ்டியம் உங்களை மாற்ற

வேண்டுமா? அல்லது நீங்கள் விஷயத்தை மாற்ற வேண்டுமா? பரிவர்த்தனை (மாற்றம்) என்று எதைக் கூறுவது. நடைமுறை வாழ்க்கையின் உதாரணம் என்று எதைக் கூறுவது? எப்படி நேரமோ, எப்படி சூழ் நிலையோ அதே போல் சொருபம் உருவாவது என்ற இதுவோ சாதாரண மனிதர் களிடமும் இருக்கிறது ஆனால் பரிஷ்தா என்றால் பழைய அல்லது சாதாரண நடத்தை யிலிருந்தும் விலகியிருப்பது.

நேரத்தின் அழைப்பு என்பது தானே உங்களுடைய தற்போதைய தலைப்பு இல்லையா? இப்பொழுது நேரத்தின் அழைப்பு விசேஷ மகான் ஆத்மாக்கள் உங்களுக்காக! பரிஷ்தா என்றால் ஆன்மீக வாழ்க்கையின் சொரூபம் (பிரபாவம்) தென்பட வேண்டும் என்பதே! அவ்வாறு நடக்க முடியுமா? டீச்சர்கள் நடக்க முடியுமா என்று கூறுங்கள். எப்பொழுது நடக்கும்? முடியும் என்பதோ மிக நல்ல விஷயம் தான் இல்லையா? எப்பொழுது முடியும்? ஒரு வருடம் வேண்டுமா? 2000-ம் ஆண்டு முடிவடைய வேண்டுமா? கொஞ்சம் காலம் வேண்டும் என்று யாராவது நினைக்கிறீர்களா? ஒரு வருடம் இல்லை என்றால், 6 மாதம், 6 மாதம் இல்லை என்றால் 3 மாதம் வேண்டுமா? இதில் கையை உயர்த்தவில்லை. உங்களுடைய சுலோகன் என்ன, நினைவிருக்கிறதா? இப்பொழுது இல்லை எனில், எப்போதும் இல்லை இந்த சுலோகன் யாருடையது? பிராமணர்களுடையதா அல்லது தேவதை களினுடையதா? பிராமணர்களினுடையது தான் இல்லையா? எனவே இந்த புது வருடத்தில் என்ன நடந்தாலும் சரி, ஆனால் ஆன்மீக நிலை சென்று விடக் கூடாது என்ற இதைத் தான் பாப்தாதா பார்க்க விரும்புகிறார். இதற்காக நான்கு வார்த்தைகளின் மீது மட்டும் கவனம் வைக்க வேண்டும். அது என்ன? அது புதிய விஷயம் இல்லை, பழையது தான். அதை மீண்டும் ஞாபகப்படுத்துகிறோம்.

ஒன்று நற்சிந்தனையாளர். இரண்டாவது நற்சிந்தனை, மூன்றாவது சுபபாவனை, இவர் மாறினார் என்றால் நான் மாறுவேன் என்ற இந்த பாவனை இல்லை. அவருக்காகவும் சுபபாவனை. தனக்காகவும் சுபபாவனையுடன் இருப்பது. மேலும் நான்காவது, நல்ல சிரேஷ்ட நினைவு மற்றும் சொரூபம்: ஒரே ஒரு 'சுபம்' என்ற வார்த்தையை மட்டும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். இதில் நான்கு

விஷயங்களும் வந்து விடும். நான் அனைத்திலும் சுபம் என்ற வார்த்தையை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பது மட்டும் தான். இதையோ பல தடவைகள் கேட்டிருக்கிறீர்கள். மற்றவர்களுக்கும் பல தடவை கூறியிருக்கிறீர்கள். இப்பொழுது அதை சொரூபத்தில் கொண்டு வருவதற்கான கவனம் வைக்க வேண்டும். இவர்கள் தான் ஆக வேண்டும் என்பதை பாப்தாதா தெரிந்திருக்கிறார். மேலும் இனிமேல் வரக்கூடியவர்கள் சாகார ரூபத்திலோ (நடைமுறையில்) உங்களைத் தானே பார்ப்பார்கள்.

இன்று வருடத்தின் இறுதி நாள் இல்லையா? எனவே பெரும்பான்மையான குழந்தைகளின் வருடாந்திர கணக்கை பாப்தாதா பார்த்தார். என்ன பார்த்திருந்திருப்பார்? முக்கியமாக ஒரு காரணம் பார்த்தார். அழிப்பது மற்றும் உள்ளடக்கும் சக்தி குறைவாக இருக்கிறது என்று பாப்தாதா பார்த்தார். அழிக்கவும் செய்கிறார்கள். தவறாகப் பார்ப்பது, கேட்பது, நினைப்பது, கடந்த காலத்தில் நடந்ததை அழிக்கிறார்கள் ஆனால் எப்படி நீங்கள் கூறுகிறீர்கள் இல்லையா, ஒன்று உணர்வு, இன்னொன்று உள்ளுணர்வு அழிக்கிறார்கள் ஆனால் மனதின் தட்டு என்று கூறினாலும் சிலேட் என்று கூறினாலும், காகிதம் என்று கூறினாலும், என்ன கூறினாலும் முழுமையாக அழிப்பதில்லை. ஏன் அழிக்க முடிவதில்லை? அதற்கான காரணம் உள்ளடக்கும் சக்தி, ஆற்றல் மிக்கதாக இல்லை. நேரத்தின் அனுசாரம் உள்ளடக்கியும் விடுகிறார்கள் ஆனால் பிறகு அந்த நேரத்தில் வெளியாகி விடுகிறது. எனவே நான்கு வார்த்தைகளாக என்ன பாப்தாதா கூறினாரோ அது எப்பொழுதும் இருப்பதில்லை. ஒருவேளை உதாரணமாக மனம் என்ற சிலேட் அல்லது காகிதத்தில் முழுமையாக அழிக்க வில்லை என்றால் அதன் மேல் அதற்கு பதிலாக வேறு ஏதாவது நல்ல விஷயம் எழுத விரும்பினாலும் அது தெளிவாக இருக்குமா? அதாவது அனைத்து குணங்களையும், அனைத்து சக்திகளையும் தாரணை செய்ய விரும்புகிறீர்கள் என்றால் நிரந்தரமாக மற்றும் முழு சதவிகிதத்தில் இருக்குமா? முற்றிலும் சுத்தமாகவும் இருக்க வேண்டும். தெளிவாகவும் இருக்க வேண்டும். அப்பொழுது தான் இந்த சக்திகளை சுலபமாக காரியத்தில் ஈடுபடுத்த முடியும். இது தான் காரணம். பெரும்பான்மையோரின் சிலேட் சுத்தமாகவும் தெளிவாகவும் இல்லை. கொஞ்சம் கொஞ்சமாவது கடந்த காலத்து விஷயங்கள் அல்லது கடந்த

காலத்து நடத்தை, வீணான விஷயங்கள் அல்லது வீணாக நடந்து கொண்டது. சூட்சும ரூபத்திலும் உள்ளடங்கி இருக்கிறது என்றால், பிறகு அது அந்த நேரத்தில் வெளிப்படையான ரூபத்தில் வந்து விடுகிறது. எனவே நேரத்திற்குத் தகுந்தாற்போல் முதலில் உங்களை சோதனை செய்யுங்கள். தன்னை சோதனை செய்யுங்கள். மற்றவர்களை சோதனை செய்வதில் ஈடுபட்டு விடாதீர்கள். ஏனென்றால், மற்றவர்களை சோதனை செய்வது சுலபமாக இருக்கும், தன்னை சோதனை செய்வது கடினமாக இருக்கும். எனவே எனது மனம் என்ற சிலேட் வீணானவற்றிலிருந்து மற்றும் கடந்த காலத்து விஷயங்களிலிருந்து முற்றிலும் சுத்தமாக இருக்கிறதா என்று சோதனை செய்யுங்கள். மிக சூட்சும ரூபமாக இருக்கிறது. வைப்ரேஷனின் (எண்ண அலைகளின்) ரூபத்தில் இருந்து விடுகிறது. பரிஷ்தா என்றால் முற்றிலும் சுத்தமான மற்றும் தெளிவான நிலை. உள்ளடக்கும் சக்தி மூலம் எதிர்மறையையும் நேர்மறை ரூபத்தில் மாற்றம் செய்து உள்ளடக்குங்கள். எதிர்மறையை அப்படியே உள்ளடக்கி விடாதீர்கள். அதை நேர்மறையில் மாற்றம் செய்து உள்ளடக்குங்கள். அப்பொழுது தான் புது வருடத்தில் புதுமை வரும்.

இன்னொரு விஷயம் என்ன பார்த்தோம் என்று கூறலாமா? கூறலாமா அல்லது கஷ்டமாக இருக்குமா? எப்படியாவது ஏதாவது செய்து நான் என்னுடன் பரந்தாமத்திற்கு அழைத்துச் செல்லத் தான் வேண்டும், அடித்தாவது அல்லது அன்புடனோ அழைத்துச் செல்லத் தான் வேண்டும் என்று ஏற்கனவே பாப்தாதா கூறியிருக்கிறார். அஞ்ஞானிகளை அடித்து மற்றும் குழந்தைகள் உங்களை அன்புடன் அழைத்துச் செல்வோம். அதே போலவே பாப்தாதா இப்பொழுதும் கூறுகிறார் எப்படி யாவது, என்ன செய்தாவது, உலகின் எதிரில் மகான் ஆத்மாக்களை பரிஷ்தா ரூபத்தில் பிரத்யக்ஷம் (வெளிப்படுத்தத்) செய்யத் தான் வேண்டும். தயாராக இருக்கிறீர்கள் தான் இல்லையா? எப்படியாவது உருவாக்கத்தான் வேண்டும் என்று பாப்தாதா கூறியிருக்கிறார் இல்லையா? இல்லை என்றால் புது உலகம் எப்படி வரும்? நல்லது.

வருடத்தின் இறுதி நாள் இல்லையா? பாருங்கள், பாப்தாதா பெரும்பான்மையோர் என்ற வார்த்தையைக் கூறுகிறார், அனைவரும்

என்று கூறவில்லை, பெரும்பான்மை யோர் என்று கூறுகிறார். இன்னொரு விஷயம் என்ன பார்த்தோம்? ஏனென்றால் காரணத்தை நிவாரணம் செய்தீர்கள் என்றால் தான் புது படைப்பு ஏற்படும். அப்படி இன்னொரு காரணம் - அலட்சியப் போக்கை வித விதமான ரூபத்தில் பார்த்தோம். சிலரிடம் மிக ராயல் ரூபத்தின் அலட்சியத்தையும் பார்த்தோம். இந்த அலட்சியப் போக்கிற்கான காரணம் ஒரு வார்த்தை. இதெல்லாம் இருக்கத் தான் செய்யும். ஏனென்றால் ஸ்தூலமாகவோ ஒவ்வொருவரும் செய்யும் அனைத்து செயல்களையும் யாரும் பார்க்க முடியாது, சாகார பிரம்மாபாபாவும் சாகாரத்தில் அதாவது நேரெதிரில் பார்க்க முடியாது ஆனால் இப்பொழுது அவ்யக்த ரூபத்தில் இருக்கும் அவர் ஒருவேளை அவர் விரும்பினார் என்றால், யாருடைய ஒவ்வொரு செயலையும் பார்க்க முடியும். பரமாத்மாவிற்கு ஆயிரம் கண்கள் இருக்கின்றன, லட்சக்கணக்கான கண்கள் இருக்கின்றன, லட்சக்கணக்கான காதுகள் இருக்கின்றன என்ற வர்ணனை உள்ளது. இப்பொழுது உடலற்ற தந்தையும் அவ்யக்த பிரம்மாபாபா இருவரும் இணைந்து பார்க்க முடியும். ஒருவர் எவ்வளவு தான் மறைத்தாலும் இராயலாக, சாதாரணமாக அல்ல, மறைக்கவும் செய்கிறார்கள். அப்படி அலட்சியத்தன்மை ஒன்று வெளிப் படையான ரூபமுடையது மற்றும் இன்னொன்று நுண்ணிய ரூபமுடையது ஆனால் இரண்டுக்குமே ஒரே மாதிரியான வார்த்தைகளைத் தான் பயப்படுத்துகிறார்கள். இதெல்லாம் இருக்கத் தான் செய்யும், (எவ்வளவோ) பார்த்து விட்டோம், என்ன நடக்கும்! ஒன்றும் நடப்பதில்லை. இப்பொழுதோ செய்து விடுவோம், பிறகு பார்த்துக் கொள்ளலாம். இது அலட்சியமான எண்ணம். விரும்பினார் என்றால் பாப்தாதா அனைவர் கூறுவதையும் கேட்க முடியும் ஆனால் நீங்கள் கூறுகிறீர்கள் இல்லையா? கொஞ்சம் மரியாதையைக் காப்பாற்றுங்கள் என்று. எனவே பாப்தாதாவும் அவருடைய மரியாதையைக் காப்பாற்றிக் கொள்கிறார் ஆனால் இந்த அலட்சியப் போக்கு முயற்சி செய்வதைத் தீவிரமாக ஆக்க முடியாது. மதிப்புடன் தேர்ச்சி அடைபவர்களாக ஆக்காது. எப்படி இதெல்லாம் நடக்கத் தான் செய்யும் என்று நினைக்கிறார்கள் இல்லையா? அப்படி ரிசல்ட்டிலும் நடந்து விடும் ஆனால் அவர்களால் உயரே பறக்க முடியாது. இரண்டு விஷயங்கள் என்ன பார்த்தோம் என்று கேட்டீர்களா? மாற்றம் செய்வதில் ஏதாவது ரூபத்தில் ஒவ்வொருவரிடமும் வேறு வேறு ரூபத்தில் அலட்சியத்தன்மை இருக்கிறது. இதை ஏன் இன்று

கூறுகிறோம்? ஏனென்றால் நீங்கள் விரும்பினாலும் அல்லது விரும்பாவிட்டாலும் வலுக்கட்டாயமாக உங்களை (பாபா சமமாக) ஆக்கத் தான் வேண்டும். மேலும் நீங்களும் ஆகத் தான் வேண்டும். இன்று கொஞ்சம் கடுமையாக கூறி விட்டோம். ஏனென்றால் இதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்று நீங்கள் திட்டமிடுகிறீர்கள் இல்லையா! ஆனால் காரணத்திற்கான நிவாரணம் ஏற்படவில்லை என்றால், தற்காலிகமாக நடக்கும். பின்பு ஏதாவது விஷயம் வந்தது என்றால் விஷயமே அப்படி இருந்தது, அதனால் தான்.... என்று கூறுவீர்கள். என்னுடைய கணக்கு வழக்கே அப்படி இருந்தது என்றும் கூறுவார்கள். எனவே கண்டிப்பாக ஆகித் தான் ஆக வேண்டும். சம்மதம் தான் இல்லையா? டீச்சர்கள் சம்மதமா?, வெளிநாட்டினர் சம்மதமா? கண்டிப்பாக ஆகத்தான் வேண்டும் என்று பாப்தாதா கூறுகிறார். பிறகு புது வருடத்தில் ஆகி விட்டோம் என்று கூறுவீர்கள். அந்த மாதிரி தான் இல்லையா? மிகக் குறைந்த காலம் எடுக்க வேண்டும் ஆனால் பாப்தாதாவோ ஒரு வருடம் கொடுக்கிறார். பின்போ சுலபம் தான் இல்லையா? மிக சௌகரியமாக (ஆராம் சே) செய்யுங்கள். ஆராம் என்பதின் அர்த்தம் ஆ, ராம் | அதாவது தந்தையை நினைவு செய்து பிறகு செய்யுங்கள். அந்த டன்லப் மெத்தையின் ஓய்வை (ஆராம்) செய்யாதீர்கள். பாப்தாதாவிற்கு உங்கள் மேல் அதிக அன்பு இருக்கிறதா அல்லது உங்களுக்கு தந்தை மீது அதிக அன்பு இருக்கிறதா? யாருக்கு இருக்கிறது தந்தைக்கா அல்லது உங்களுக்கா? நீங்கள் அனைத்து குழந்தைகளும் அன்பின் நன்றிக் கடனாக அவ்யக்த பிரம்மாபாபாவிற்குச் சமமாக அவசியம் ஆவோம் என்ற இந்த விஷயத்தில் பாப்தாதாவிற்கு உங்கள் அனைவர் மீது நிச்சயம் இருக்கிறது. ஆவீர்கள் தான் இல்லையா? பாப்தாதா விட மாட்டார். அன்பு இருக்கிறது இல்லையா? யார் மேல் அன்பு இருக்கிறதோ அவரை அப்படியே தனியாக விட முடியாது. பிரம்மாபாபாவிற்கு உங்கள் மீது மிகுந்த அன்பு இருக்கிறது. என்னுடைய குழந்தைகள் எப்பொழுது வருவார்கள் என்று காத்துக் கொண்டே இருக்கிறார். எனவே சமமாகவோ ஆவீர்கள் தான் இல்லையா?

பிரம்மாபாபாவின் ஒரு (ஆன்மீக) உரையாடலைக் கூறுகிறோம். இப்பொழுது 18-ஜனவரி வரப்போகிறது இல்லையா? எனவே பிரம்மாபாபா சிவபாபாவிடம் நீங்கள் குழந்தைகளிடம் தேதியை

நிச்சயம் செய்து வாங்குங்கள். நான் எதுவரை காத்துக் கொண்டிருப்பது என்று கூறுகிறார். இந்த தேதியை நிச்சயம் செய்யச் சொல்லுங்கள். அப்பொழுது சிவபாபா என்ன கூறுவார்? புன்முறுவலிட்டுக் கொள்கிறார். இருந்தாலும் குழந்தைகளே அந்த தேதியை நிர்ணயம் செய்யட்டும் என்று பாப்தாதா கூறுகிறார். அதை பாப்தாதா செய்ய மாட்டார். அந்த மாதிரி பிரம்மாபாபா மிகவும் நினைவு செய்கிறார். அப்படியானால் அந்த தேதியை நிர்ணயம் செய்வீர்களா? புது வருடத்தில் சமமாக ஆவதற்கான உறுதியான எண்ணத்தை வையுங்கள். நான் பரிஷ்தாவாக கண்டிப்பாக ஆகத் தான் வேண்டும் என்ற லட்சியத்தை வையுங்கள். இப்பொழுது பழைய விஷயங்களுக்கு முடிவு கட்டுங்கள். தன்னுடைய அனாதி மற்றும் ஆதி சம்ஸ்காரங்களை வெளிக்கொணருங்கள். போனாலும் வந்தாலும் காரியங்கள் செய்து கொண்டே நான் தந்தைக்குச் சமமான பரிஷ்தா, எனக்கு பழைய சம்ஸ்காரங்களுடன், பழைய விஷயங்களுடன் எந்த ரிஷ்தா அதாவது உறவும் இல்லை என்பதை நினைவில் வையுங்கள். புரிந்ததா? இந்த பரிவர்த்தனையின் எண்ணத்திற்கு தண்ணீர் விட்டுக் கொண்டே இருங்கள். எப்படி விதைக்கு தண்ணீரும் வேண்டும். வெயிலும் வேண்டும். அப்பொழுது தான் அது வளர்ந்து பழம் கொடுக்கும். அப்படி இந்த எண்ணத்திற்கு, விதைக்கு நினைவின் தண்ணீர் மற்றும் வெயிலைக் கொடுத்துக் கொண்டே இருங்கள். பாப்தாதாவிற்கு நான் என்ன உறுதிமொழி கொடுத்தேன் என்பதை அடிக்கடி நினைவில் கொண்டு வாருங்கள். நல்லது.

நாலா புறமும் உள்ள மகான் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் பரிவர்த்தனை சக்தியை ஒவ்வொரு நேரமும் காரியத்தில் ஈடுபடுத்தும், உலக மாற்றம் செய்யும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் திட நிச்சயத்துடன் பிரத்யக்ஷ சொரூபம் காண்பிக்கக்கூடிய, பிராமண நிலையிலிருந்து பரிஷ்தாவாக ஆகும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்றிருக்கும், தந்தைக்குச் சமமாக ஆகக்கூடிய பாப்தாதாவின் அன்பிற்கு பிரதிபலன் கொடுக்கக்கூடிய மகாவீர் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

இரவு **12-**மணிக்கு பிறகு பாப்தாதா எல்லாக் குழந்தைகளுக்கும் புத்தாண்டு, புதிய நூற்றாண்டிற்கான வாழ்த்துக்களை அளித்தார்!

அனைவரும் புத்தாண்டைக் கொண்டாடினீர்கள். நாலா புறமும் உள்ள குழந்தைகளுக்கு புதிய ஆண்டு, புதிய யுகம், புதிய வாழ்க்கைக்கான வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! இந்த புத்தாண்டில், பிரம்மாதந்தை மூலம் கூறப்பட்ட மகா வாக்கியங்களை எப்போதும் நினைவில் வையுங்கள் -நிராகாரி, நிர்அகங்காரி கூடவே புதிய படைப்பாளர்! சதா படைப்பு மற்றும் பணிவின் கடமையை சமநிலையில் வைத்துக் கொண்டு எப்போதும் பறந்து கொண்டே இருங்கள். இந்த வருடத்தில் விசேஷமாக சுய மாற்றத்தின் விசேஷத்தை முன்னால் வைத்தபடியே பறந்து கொண்டு, பறக்க வைத்துக் கொண்டே இருங்கள். ஒவ்வொரு அடியிலும் எப்போதும் பிரம்மாவைதந்தையைப் பின்பற்றுங்கள். எனவே வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! கோடி மடங்கு வாழ்த்துக்கள்!

**வரதானம் -தன்னுடைய நடத்தை மற்றும் முகத்தின் மூலமாக பாக்கிய ரேகையைக் காண்பிக்கும் சிரேஷ்ட பாக்கியவான் ஆகுக!**

பிராமண குழந்தைகள் உங்களுக்கு நேரடியாக அனாதி தந்தை (சிவபாபா) மற்றும் ஆதி தந்தை (பிரம்மாபாபா) மூலமாக இந்த ஆன்மீக ஜென்மம் கிடைத்திருக்கிறது. யாருடைய ஜென்மமே பாக்கியத்தை உருவாக்குபவர் மூலமாக ஆனது என்றால், அவர் எவ்வளவு பாக்கியவனாக ஆனார். தன்னுடைய இந்த சிரேஷ்ட பாக்கியத்தை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொண்டே மகிழ்ச்சியாக இருங்கள். நடத்தை மற்றும் முகத்தில் இந்த நினைவு சொரூபம் பிரத்யக்ஷ ரூபத்தில் தனக்கும் அனுபவம் ஆகட்டும், மற்றவர்களுக்கும் தென்படட்டும். உங்களுடைய நெற்றியின் நடுவே இந்த பாக்கியத்தின் ரேகை மின்னிக் கொண்டிருப்பதாகத் தென்படட்டும். அப்பொழுது தான் சிரேஷ்ட பாக்கியவான் ஆத்மா என்று கூறுவோம்.

**சுலோகன் -யார் உள்நோக்குமுகமாகி லைட் (ஞானம்) மைட் (சக்தி) ரூபத்தை அனுபவம் செய்கிறாரோ அவர் தான் யோக சொரூப ஆத்மா!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂
☂☂☂☂☂☂☂